*...proved by the Text Book Committee for ...*

உ

# CO-OPERATION IN INDIA.

15 APR 193

## இந்தியாவின்
## கூட்டுமுயற்சி.

1914-ம் வருஷத்திய
இந்திய துரைத்தனத்தாரின் தீர்மானம்.

284

PRINTED AND PUBLISHED BY
THE SECRETARY,
TANJORE CO-OPERATIVE PRINTING AND PUBLISHING SOCIETY LTD.,
TANJORE.

XM.2
N131

உ

# CO-OPERATION IN INDIA

# இந்தியாவின் கூட்டுமுயற்சி

## 1914-ம் வருஷத்திய
## இந்தியர் துரைத்தனத்தாரின் தீர்மானம்.

துரைத்தனத்தாரின் அநுமதியின்படி
தஞ்சாவூர் ஆனரரி அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்தராரும்
வக்கீலுமாகிய

**O. A.** நாராயணஸ்வாமி அய்யர் B.A., B.L.,
அவர் தகப்பனார்
உ. நா. அப்பாஸ்வாமி அய்யர்
இவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு,

தஞ்சாவூர் வக்கீலும்
கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவருமாகிய
த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் B.A., B.L.,
முன்னுரையுடன்

[இரண்டாம் பதிப்பு.]

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

1931

*Copy Right to the Translation Reserved.*

விலை அணா 8.

15 APR 1931

PRINTED AND PUBLISHED BY
THE
CO-OPERATIVE PRINTING AND PUBLISHING SOCIETY LIMITED,
KARUNTATTAMKUDI, TANJORE.

917
334

## இந்தியாவின் கூட்டு முயற்சி.

(1914-ம் வருஷத்திய இந்தியா துரைத்தனத்தார் தீர்மானம்).

"கூட்டு முயற்சி ஏற்பாட்டை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து, பூர்த்தியாக அதைப் ப்பயன்படச்செய்தால், இந்த நாட்டின் விவஸாய க்ஷேமத்திற்கு கீர்த்திகரமான மகத்தான வருங்காலம் கிடைக்குமென்று எனக்கு முன் நோக்காகவே தெரிகிறது." 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 13-ம் தேதியில் மாட்சிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்தியவர்கள் செய்தபிரசங்கம்.

உ

# மஹா மஹோபாத்யாயர் அவர்களின் அநுக்கிரகம்.

ஆங்கில நாட்டாருடைய பழக்கத்தால் இந்தியர்கள் அடைந்து வரும் நன்மைகள்பல. அவற்றுள் கூட்டுறவு நாணயச்சங்கமென்பது ஒன்றாகும். இது விஷயமாக 1914-ஆம் வருஷத்தில் இந்தியா கவர்மெண்டார் ஸிம்லாவில் ஒரு தீர்மானம் செய்தார்கள். ஷை தீர்மானம் ஆங்கிலத்தில் இருப்பதால் அப்பாஷை தெரியாத தமிழ் மக்களுக்கு உபயோகமாகும் பொருட்டுத் தஞ்சை மகா-ா-ா-ஸ்ரீ உ. நா. அப்பாசாமி அய்யரவர்களும் அவர்களுடைய குமாரரான வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ உ. அ. நாராயணசாமி ஐயரவர்களும் சேர்ந்து அதனைத் தமிழில் மொழிபெயர்த்து ஒரு சிறு புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். அதனைப்படித்துப் பார்த்தால் கூட்டுறவு முயற்சியானது சில வருஷங்களுக்குள்ளாக மிகவும் விருத்தியடைந்துள்ளதென்பதும் இன்ன இன்ன முறையாக ஐக்கியநாணய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பெற்றனவென்பதும் இந்த ஸ்தாபனங்களால் விவஸாயம், பொருளாதாரம், கல்வி, கைத்தொழில், வைத்தியம் முதலியன விசேஷமாக விருத்தியாகுமென்பதும், ஐக்கியமே வன்மையையுடையதென்பதும் நன்கு விளங்கும்.

இப் புஸ்தகம் எழுதப்பெற்ற நோக்கம் நன்கு நிறைவேறும்படி செய்வித்தருளும் வண்ணம் ஸ்ரீ ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையர்.

# முகவுரை.

கூட்டுறவு முயற்சிகளால் நாட்டிற்கு விளையும் நலன்கள் எண்ணிறந்தன. ஜர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளில் இவை நிலைத்த பயன்கள் அளிப்பதை நன்குணர்ந்து, கூட்டுறவு முறைகளை இந்தியர்களும் கையாளுமாறு நமது அரசியலார் உதவியது நாம் பாராட்டத்தக்க நன்மையாகும். கூட்டுறவு முயற்சியை இந்தியாவில் நிலை நிறுத்தவும், பல திறப்பட்ட துறைகளில் அது படர்ந்து வளரவும், ஏதுவான சட்டதிட்டங்களையும், நிர்வாக அமைப்புக்களையும், பணவுதவிகளையும், அரசியலார் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகக் கொடுத்துத் துணைபுரிகிறார்கள். பொதுநலத்தில் கருத்துடைய அறிவாளிகளின் உலவாத உழைப்பினாலும், அரசியலாரின் இடையறா முயற்சியாலும் இற்றை நாளில் கோடிக்கணக்கான முதலும், இலட்சக்கணக்கான உறுப்பினரும் பல்லாயிரக்கணக்கான சங்கங்களும் கூட்டுறவுத் துறையில் தலைப்பட்டு நாட்டிற்கு நலம் புரிகின்றன. இச்சங்கங்களை வகைப்படுத்தினால், பெரும்பாலானநாணயச் சங்கங்கள்; பொருளை ஆக்குஞ் சங்கங்களும், பகுக்குஞ் சங்கங்களும் சிறுபாலன; சங்கங்களின் வேலைகள் நேரான முறையில் நடைபெறுகின்றனவாவெனக் கண்காணிக்குஞ் சங்கங்களும் உள்ளன. கூட்டுறவு இயக்கந்தோன்றிய சிலகாலத்திற்குள் இம்முயற்சி இத்துணை பலம்பெற்றது, நாம் மகிழத்தக்கதொன்றெனினும், நாட்டின் பரப்பையும், நம்மவரின் தொகை, வறுமை ஆதியவற்றையும் அயல் நாட்டினரின் முற்போக்கையும் ஒப்புநோக்குமிடத்து, கூட்டுறவின் புறவெல்லையைக்கூட நாம் அணுகவில்லையே என மலைக்கவேண்டியிருக்கிறது. கடன் என்னும் படுகுழியினின்றும் நாம் விடுதலை பெறுதற்கு நாணயச்சங்கங்கள் தேவை யென்பதில் சிறிதும் ஐயமில்லை. 'போகாறு அகலாமையும்' சிக்கன வாழ்க்கையும், சேமிக்குந் தன்மையும் நம்மவர் கைக்கொண்டாலன்றி

நாணயச்சங்கங்கள் எவ்வித நற்பயனையும் விளைக்கமாட்டா வென்பது ஒரு தலை. நாணயச்சங்கங்களின் நடை முறைகளை உட்புகுந்து பார்ப்பவர்கள் காணும் ஊழல்களுக்கு அளவில்லை; உறுப்பினர் வாங்கும் கடன் தொகைகளைத் தகாத வழிகளில் செலவிடுதலும், தவணைப்படி திருப்பிக் கொடாதிருத்தலும் அவற்றுள் முதன்மையானவை; பஞ்சாயத்தார், அமைச்சர், தலைவர் ஆகிய பொறுப்பாளிகள் புரியும் தீமைகளோ ஒன்றல்ல; மனத்தூய்மையும், மன விலாசமும், அறிவு விளக்கமும், பொதுநல ஊழியத்தில் உண்மையான ஆர்வமும் மிக்குடைய பலர் இத்துறையில் இறங்கிப் பொறுப்புள்ள வேலைகளை மேற்கொண்டாலன்றிக்கூட்டுறவு முயற்சிகள் செழுமையுறமாட்டா.

நமது நாட்டில் இயற்கையாயுள்ள நீர், நிலம், மலை, காடு, கனி, கடல் ஆகிய வளங்களனைத்தையும் அயல் நாட்டினர் கூட்டு முயற்சியான 'கம்பேனி'கள் கொள்ளைகொள்ளுவதைத் தினமும் காண்கிறோம். கூட்டுறவு முயற்சியால் இவ்வளமனைத்தையும் நமக்கே உரியனவாக்கலாமென அறிந்துமிருக்கின்றோம். இங்ஙனம் கண்டும், அறிந்தும் தெளிந்தவற்றால் நாம் எய்தும் பயன் யாதேனும் உண்டோ? 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை' 'என்ற பெரியாரின் பொய்யாமொழியைச் சிறிது சிந்தித்தால் ஒற்றுமையின்மையும், முயற்சியின்மையுமே நமது வறுமையின் காரணமென்பது விசிதமன்றோ? தேசியம் என்றும் தேசபக்தி யென்றும் தேசபக்தர் என்றும் பேசித்திரியாத அறிவாளி எவரேனும் உளரோ? வளங்கள் பலவும் நம்மிடையே இருந்தும், அவ்வளமனைத்தையும் நம் கண்ணெதிரே பிறர் கொள்ளவும் நாம் வறுமையில் ஆழ்ந்த தேசியம்பேசும் அறிவுதான் என்னை! பொருளாக்குஞ் சங்கங்கள் மிகப் பலவற்றை நமது நாடெங்கும் நாட்டுவதில் நம்மவர்கள் மிகவும் விழிப்புடையராதல் மிகவும் வேண்டற்பாலது. அரசியலாரே இக்கருமத்தை இயற்றித்தருங் கடப்பாடுடையார் என்பதனை அவர்கள் நன்குணர்ந்து இம்முயற்சிகள் நமது நாட்டில் தலையெடுத்து வளம்பெற வளர்தற்குரிய வழிகளை நாடி ஏற்ற சாதனங்களை விரைவில் அமைத்துத்தரல்வேண்டும். இதனேடமையாது இத்துறையில் முயல

முற்படுபவோர்களுக்குப்போதிய ஆதரவுகளைப் புரிந்து அவர்களை மென்மேலும் அரசியலார் ஊக்குதல்வேண்டும். இத்தகைய உதவிகளை அரசியலார் புரியாது வாளா இருப்பின், கூட்டுறவுத் துறையில் உழைக்கும் தலைவர்களும் பிறரும் அறைகூவி எழுப்பி அரசியலாரைத் தூண்டுதல் செய்யவேண்டும்.

கூட்டுறவு இயக்கமானது அயல் நாடுகளில் அளப்பிலா நலங்களை நல்கவும் நமது நாட்டில் இக் கூறிய குறைபாடுகளுக் குள்ளாயிருப்பதன் காரணம், கூட்டுறவின் உண்மையியல் யாதென நம்மவர் நன்குணராமையேயாகும். கூட்டுறவு பற்றிய நூல்கள் ஆதிய வெளியீடுகளனைத்தும் இதுகாறும் ஆங்கிலத்திலேயே வெளிவந்திருக்கின்றன. இவ்வாங்கில வெளியீடுகள் அனைவருங் கற்றுப்பயன் பெறுதற்குரிய கருவியாகாமையினால் கூட்டுறவின் இயலைப் பலருந் தெரிந்து கொள்ளுதற்கில்லை. கூட்டுறவு முறைகளை நாட்டினர் எளிதில் கற்றுப் பயிலுதற்குரிய கருவி நூல்களை இயற்றித்தரும் பொறுப்பினைப் போதிய அளவு அரசியலார் மேற்கொள்ளவில்லை. கூட்டுறவு பற்றிய விதிகளைமட்டும் "எம்மிங்வே மானுவல்" எனத்தொகுத்து நாட்டுமொழிகளில் வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. இது மிகச் சிறு தொடக்கமான வேலையென்றாலும் கூட்டுறவு நூல்கள் நாட்டுமொழிகளில் வெளியாக வேண்டுமெனும் இன்றியமைப்பின்மையை அரசியலார் உணர்ந்தனர் என்பது போதரும். கூட்டுறவு முறைகளின் உண்மை இயலையும் கூட்டுறவுத் துறைகளில் நம்மவர் மேற்கொள்ளவேண்டிய கருமங்களையும், இன்ன பிறவற்றையும் நமது நாட்டினர் நன்குபயிலும் வண்ணம் மிகப்பலவாகக் கூட்டுறவு நூற்களை நாட்டு மொழிகளில் இயற்றச்செய்து அரசியலார் வெளியிடுதல் வேண்டும்.

இவ்வரிய தொண்டினை எனது நண்பர்கள் திருவாளர் உ. நா. அப்பாசாமி ஐயர் அவர்களும் அன்னவர் மகனார் உ. அ. நாராயணசாமி ஐயர் B.A.,B.L. அவர்களும் மேற்கொண்டது நாமனைவரும் புகழத்தக்க நற்கருமமாகும். அரசியலார் கூட்டுறவு வாலாற்றினை ஆராய்ந்து 17—6—14-ல் ஆங்கிலத்தில் வெளியிட்ட

முடிபுகளை எளிய தமிழில் மொழிபெயர்த்து ஈண்டு வெளியிடத் துணிந்த சிறு நூல் கூட்டுறவுமுறையின் நூலாதாரமெனத்தகும். கூட்டுறவின் உண்மையியலையும், அதன் பயன்களையும், அதன் வளர்ச்சி முதலிய வரலாற்றினையும், இதனை மேற்கொள்வோர் கையாளத்தகும் விதி விலக்குகளையும், இன்னோரன்ன செய்திகளையும் சுருக்கமாகவும், விளக்கமாகவும் இந்நூல் கூறுகின்றது. கூட்டுறவுத் துறையில் வேலை செய்பவரும், தொடக்கப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களும் நாட்டின் நலங்கருதும் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இதனைக் கற்றுத் தெளிய வேண்டியது இன்றியமையாதது. இத்தகைய நூல்கள் பலவற்றைத் தமிழில் எழுதித் தமிழ் மொழியையும் தமிழ் நாட்டையும் வளம்பெறச் செய்தற்குரிய ஊக்கத்தினை இந்நூலாசிரியர் மேற்கொள்ளுமாறு இவ் வெளியீட்டினைத் தமிழ் மக்கள் போற்றுவாராக.

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,

1—10—1929.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | பீடிகை. ... ... | |
| 2. | கடன் கொடுப்பதிலும் வேறு வழிகளிலும் கூட்டு முயற்சியின் வேலை ... | 2 |
| 3. | இந்தியாவில் கூட்டுமுயற்சியின் உற்பத்தி 1904-ம் வருஷத்துச் சட்டம் ... | 4 |
| 4. | 1912-ம் வருஷத்துச் சட்டம் ... ... | 6 |
| 5. | அபிவிருத்தியாகும் மாதிரி ... ... | 7 |
| 6. | பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் ... | 10 |
| 7. | கிருஷி அபிவிருத்தி ... ... | 12 |
| 8. | கூட்டு முயற்சியால் கிடைக்கும் பயிற்சிப் பயன் ... | 14 |
| 9. | கூட்டு நாணய முயற்சி முக்கியமாக சிறு முயற்சிக்காரர்களான கிருஷிகர்களுக்கே உரியது ... | 17 |
| 10. | லேவாதேவிக்காரர்களுக்குக் கூட்டு முயற்சியாலுண்டாகும் லாப நஷ்டங்கள் ... | 19 |
| 11. | நியாயமான வட்டிக்குக் கடன் கிடைத்தல் ... | 22 |
| 12. | சபையின் மாதிரி; ரெயிபெயிஸன் முதலியன ... | 23 |
| 13. | ஸபைகள் வேலைசெய்யும் பரப்புகள்... | 25 |
| 14. | கடன் சொரூபங்கள் ... ... | 28 |
| 15. | பங்குகளும் லாபங்களும் ... ... | 29 |
| 16. | ஜாமீனின் சொரூபங்கள் ... ... | 33 |
| 17. | முந்தின கடன்கள் ... ... | 35 |
| 18. | கடன் வாங்குவதின் லெக்ஷ்யங்கள் ... | 37 |
| 19. | துரைத்தனத்தார் சங்கங்களுக்குச் செய்துகொடுக்கக்கூடிய சௌகர்யங்கள் ... | 39 |
| 20. | சங்கங்களின் ஐவேஜுகள் ... ... | 41 |
| 21. | திருப்பிக் கொடுத்தல் ... ... | 43 |
| 22. | ஆபத்தனம் அல்லது மிகுத்துவைக்கும் பொருளான க்ஷேமநிதி (ரிஸர்வ்பண்டு) ... | 44 |
| 23. | மத்திய ஸபைகள் ... ... | 46 |
| 24. | மாகாண பாங்கிகள் ... ... | 52 |

25. வேலைச் சோதனையும் கணக்குச் சோதனையும் ... 54
26. கூட்டு நாணயம் அளிப்பதைவிட வேறுவிதக் கூட்டு முயற்சிகள் ... ... 56
27. கூட்டு முயற்சிக்காரர்களோடு துரைத்தனத் தாருக்கு உள்ள சம்மந்தம் ... 60
28. பொருள் உதவி (பரிபாலனம்) கணக்குச்சோதனை ... 62
29. ஜில்லா உத்தியோகஸ்தர்கள் நடந்துக்கொள்ள வேண்டிய மாதிரி ... 66
30. ஸர்க்கார் உத்தியோகஸ்தராலும் உத்தியோகஸ்த ரல்லாதவராலும் கிடைக்கக் கூடிய உதவி ... 68
31. தொகுப்புரை ... ... 70

இந்தியா துரைத்தனத்தார்

# அரசிறை விவஸாய இலாகா

1914ம்-ஸு ஜூன்-மீ 17ம்-தேதி

ஸிம்லாவிலிருந்து பிறப்பிக்கப்பட்ட

12—287—1 தீர்மானம்.

---

## பீடிகை.

ஸுமார் பத்து வருஷங்களுக்கு முந்தி கூட்டு முயற்சிக் கிளர்ச்சி இந்தியாவிலிருந்ததென்பதைக்காட்டச் சில ஒண்டி சண்டியான சோதனை முயற்சிகளைத்தவிர வேறு அறிகுறிகள் இல்லாதிருந்தன. இன்றைக்கு எப்படி இருக்கிறதென்றால் 6 லெக்ஷம் அங்கத்தினர்களோடு கூடிய 12,000 * சபைகளுக்கு மேல் இருக்கின்றன; ஐந்து கோடிக்கு அதிகமான ரூபாய்கள் அக்கூட்டு முயற்சி சபையாரால் கைவசத்தில் வைத்துக்கொண்டு வரவு செலவு செய்யப்படுகின்றன; ஜனங்களின் லௌகிக க்ஷேமத்தையும் நற்குண அபிவிருத்தியையும் அதிகப்படுத்துகிற விஷயத்தில் ஒரு வல்லமையுள்ள ஸாதனமாக ஐக்கிய முயற்சி ஸ்தாபனம் பெற்றுவிட்டது. ஆகையால் அதிசயிக்கத்தக்க இந்தக் கூட்டுமுயற்சி அபிவிருத்தி எவ்வாறு முன்னேற்றம் பெற்று விட்டது என்பதையும், சென்ற காலத்தில் இந்தக்கிளர்ச்சியை ஒழுங்குபெறச் செய்த நீதிகளையும், வருங்காலத்திலும் இந்த முயற்சியை ஒழுங்குபடுத்தவேண்டிய நீதிகளையும் திரும்பவும் சீர்தூக்கிப்பார்த்து மனதில் அமைத்துக்கொள்ளத்தக்க ஸமயம், இப்போது வந்திருக்கிறதாகத் தோன்றுகிறது.

---

* 30-6-26ல் 80,000-க்கு மேற்பட்டவைகள் 31லக்ஷம் மெம்பர்களுடனும் 57கோடி ரூபாய்க்கு மேற்பட்ட லேவாதேவிகளுடனும் இருக்கின்றன.

இந்தத் தீர்மானத்தில், கூட்டுமுயற்சி அபிவிருத்தி இந்தியாவில் பரவிவரும் வழியைத் தொடர்ந்து பார்ப்பதற்கும், இதைப் புத்திசாலித்தனமாக ஒழுங்குபடுத்தும் பட்சத்தில், செல்வ அபிவிருத்தி, மனிதர் கூட்டுறவுச் சீர்திருத்தம், கல்வி வளர்ச்சி முதலிய இனங்களில் நன்மைகள் உண்டுபண்ணக்கூடியது என்பதை எடுத்துக் காட்டுவதற்கும், நீக்கவேண்டிய அபாயங்களைக் குறித்துக்காட்டுவதற்கும், பலமாதிரியான கூட்டுமுயற்சிச் சபைகளின் முக்கிய அறிகுறிகளை விவரித்துக் கூறுவதற்கும், ராஜ்ய பரிபாலன முறைகளுக்கு சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றி ஸம்வாதிப்பதற்கும், எவ்வளவிற்குத் துரைத்தனத்தாரின் ஒத்தாசை செய்யப்பட்டது என்றும் இனிமேல் எவ்வளவிற்குச் செய்யப்படவேண்டுமென்று நிஷ்கருஷிப்பதற்கும், கடைசியாக எவ்வளவிற்குத் தேசபரிபாலன நித்தியப்படி விவகாரங்களில் ஜில்லா உத்தியோகஸ்தர்கள் இவ்விஷயத்தில் பற்றுவைத்துக் கொண்டு நாட்டின் உயிர்வாழ்க்கையில் புதிதாகிய இந்த அம்சத்தை எப்படி உபயோகித்துக் கொள்வதென்று கவனிப்பதற்கும் ஒரு பிரயத்தனம் செய்யப்படும்.

கடன் வ்யஷயத்தினும் வேறு வழிகளிலும் கூட்டுமுயற்சியின் வேலை.

2. தனி மனிதனாக ஒவ்வொருவனாய் நாணயம் தேடப் பிரயத்தனம் செய்வது அஸாத்தியமென்று கண்ட பலர், அந்தக் காரியத்தை உத்தேசித்து ஒன்றுகூடிப் பிரயத்தனித்தால், ஜயம் பெறுகிறார்கள். பிறர் ஸகாயத்தை நாடாது தனியாக முயற்சி செய்கிறவனுக்குக் கிடைக்காத மிகுந்த ஸௌகரியங்கள் நாணயத்தை உத்தேசித்துக் கூட்டுமுயற்சி செய்கிறவர்களுக்குக் கிடைக்கின்றன; இந்த உண்மை ஐக்கியப் பிரயத்தனங்களிலெல்லாம் இரண்டு பிரத்தியேகமான ஐக்கிய முறைகளால் வெளியாகிறது :—

(1) ஒன்று சேர்ந்து கொடுக்கல் வாங்கல் செய்தல், (2) ஒன்று சேர்ந்து பண்டங்களை வாங்குதல் விற்றல், பொருள்களை

உண்டுபண்ணல்; நஷ்டக்காப்புஜாமீன் ஏற்படுத்திக்கொள்ளுதல், (இன்ஷியூரன்ஸ செய்தல்). ஐக்கியக் கடன் விஷயத்தில் பலர் சேர்ந்துகொண்டு, தனியாகப் பிரயத்தனிப்பதாற் கிடைப்பதை விட இலகுவான வட்டிக்குப்பணம் வாங்கி, பணத்திற்கு ஜாமீனாக நிற்கிறார்கள். விற்றல் வாங்கல், பண்டங்களை விளைவித்தல், நஷ்டக் காப்பு ஜாமீன் ஏற்படுத்திக்கொள்ளுதல் ஆகியபின் சொன்ன விஷயங்களிலும், செட்டும் சிக்கனமும் உண்டாகும் பொருட்டு ஐக்கியம் உண்டாக்கிக் கொள்ளப்படுகிறது. கூட்டுக்கடன் முறை விஷயத்தில் ஐக்கியப் பிரயத்தனம் பெரும்பாலும் ஸுலப மானதாகவும் எளிதில் நிர்வகிக்கத்தக்கதாகவும் இருக்கிறது; அபிவிருத்திக்கு ஏற்ற பிரதம ஸாதனங்களை அது தருகிறது; ஒருவிதத்தில் வேறுவித முயற்சிகளுக்கு அது ஆதாரமாகவும் இருக்கிறது; இது அநுபோகத்திற்கு ஒத்திருப்பது இந்த தேசத்தில் மாத்திரம் அல்ல, மற்றதேசங்களிலும் பிரத்தியட்ச மாகக் காணப்படுகிறது.

ஸாமான்யமான ஒரு கூட்டு நாணய ஸபையை ஏற்படுத்து வதற்கு, சட்டப்பிரகாரம் அவசியமானது யாதெனில், பத்துப் பேர்கள் அல்லது அதற்கு அதிகமானவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் சங்கத்தை அதிகாரிகள் வைத்திருக்கும் பதிவுப் புஸ்த கத்தில் தாகல் செய்துகொள்ளவேண்டியதுதான். ஸபையின் அங்கத்தினர்கள் ஒன்றுசேர்ந்து கொடுக்கும் ஜாமீனின் மேல் நாணயம் பெறுகிறார்கள்; அப்படிக் கிடைத்த பணத்தை, பணம் வேண்டும் என்று விரும்புகிற அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். சங்கத்தார் ஒன்று சேர்ந்து ஜாமீன் கொடுப்ப தினால் சுலப வட்டிக்கு நாணயம் பெறுகிறார்கள்; தனி அங்கத் தினருக்குக் கடன் கொடுக்கும்போது வட்டிவிகிதம் கொஞ்சம் ஜாஸ்தியாக இருந்தபோதிலும், ஊரில் உள்ள வட்டியைப் பார்க்கிலும் நன்றாகத் தெரியும்படி குறைச்சலாகவே இருக்கிறது. விளைபொருள்களை விக்கிரயம் செய்யும்பொருட்டு ஏற்பட்ட ஸபையார் ஸ்தலத்தில் உண்டாகும் விளைபொருள்களையெல்லாம்

சேகரித்து,விற்பனை செய்யக்கூடிய சந்தை முதலிய இடங்களுக்ச்கு சொற்பச்செலவில் கொண்டுபோய்ச் சேர்த்து, நடுவே நிற்கும் தரகர்களிடம் போகாமல் மொத்த வியாபாரிகளிடத்திலேயே நேரில் விற்பனை செய்வதனால் அதிக ஸௌகரியங்களை அடைகிறார்கள். அதே விதமாய், விதைவாங்குவதற்கு ஏற்பட்ட ஸபையார், அங்கத்தினர் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு, மொத்த விலைக்கு விதை வாங்கி, அங்கத்தினர்களுக்கு இலகுவான கிரயத்திற்குப் பங்கிடுகிறார்கள்.

இந்தியாவில் கூட்டு முயற்று உற்பத்தி. 1904ம் வருஷத்தி சட்டம்.

3. ஒரு ஒழுங்குபட்ட ஏற்பாடாகக் கூட்டு நாணய முயற்சி, சென்ற நூற்றாண்டின் மத்தியபாகத்தில் ஜர்மனி தேசத்தில் முதல் முதல் உண்டாயிற்று. இதன் ஆரம்ப முயற்சிகள் மிகவும் ஸாமான்யமானவைகளாக இருந்தன. ரெய்பெய்ஸன், ஷூல்ஸிடெலிச் என்ற இருவர் கூட்டுமுயற்சியால் நாணயம் வழங்கும்படி செய்யத் தனித்தனியாக வெவ்வேறு வழியாக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார்கள். ரெய்பெய்ஸன் என்பவரின் கூட்டு நாணய முயற்சிகள் முக்கியமாய் எளிய குடியானவர்கள் விவஸாயிகள் முதலியோரின் ஸகாயத்திற்காக ஏற்பட்டது ; ஷூல்ஸிடெலிச்சின் நாணய ஏற்பாடு தொழிலாளிகளுக்காகவும் சில்லறை வியாபாரிகளுக்காகவும் ஏற்பட்டது. வெகு காலத்திற்கு இம்முயற்சிகளின் அபிவிருத்தி மெதுவாகவே இருந்தது ; ஆயினும் 1880-ம் வருஷத்திற்கும் 1890-ம் வருஷத்திற்கும் மத்தியில் இந்தக் கிளர்ச்சி நிலைத்த ஸ்தானத்தைப் பெற்றது என்று சொல்லலாம் ; அதுமுதற்கொண்டு கவனிக்கத் தகுந்ததும் தொடர்ச்சியுள்ளதுமான அபிவிருத்தியை அடைந்து வருகின்றது. இதற்கு முந்திக் கூட்டு நாணய முயற்சி மகா பிருட்டானியத் தீவில் சொற்பமாகமட்டும் வேரூன்றி வந்தது ; அப்படி இருந்ததற்குக் காரணங்களை இங்கே எடுத்துரைக்க வேண்டியதில்லை ; அயர்லாந்திலும் ஐரோப்பாவின் முக்கியமான நாடுகளிற் பெரும்பான்மையானவைகளிலும் இக் கூட்டு நாணய

முயற்சி ஸ்தாபிதமாய்விட்ட ஒரு நிலைமையை அடைந்திருக்கிறது. ஜனங்களின் விவஸாய ஜீவனத்திலும் தொழிலின் முயற்சி ஜீவனத்திலும் முக்கியமான ஆதாரங்களில் ஒன்றாக ஏற்பட்டுபோயிற்று. ஸர் வில்லியம் வெட்டர்போர்ன் அவர்களாலும் இன்னும் மற்றப் பிரமுகர்களாலும், விவஸாயிகளுக்கு மூலதனம் அளிக்கும் பொருட்டும், அக்கிரமமான வட்டி விகிதத்தினாலுண்டான கடனாளித் தனத்தினின்றும் ஜனங்களை விடுவிப்பதற்கு மூலதனம் கிடைக்கச் செய்வதற்கும், இந்தியாவில் தனசாலைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்று பற்பல ஸமயங்களில் யோசனைகள் சொல்லப் பட்டன. ஆயினும், விவஸாயிகளின் கடனாளித்தனத்தை நிவர்த்திப்பதாகிய பெருமுயற்சி கைகூடுதற்கு ஸுலபமான வட்டிக்கு நாணயம் கிடைக்கும்படி செய்வதும், நிர்பந்தங்களில்லாமல் நாணயம் கிடைக்கும்படி செய்வதும் மாத்திரம் போதுமானவைகளாக இருக்கவில்லை ; வேறு யுக்திகளும் தேவையாக இருந்தன. கூட்டு நாணய ஏற்பாட்டை இந்த தேசத்தில் பாவச்செய்வதற்கு இருந்த ஸாத்தியங்கள் முந்தியே யோசிக்கப்பட்டிருந்தபோதிலும், 1895-ம் வருஷத்தில்தான் நிஜமான ஆரம்பங்கள் செய்யப்பட்டன. அப்போது, இந்தியன் ஸிவில் ஸர்விஸைச்சேர்ந்த ஸர் ப்ரிடரிக் நிக்கல்ஸன் அவர்கள் இது விஷயத்தைப்பற்றிச் சென்னை துரைத் தனத்தாருக்கு உபயோகமான ஸகலமர்மங்களையும் தன்னிடம் அடக்கிக்கொண்டதான ஒரு அறிக்கைப்பத்திரத்தை ஸமர்ப்பித்து வைத்ததின்மேல், கூட்டு முயற்சிக் கிளர்ச்சி மெய்யாக இந் நாட்டில் ஆரம்பித்தது. மிஸ்டர் நிக்கல்ஸனுடைய அறிக்கைப் பத்திரத்தில் ஐரோப்பிய நாடுகளில் அநுபோகத்திலுள்ள கூட்டு முயற்சிக் கிரமங்கள் விவரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன ; அதுவுமன்றி அந்தக் கூட்டு முயற்ச்சிக் கிரமங்களை எம்மட்டில் இந்தியாவின் நிலைமைகளுக்கு ஏற்றவைகளாகச் செய்யலா மென்றும் வியக்தமாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றது. இந்த நிக்கல்ஸன் அறிக்கைப்பத்திரம் துரைத்தனத்தார் ஆராய்ச்சியில் இருந்து வந்தபோது "வட இந்தியாவின் ஜனதனசாலை"

என்ற ஒரு புத்தகம் மிஸ்டர் ட்யூபர்னே I. C. S. என்கிற, உத்தியோகஸ்தரால் பிரசித்தப்படுத்தப்பட்டது; அதனுடன் மிஸ். டர்ட்யூபர்னே முதலியவர்களால் சில சிறிய பரிக்ஷார்த்த ஸபைகள் இந்தியாவின் பலபாகங்களில் ஏற்படுத்தப்பட்டன; ஆயினும், கம்பெனிகள் சட்டத்தின் சிக்கலான நிபந்தனைகளால் ஒழுங்கு படுத்தப்பட்டவரையில், அதிக அபிவிருத்தியை எதிர்பார்ப்பது அஸாத்தியமாக இருந்தது; ஆதலால் சரியான ஆதாரத்தோடு கூட்டுறவுச் சபைகளை ஸ்தாபிப்பதற்கு அவசியமான காரியங்களை ஆராய்ந்து தெரிவிக்கும்பொருட்டு ஸர் எட்வார்டுலா என்பவருடைய தலைமையின்கீழ் 1901-ம் வருஷத்தில் லார்டு கர்ஸனால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. கூட்டுறவுக் கிரமத்தைப்பற்றிய விஷயங்களில் இங்கிலாந்தில் முக்கிய நிபுணராக இருந்த மிஸ்டர் ஹென்ரிவொல்ப் என்பவருடைய புத்திமதியாகிய பாக்கியம் இந்தக் கம்மிட்டிக்குக் கிடைத்தது. அந்தக் கம்மிட்டியின் சிபார்சின் பயனாக ஸர் டென்ஸில் இப் பெட்ஸன் என்பவரால் ஒரு கூட்டுறவுச் சங்கமசோதா சட்டநிரூபண சபையில் கொண்டு வந்து பிரசுரிக்கப்பட்டது; இந்தமசோதா கொஞ்சகாலத்திற்கு பிறகு 1904-ம் வருஷத்திய 10-வது ஆக்டாகப் பிந்தி அநுபோகத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

4. 1904-ம் வருஷத்திய சட்டத்தின் பிரகாரம் கூட்டு நாணய சபைகளுக்காக வெகு சுலபமான விதிகளும் ஸாதனக் கிரமங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன; அச்சபைகளின் நிலைமை இன்னதுதான் என்பதும் வரையறுக்கப்பட்டிருந்தது.

1912-ம் வருஷத்திய சட்டம்.

கிராமச்சபைகள் என்றும் நகரச்சபைகள் என்றும் சபைகள் இரண்டு தினுசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அங்கத்தினர்களின் கடன், லாப நிதியின் விநியோகம், சபைகளின் வேலைக்கிரமங்கள் முதலியன கம்பெனி சட்டத்தின் சிக்கல்களினின்று விடுவிக்கப் பட்டன. சபைகளுக்கும் அவைகளின் அங்கத்தினர்களுக்கும் சில கடமைகள் விதிக்கப்பட்டன; சாமான்யச் சட்டத்தின் அனுஷ்

டானத்தினின்று சில அம்சங்களைவிலக்குவதற்கு அதிகாரம் துரைத்தனத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம், ஒவ்வொரு மாகாணத்திலும் ரிஜிஸ்திரார்கள் என்னும் சபைகளைப் பதிவுசெய்யும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்; இரண்டு வருஷங்களில் 800 சபைகள் உயிர்த்து எழுந்தன; சபைகளின் எண்ணிக்கை வருஷத்திற்கு வருஷம் உறுதியாக அபிவிருத்தியாயிற்று; கொஞ்சகாலத்திற்குள், அவசியத்தின் பொருட்டுச் சோதனைநிபந்தனைகளாகமாத்திரம் இருந்த சட்டங்கள் சில அம்சங்களில் பொருத்தமில்லாதவைகளென்றும், சில அம்சங்களில் போதாதவைகளென்றும் தெரியவந்தன. உதாரணமாக, சபைகளை நடத்துகிற விஷயத்தில் கிராம சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் உள்ள வித்தியாசம், அநுபோகத்தில் அநாவசியம் என்று கண்டுகொள்ளப்பட்டது; இதுவுமன்றி, ஒன்று சேர்ந்தவை அல்லது மத்திய சபைகள் என்பன யதோக்தமாக ஒப்புக்கொள்ளப்படவில்லை; கூட்டுநாணய சங்கங்களைத் தவிர வேறுவிதக் கூட்டுறவுகள் உண்டென்பது அச்சட்டத்தினால் வியக்தமாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. அநுபோகத்தால் வெளிவந்த இக்குறைகளையும் வேறு சிலவற்றையும் நிவர்த்திப்பதற்காக 1912-ம் வருஷத்தில் ஒரு புதுச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது; இச்சட்டம் எல்லாவிதக் கூட்டுறவுகளையும் பற்றி விவகரித்தது; 1912-ம் வருஷத்திய இரண்டாவதாகிய இச்சட்டத்தால்தான் கூட்டுமுயற்சி இந்த தேசத்தில் இப்போது ஒழுங்கு படுத்தப்படுகின்றது.

அபிவிருத்தியாகும் மாதிரி.

5. ஸமீபத்தில் கிடைத்த கணக்குப்பிரகாரம் (மைசூர், பரோடா என்கிற சுதேச ராஜ்யங்கள் உள்பட) சங்கங்களின் தொகை * 12324 வரையில் அபிவிருத்தியாகிவிட்டது. (இவை

---

* கடைசியாகக் கிடைத்த கணக்குகளின் பிரகாரம் 30—6—26ல் 80182 சங்கங்கள் வரையில் அபிவிருத்தியாகி வந்தன; இவைகளில் 1406 தவிர மற்றவை நாணயக் கடன் சங்கங்கள்; அங்கத்தினர்கள் 30,58,025க்கு மேல் இருக்கிறார்கள்.

களில் 176 தவிர மற்றெல்லாம் நாணயக்கடன் சங்கங்களே). அங்கத்தினர்களின் எண்ணிக்கை 5,73,536. புது சங்கங்களை அமைத்துத் தரல்வேண்டுமென்று ஜனங்கள் துரிசாக வேண்டுகிறார்கள். இந்த எண்ணிக்கைகளால் தெரியவருவதைவிட அதிக வேகமாக சபைகளை தாகல் செய்விக்க வேண்டுமென்று ரிஜிஸ்தரார்களை ஜனங்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். மனு எழுதிப்போட்டு அதிகாரிகளிடம் வந்துசேருமுன்னேகூட தமுக்குப் போடுவதினால் புதுச்சபைகளைச் சிருஷ்டித்து விடுவதிலும் எளிய காரியம் வேறொன்றும் இருக்க முடியாது. தாகல் செய்விப்பதற்காகப் பிரார்த்தனைகள் வெள்ளம்போல் வந்து கொண்டிருக்கின்றன. கூட்டு முயற்சி என்னும் சுவிசேஷ போதத்தைப் பரவச்செய்வதில் அதிகாரிகள் எந்தக்கொள்கையை அநுசரித்து நடக்கிறார்கள் எனில், எமது மதத்தைத் தழுவ வருகிறவர்களை நமது இனத்தோடு இனமாய் சேர்த்துக்கொள்வதற்கு முன்னேயே, நாம் போதிக்கும் விஷயத்தை நன்றாகப் புத்தி பூர்வமாக யோசித்தனரா? உணர்த்த விரும்பும் கருத்துக்களை மனதுக்கு வாங்கிக்கொண்டனரா? என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிஷ்கருஷித்துக் கொள்ள வேண்டுமென்பதே. ஏனெனில், முக்கியமாய்க் கவனிக்கத் தக்கது யாதெனில், அபஜயமாகக் கூடிய பல சபைகள் எழுவதைவிட, சில நல்ல சபைகள்மட்டுமே ஸ்தாபிதம் பெறல் மேலாகவிரும்பத் தக்கது. இந்தக் கொள்கையை அநுஷ்டிக்காமல் நடந்த பிரயத்தனங்களில் பல அபஜயங்கள் ஏற்பட்டுவிட்டன; இதனால் தெரிவதுயாதெனில், சபைகளின் தொகைகளை விருத்திசெய்வதில் எச்சரிக்கையாயும் ஜாக்கிரதையாயும் நடந்து கொண்டது நியாயம் தான் என்பதே. ஜனங்களில் மிகவும் சிறு பாகத்தவர் மட்டுமே இக்கிளர்ச்சியால் தூண்டப்பட்டிருக்கின்றனரென்று சிலர் கூறுகின்றனர்; கூட்டு முயற்சி வெகு ஜனங்களின் நிலைமையை வேண்டிய அளவிற்கு உயர்த்த வேண்டுமென்றால், இக்கிளர்ச்சி இப்போது நடந்துவருவதைப் பார்க்கிலும் அதிக

வேகமாய் இயக்கப்படவேண்டும் என்கின்றனர். தாகல் செய்யப்பட்ட அங்கத்தினருக்குள்மட்டும் கூட்டு முயற்சிப் பலன்கள் குறுகி நின்றனவல்ல என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆறு லக்ஷம் பேர்கள் அங்கத்தினராக இருக்கும் பட்சத்தில், நேரில் சம்மந்தப்பட்டவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் சேர்ந்து முப்பது லெக்ஷத்தினருக்குக் குறையாமல் இருப்பார்கள். பொதுவான வட்டி விகிதக்குறைவையும் கூட்டுமுயற்சி பரவுதலால் வெளிப்புறத்தோருக்கு உண்டாகக்கூடிய மற்ற நன்மைகளேயும் நாம் மதிப்பிட்டுப்பார்த்தால், ஐக்கிய நாணய முயற்சியால் 60 லெக்ஷம் ஜனங்களுக்குக் குறையாமல் துன்ப நிவர்த்தி பெற்றனரென்றும் நாம் நியாயமாக பாத்தியம் கொண்டாடலாம்; இவைகளெல்லாம் பத்தே வருஷங்களின் வேலேகளின் பலன் என்பதை யோஜிக்குங்கால், மிகவும் திருப்திகரமான அதிசயிக்கத்தக்க காரியசித்தியென்றே சொல்லலாம்.

இத்தாலிதேசத்தில், 20,000 விவசாயிகளுக்குப் பதினெட்டுக் கூட்டு நாணய சபை விகிதமும், ஜர்மனியில் 52 விகிதமும் ஏற்பட்டிருக்கையில், இந்தியாவில் ஒன்று விகிதமாக இருக்கிறது என்பது உண்மையே; ஆனல், இக்கிளர்ச்சி இந்தியாவில் ஆரம்ப நிலேயில்தான் இருக்கிறது. முதற்படியில் உண்டாயிருக்கும் அபிவிருத்தியைநோக்குங்கால், இதற்கு இணேயான முன்னேற்றம் எந்த நாட்டிலும் கிடையாதென்றே தெரியவரும். கூட்டு நாணய முயற்சியில், பிரதமப் பிரயத்தன கர்த்தாவாகிய ஜர்மனியிற்கூட ஆதியில் எதிர்ப்பட்ட கஷ்டங்கள் அளந்தறியக் கூடாதனவாக இருந்தன; 30 வருஷப்பிரயத்தனத்தினுல் முப்பதே சபைகள் ஏற்பட்டன. இப்போதுகூட நமக்குக் கிடைத்திருக்கும் முதற்றிறமான செய்தியைக் கொண்டு ஊகிக்குங்கால், மற்றொரு முப்பது வருஷங்களுக்கு அப்புறம் ஏற்பட்டிருக்கும் சபைகள் 17,000த்துக்கு மேற்படவில்லே. ஆஸ்திரியாவில் 10 வருஷங்களுக்குப் பிறகு 15 சபைகள் ஏற்பட்டன; 60 வருஷங்கள்

ஆனபிறகு இப்பொழுதுகூட, 12,000 சங்கங்களே இருக்கின்றன. ருஷியாவில் இப்போது 14,000 சபைகளும், பிரான்ஸில் 4000 சபைகளும், ஜப்பானில் 7000 சபைகளும் இருக்கின்றனவாம். இவ்வளவு பேதமான அபிவிருத்தி நடந்துவருகிறதென்றாலும், யுக்திவளம் மிகுந்தவர்களாகிய ரிஜிஸ்தரார்களின் புத்திமதியால் ஒழுங்குபட்டுவரும் காரணத்தால், ஸகஜ விரோதமில்லாமலும், ஆரோக்கியமான கிரமப்படிக்கும் வளர்ந்து வருகின்றன. உறுதியாக எதிரே வைத்துக்கொண்டு நடத்தப்பட்ட லெக்ஷியம் சபைகளின் தொகையைமட்டுமே விருத்திசெய்வதல்ல, இந்தக் கிளர்ச்சியை அபாயமில்லாத எல்லைகளுக்குள்மட்டுமே நிறுத்திக் கொள்வதாகவும் இருக்கிறது. முதற்படி இப்போது தாண்டி ஆய்விட்டபடியால், இனிமேலுக்குப் பல சபைகளை ஒன்று சேர்ப்பதாலும், துரைத்தன உத்தியோகத்தில் இல்லாதவர்களைக் கொண்டு மேன்மேலும் அதிகப்படுத்தப்படக்கூடிய கண்காணிப்பினாலும், சில இடங்களில் அபிவிருத்தி விகிதம் மிகும்படி செய்வதினால் அபாயம் யாதொன்றுமில்லாமல் இருக்கலாம்; ஆயினும் இதுவரையில் செலுத்திவரப்பட்ட ஜாக்ருதையும், அடங்கி நடந்து கொள்ளும்தன்மையும் திருப்தியடைவதற்குக் காரணமாகவே இருக்கின்றன.

பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள்.

6. சங்கங்களாக ஒன்று சேர்ந்துகொள்வோரின் முக்கிய நோக்கம் செல்வ அபிவிருத்தியே. தனி மனிதர்களாக நாணயம் வாங்கப் போகும்போது கிடைக்கக்கூடியதைப்பார்க்கிலும் இலகுவான வட்டிவிகிதத்திற்குக் கடன் வாங்குவதற்காக அப்படிச் செய்யலாம்; பண்டங்களை உண்டுபண்ணுவதற்கு வேண்டிய ஸாதனங்களை நயமானவிலைக்கு வாங்குவது கருத்தாக இருக்கலாம்; செய்துவிற்கும் பண்டங்களுக்கு தனி மனிதன் கொண்டுபோய் விற்பதால் கிடைப்பதைவிட ஜாஸ்தி விலைக்குவிற்பது விருப்பமாக இருக்கலாம். இக்கருத்து இந்தியாவின் பெரும்பாகங்களில் நிறைவேறுமாயின், இதன் பலன் மிக்க செல்வப்பெருக்காக

முடியும். கணக்குப் பார்த்ததில், நாம் சொல்வதற்கு உதாரண மாகத் தெரியவருவதுயாதெனில், கிராமாந்தரங்களிலுள்ள சாவ காரிகளிடத்தில் கடன் வாங்குவதற்குப் பதிலாகக் கூட்டுநாணயச் சங்கங்களிடத்தில் நாணயம் வாங்கிக்கொள்வதில் தங்களுக்கு அநாவசியமான சுமையாக இருந்துவந்த குறைந்த பட்சம் 20 லெக்ஷம் ரூபாய் ரிணத்தினின்று தங்களை விடுவித்துக்கொண் டார்கள் என்பதுதான்; இதுபோலவே, சிலவருஷங்களுக்குள்ளே இவ்வித லாபம் திருப்பவும் திரும்பவும் பல மடங்குகளாக என் பதுக முடியாதென்பதற்கு யாதொரு காரணமும் இல்லை. வட்டிக் குறைவால் இவ்வாறு லாபம் ஏற்படுதல், கிடைக்கக்கூடிய நன்மை களில் ஒன்ருக மாத்திரம் இருக்கிறது; இன்னும் பலவும் உள: கூட்டுறவு அபிவிருத்தியடைவதனுலும், கடனுகப்பணம் எளிதில் கிடைக்கும் ஸௌகரியம் செல்வர்களுக்கு மாத்திரம் உரியதாய் நில்லாமல் சாமான்ய ஜனங்களுக்கும் கூடப்பரவுவதினுலும், புதை யலாகத் துருப்பிடித்துக்கிடந்த தனமெல்லாம் வெளிப்படுத்தபட்டு ஐக்கிய நாணய நிதிகளில் போடப்பட்டு வருகின்றன; வேறு விதங்களில், யாதொரு உபயோகமுமின்றிக் கிடந்திருக்கக்கூடிய பணம், மனிதருக்கு உபகாரமாகத்தக்க வழிகளில் மூலதனமாகப் போடப்பட்டு வருகின்றன; வேறுவிதங்களால் ஒருவருக்கும் கிட்டாமற் கிடக்கக்கூடிய மூலதனம் கிருஷிகர் கைக்குக்கிட்டிப் பயன்படுகின்றது; பழங்கடன்கள் கொடுத்துத் தீர்க்கப்பட்டுப் போயின. வெகு காலத்து பந்தகத்திலிருந்து ஜனங்கள் சொத் துக்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றன; இதுமாத்திரமன்று; தனி மனிதர்கள் தங்கள் கடன்களினின்று விமோசனம் பெற்றது போலவே, வெதுகாலத்துக் கடன்களாலும் பந்தகங்களாலும் துன்புற்ற பல கிராமங்கள்கூட விமோசனம் பெற்று விட்டன. கடன் தீர்ப்பும், மூலதனம் இலகுவாகக்கிட்டும் சௌகரியமும் ஏற்பட்டுவிட்டபடியால், முன்னிலும் அதிக தைரியத்துடனும், அதிக தன ஆதாரத்துடனும் கிருஷிகர் தமக்கு இருக்கும் ஜீவேஜை அபிவிருத்தி செய்வது சாத்தியமாக இருக்கிறது; இத்தோடுகூட

சிறுவாடாகவும் புதையலாகவும் சேர்த்து வைத்திருந்த நிதி வெளி வந்து உலாவுவதாலும், தேச அபிவிருத்திக்கு அச்செல்வம் வந்து உதவுவதாலும், ஜனங்களின் ஐசுவரியம் பெருகி வேறுநாட்டாரிட மிருந்து விரும்பிய பண்டங்களை வாங்கும் சக்தி அதிகப்பட்டு உள்நாட்டு வாணிபமும் வெளிநாட்டு வியாபாரமும் அதிகப்படும்.

7. விவஸாயத்தை அபிவிருத்தி செய்வதில் கூட்டுமுயற்சி பயன்படுவதுபோல வேறெவ்விதத்திலும் அவ்வளவு நற்பயன் அளிக்குமென்று தோன்றவில்லை. ஆதிமுதற் கொண்டு பணக்குறைவாலும், நன்றாய் ஒழுங்கு செய்யப்படாத கிராம நிர்வாக ஏற்பாட்டாலும் விளையும் கஷ்டங்களைவென்று முன்னுக்கு வருவதற்குக் கிருஷிகர் களுக்குக் கூட்டுமுயற்சி, சக்தி உண்டாக்கி இருக்கிறது; இதுவு மன்றி, சென்ற சில வருஷங்களுக்குள், நன்றாகப் பயன்தர மனமில்லாதது போன்ற மண்ணினின்றும், நம்பிக்கைமோசம் செய்யும் காலப்பொல்லாங்குகளினின்றும் தப்பி அதிக நல்ல ஜீவனத்தைப் பெறுவதற்கு அது உதவிசெய்து ஜனங்களைக் காப் பாற்றியிருக்கிறது. வறுமை மிகுந்து வருந்தும் காலங்களில் குடியானவனுக்கு ஒத்தாசை செய்வதில் துரைத்தனத்தார் ஒரு போதும் பின் வாங்கினதில்லை. விரைமுதல் உழவு மாடுகள் முதலியன வாங்குவதற்குக் கடன் தொகைகள் தாராளமாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன; வாயிதா வரி முதலியவற்றை வாங்குவதில் ஜனங்களை தயாளமாக நடத்துவதினால், காலப் பொல்லாங்குகளால் விளையும் துன்பங்களினின்று நிமிர்ந்து கொள்வது ஜனங்களுக்கு எளிதாய் இருந்து வருகிறது; எல்லாக் கொடைகளிலும் மேலானதாகிய பாசன ஸௌகர்யத்தை உண்டு பண்ணியதால், வறட்சேதம் முதலிய துன்பங்களுக்கு உள்ளா காமல் நாட்டின் பெரும்பாகங்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இவ்வித உபகாரங்கள் எல்லாவற்றையும்விட மேலானது யாதென் றால், விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்கள் ஜனங்களுக்குப் புகட்டிவரும் விவஸாய ஞானமே. உபயோகமான வேலையைச்

கிருஷி அபிவிருத்தி.

செய்வதற்கு இடம் விஸ்தாரமாக இருக்கிறது. மெய்யான திறமையுள்ள போதகர்கள் கொஞ்சமாக இருக்கிறார்கள்; ஆதலால் நவீன விவஸாய ஞானத்தை ஜனங்களுக்கு போதிப்பதற்கு, துரைத்தன உத்தியோகஸ்தர் முயற்சிமாத்திரம் போதுமானதல்ல. இந்த சந்தர்ப்பத்தில்தான் கூட்டுமுயற்சி உள்நுழைந்து உழைக்க ஆரம்பித்திருக்கிறது. சில மாகாணங்களில் அது விவஸாய அபி விருத்திகளுக்குப் பலவித சாதனங்களைத் தேடிக்கொடுத்திருக் கிறது; அவைகளிற் சில பின்வருமாறு:—அபிவிருத்தியாக்கப் பட்ட ஒவ்வொருவிதப் பயிருக்கும் விரைகிடைத்த உடனே துரைத்தனத் தோட்டங்களிலிருந்து விஸ்தாரமான தேசப்பரப்பு களிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டுபோய்ச் சேர்க்கப் பட்டு ஒன்று ஆயிரமாகப் பலுகும்படி கூட்டு முயற்சிச் சபைகள் சகாயம் செய்திருக்கின்றன. சுத்த ஜாதிப்பயிர்க்கு விதைச் சுத்தம் இருக்கும்படிகாக்கின்றன; அப்படித் தயாரிக்கப்பட்ட உயர்தரமான விதையை நல்லவிலைக்கு விற்பனையாகும்படி செய் கின்றன; நவீன சாஸ்திரதத்வக்ஞர்களால் சோதனைபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்ட சகாயமான விலைக்குக் கிடைக்கக்கூடிய எருக்களையும் கிருஷிக்கருவிகளையும் விவஸாயிகளுக்கு எளிதிற் கிடைக்கும்படியாகச் செய்திருக்கின்றன; கிராமமாட்டுக் கிடை களின் அபிவிருத்தியின் பொருட்டு மாடு வளர்ப்போர்களுக்கு மேலான ஜாதியைச்சேர்ந்த காளைகளை கிராமத்துக் கால்நடை களின் அபிவிருத்தியின்பொருட்டுத் தந்து உதவிசெய்திருக்கின் றன; உபயோகமான விவஸாய அறிவைப் பரவச்செய்ய இந்தக் கூட்டுமுயற்சிச் சங்கங்களே உதவிசெய்து கொண்டுவருகின்றன.

கூட்டுமுயற்சியை விவஸாய அபிவிருத்தியோடு சேர்ப்ப தனால் அது வெவ்வேறு விதமான தோற்றங்களை அடையலாம். ஒரு ஸ்தலத்தில் கூட்டுமுயற்சிச் சபை கிருஷிகர் சங்கங்களின் வேலையைச் செய்யலாம்; மற்றொரு ஸ்தலத்தில் விவஸாயசபைகள் அல்லது ஸமிதிகள் தனித்தனியாகச்செழித்து நிற்கலாம்; அப்படியிருந்தும் கூட்டுமுயற்சிச் சங்கங்களோடு நெருங்கிய

சம்மந்தத்துடன் வேலை செய்யலாம்; ஆனால், எங்கெங்கே விவஸாய முயற்சியும் கூட்டுநாணய முயற்சியும் ஒன்றினிடமிருந்து மற்றொன்று அடையக்கூடிய பலனைப்பெற்று ஒன்றுபட்டு உழைக்கின்றனவோ, அங்கேயெல்லாம், அவைகள் ஜீவசக்தியுள்ள சம்பந்தத்தோடு வளர்ந்துவருகின்றன; சில வருஷங்களுக்குள்ளே இவ்விரும்பத்தகுந்த கிளர்ச்சி இந்தியா எங்கும் பாவிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. உண்மையில் வெளிப்புறங்களிலிருந்து சங்கதிகளை உற்றுப்பார்த்தவர்கள் சொல்வது யாதெனில், துரைத்தனத்தார் ஜனங்களுக்கு உண்டாக்கியிருக்கும் சௌகரிய முறைகளில் மற்றெல்லாவற்றைபும்விட விவஸாயம் கூட்டுமுயற்சி என்னும் இவ்விரண்டு இலாகாக்களின் முயற்சிகள் ஜனங்களின் ஜீவன ஒழுங்கிற்கு அதிக சகாயம் செய்திருக்கின்றன என்பதே.

கூட்டுமுயற்சியின் கல்விப்பயிற்சிப்பயன்.

8. கூட்டு முயற்சியால் நாட்டிற்குக் கிடைக்கும் நன்மை செல்வ அபிவிருத்தி ஒன்றுமாத்திரம் அல்ல; இன்னும் பல நன்மைகளும் கிடைக்கின்றன. அதற்கு உள்ள விஸ்தாரமான அர்த்தத்தை அதற்குத்தந்து அதை ஊகித்துப் பார்த்தால், புத்திப்பயிற்சியும் நன்னடக்கைப் பயிற்சியுமான கல்வியாகவுமிருக்கிறது. தொழின் முயற்சியின்பொருட்டு மனிதர் ஒன்று சேரும்போது, அதுவிஷயமாக வித்தைப் பயிற்சிபெறல் அவசியம் என்று கண்டுகொள்ளுகிறார்கள். கணக்குகள் வைத்துக் கொள்ளும் முறையையும் புரோநோட்டுகள் எழுதுவதையும் தனசாலைத் தாகல் புஸ்தகங்களையும் ரசீதுகளையும் வாசித்துப் பொருள் செய்துகொள்வதையும் கற்கிற விஷயத்தில் பயிற்சி அவசியமென்பது எல்லாருக்கும் நன்றாகத் தெரியும்; அதற்குக் காரணங்கள் நன்றாய்த் தெரிந்தவை. இவ்வித அறிவு ஜனங்களுக்குள் விஸ்தரித்திருந்தால் அவர்கள் மோசம்போவதற்கு அதிகயாக இடமிராது. சுலபமான நடையில் எழுதப்பட்ட கூட்டு முயற்சிப் புஸ்தகங்களைப்படிக்கத் தெரிந்துகொண்டவர்கள் தங்கள்

சபைகளிலும் கூட்டுமுயற்சிக் கிளர்ச்சிகளிலும் புத்திசாலித்தன மான சிரத்தை எடுப்பார்கள் என்பது திண்ணம். ஜனங்கள் படிக்கத்தெரியாதவர்களாக இருப்பது கூட்டுமுயற்சிக்கிளர்ச்சிக்கு ஒரு இடைஞ்சல்தான்; கூட்டுமுயற்சி நாட்டில் பரவும்போது எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஜனங்கள் வேண்டுவதுபோல, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகுதியாக உள்ள இடங்களில் ஜனங்கள் கூட்டுமுயற்சி வேண்டுமென்று விரும்புவார்கள். ஆயினும் கூட்டுமுயற்சியின் பலன் இதற்கு அப்பாலும் பரவி இருக்கிறது; இலகுவான வட்டிக்கு நாணயம் கிடைக்கச்செய்கிற தென்பதோடு நிற்கவில்லை; செட்டாயிருக்கும் படி ஜனங்களுக்குத் தென்பையும் உண்டுபண்ணிவிடுகிறது. ஒருவன் ஒரு சபையில்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அருகனு என்பதைக் கண்டுபிடிக்கக் கட்டளைக்கல் யாதெனில், அவன் செல்வமல்ல அவன் குணமே; தங்கள் பொதுநன்மையின் பொருட்டு மனிதர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள்பொது நாணயத்தை ஜாமீனாக வைத்து லேவாதேவி முதலிய தொழில் செய்யும் பொழுது, இதற்கு முன்னர் இத்தேசத்தவர்கள் கனவிற்கூட நினைத்திராதவண்ணமாய், ஒருவர் மற்றொருவர் நடத்தையை ஒழுங்குபடுத்தியும், ஒருவர் மற்றொருவருடைய லாபங்களை அபி விருத்திசெய்தும் வந்திருக்கின்றனர். ஒவ்வொரு அங்கத்தினன் படும் கடனுக்கும் சங்கத்தார் ஒருமித்து உத்திரவாதமுள்ளவர் களாயும் ஒவ்வொருவனும் மற்றவர் கடனைக் கொடுத்துத் தீர்க்கக் கடமைப்பட்டும் இருப்பதினால், பொதுஜன அபிப்பிராயத்தை அநுசரித்து, வரும்படி கிடைக்கமுடியாத இனங்களில், எவ்வளவு அவசியமோ அதற்கு அதிகமாக ஒருவன் செலவிட விரும்பினால், அதற்குக் கண்டிதமான தடை இருக்கிறது. இவ்விதக் காரணங் களினால் கல்யாணச் செலவு மிகவும் குறைந்துபோயிற்று. குடி காரர்களும் சூதாடிகளும்கூடச் சீர்திருத்தம் அடைந்துவிட்டார் கள்; அல்லது சபைகளிலிருந்து விலக்கப்பட்டுப் போனார்கள். தன்னடக்கம், காலந்தவறாமை, நேரான பாதையிற்போதல், தம்பி

டத்தில் தமக்கே இருக்கவேண்டிய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை, ஒழுங்கு, மனத்திருப்தி செட்டு முதலிய உத்தம குணங்களெல்லாம் தென்பு பெற்று ஓங்கிவருகின்றன. சில இடங்களில் அழிவழக்காடும் கெட்ட வழக்கம் கவனிக்கத்தக்க அளவுக்குக் குறைந்துபோயிற்று. வேறு சில பிரதேசங்களில், பொது ஐவேஜியைக்கொண்டு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கும், வித்தியார்த்திகளுக்கு சகாயஞ்செய்யும் நிதிகளை அமைப்பதற்கும், க்வினைன் என்னும் ஜுரநாயகப்பட்டை விநியோகத்திற்கும், குடிநீர்க் கிணறுகள் ஏற்படுத்துவதற்கும், தெருக்களை சுத்தப்படுத்துவதற்கும், உதவி செய்யப்படுகிறது. ஐக்கிய நாணய வலிமையின் தூண்டுதலால் பணத்தை மிகுத்து வைக்கும் தனசாலைகளும், உபகாரநிதிகளும், ஏழைகளை ரக்ஷிக்கும் சபைகளும், ஏற்பட்டு நடந்து வருகின்றன. கூட்டுமுயற்சிச் சங்கங்களைப்பற்றி நேரிற்கண்ட அநுபவ அறிவு உள்ளவர்கள் வற்புறுத்திச் சொல்வது யாதெனில், அதில் சம்மந்தப்பட்ட ஜனங்களின் குணத்தில் கூட்டுறவுத் தன்மை மிகுந்து வியக்கத் தக்க அளவிற்கு வந்துவிட்டது என்பதுதான். மலிவான நாணய சம்பாத்தியமும் செல்வப்பெருக்கும் அங்கத்தினருக்கு உண்டாக்குவது மாத்திரமேயன்றி வல்லமையுள்ள கல்விப்பயிற்சிக் கருவியாகவும் கூட்டுமுயற்சி இருக்கிறதென்றும், அத்தன்மையதாய் இருத்தல்பற்றி, ஜனங்களின் க்ஷேமத்தில் அன்புடையவர்கள் அதை அதிக அன்போடு ஆதரிக்கத்தகும் என்றும் அவ்வநுபோக அறிவுள்ள பிரமுகர்கள் கூறுகின்றனர். கூட்டுமுயற்சிச் சங்கங்களை ஏற்படுத்தி நடத்தும் நிர்வாகிகளை ஜனங்கள் நம்பி சண்டைகளைத் தீர்த்துவிட மத்யஸ்தராக அழைத்து, வழக்குகளை தீர்த்துக்கொள்ளுகின்றனர். கர்ண பரம்பரையாக வெகுகாலமாக அதிகாரம் செலுத்திவரும் கிராம சபைப் பஞ்சாயத்தைச் சேர்ந்த கடமைகள்கூட கூட்டுமுயற்சி நிர்வாகிகளிடம் ஒப்புவிக்கப்பட்டு நன்றாக நிறைவேற்றப்படுகின்றன. புதியனவாய்த் தோன்றிய ஒத்துமையைக் கெடுக்குங்காரணங்களால் பலஹீனமாக்கப்பட்ட

கிராம ஐக்கிய சபைகள் கூடப் புது உயிர்பெற்றுத் தொடர்வான லெக்ஷயமும் ஒத்துமை உணர்ச்சியும் அடைந்து சககாரக் கிளர்ச்சியால் முன்னுக்கு வரலாம்.

9. ஐரோப்பாவிலிருப்பதுபோலவே இந்தியாவிலும் செல்வ அபிவிருத்திக்கு மிகவும் பெரிய இடைஞ்சல் யாதென்றால், கிருஷிகர் முயற்சிக்கும் சிறு கைத்தொழில் முயற்சிக்கும் தேவையான மூலதன சகாயம் நியாயமான வட்டிக்குக் கிடையாமைதான். ஐரோப்பா இந்தியா முதலிய இரண்டு இடங்களிலும் உள்ள கூட்டுமுயற்சி என்கிற முழுக்கட்டிடத்தின் அஸ்திவாரம் ஐக்கிய நாணய சங்கங்களே. சில ஐரோப்பிய நாடுகளில் பெரிய பூஸ்திதிக்ககாரர்களுக்குக் கூட்டுநாணயம் தேடிக் கொடுப்பதே சககாரர்களின் முக்கியமான கவனிக்கத்தக்க அம்சமாக இருந்துவருகிறது. பெருத்த பூஸ்திதிக்காரர்களுடைய ஐக்கிய நாணயவலிமையை உருவாக்கி உயிர்ப்பிக்க இந்தியாவிலும் திறப்புகள் இருக்கின்றன; அநேக மாகாணங்களின் கூட்டு முயற்சி ரிஜிஸ்தரார்கள் இது விஷயமாக உஷாரான நாணய முயற்சிகளை ஆரம்பித்து மெல்லமெல்ல வழிசெய்துகொண்டு முன்னிட்டுச் செல்லுகின்றனர்; பெரிய பூஸ்திதிக்காரர்களுக்கும் கூட்டுநாணய சகாயம் கிடைக்கும்படியான பிரயத்தனங்கள் ஆரம்பித்திருக்கின்றன. ஆனால் இவ்விதமான ஒருசங்கத்தின் அமைப்பிற்கும் சாமான்யக் கூட்டுநாணய சபைகளுக்கும் அஸ்திவாரம் போடுவதில் வித்தியாசம் உண்டு; ஆனால் இந்தத் தீர்மானத்தில் அதைப்பற்றி இதற்குமேல் பிரஸ்தாபித்தல் அநாவசியம். 1904-ம் வருஷத்திய இந்தியாச்சட்டம் "சொற்பத்தேவைகளையுடைய எளிய சாமன்ய ஜனங்களுக்காகச் சிறு சாமான்ய சபைகளை ஏற்படுத்தித் தென்புஉண்டுபண்ணுவதையே கருத்தாக உடையது" என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஏற்படுத்தப்பட்டிருக்கும் சபைகளிற் பெரும்பான்மையானவை இப்படிப்பட்டவைகளாகவே இருக்கின்றன; கூட்டுமுயற்சிக் கருத்துக்களை

கூட்டுநாணய முயற்சி முக்கியமாக சிறு முயற்சிக்காரர்களான விவசாயிகளுக்கே உரியது.

நன்கு உணராதவர்களுக்கு இதுவரையில் கிடைத்திருக்கும் பலன் சொற்பமாகத் தோன்றலாம். இத்தேசத்தில் ஒவ்வொரு சபைக்கும் அங்கத்தினரின் ஸராசரித்தொகை 45 தான்; வேலைசெய்யும் முதல் ஒவ்வொரு சபைக்கும் நிரவலில் 290 பவுனுக்கு, அதிகப்படாமல் இருக்கிறது; அனுபோகத்தில் அநேக சபைகளுக்கு இருக்கும் தனம் அடிக்கடி இதிலும் மிகவும் குறைந்தே இருக்கிறது. லக்ஷக்கணக்காக முதலை அபிவிருத்திசெய்து கொண்ட சபைகளும் இருக்கின்றன; அவைகளிற் சில 20 அல்லது 30 ரூபாய்களாகிய அற்பமுதலை வைத்துக்கொண்டு ஆரம்பித்த சாமான்ய சபைகளாக இருக்கின்றன. சின்னவைகளானும், பெலமுள்ளவைகளான எண்ணிறந்த சபைகளைக்கொண்டு தான் கூட்டுமுயற்சிக்கிளர்ச்சிக்கு வலிமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு சம்பந்தப்படாத இனத்தவருக்கும் செய்தொழில்களுக்கும் சம்மந்தப்பட்டவைகளாய் 600 கூட்டுமுயற்சிச் சபைகள் இருக்கின்றன. இத்தகைய விவசாய சம்மந்தமில்லாத பெரும்பான்மையான கூட்டுச்சபைகள் அல்லாஹபாத் பிரதேசமாகிய ஐக்கியமாகாணங்கள் பம்பே மைசூர் முதலிய பிராந்தங்களைச் சேர்ந்தவைகள். பெரும்பாலும் தொழிலாளர்கள் நெசவுக்காரர்கள் முதலிய எளிய வகுப்பினர் நன்மைக்காகவே இந்த சபைகள் முக்கியமாக ஏற்பட்டவை; ஆயினும், தச்சர்கள், கொல்லர்கள் சக்கிலியர்கள் முதலியோரின் சபைகளும் மேற்கூறிய 600 சபைகளில் அடங்கியிருக்கின்றன. இதே தன்மையான சபைகள் துரைத்தனக் கார்யாலயங்களிலுள்ள குமாஸ்தாக்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. பரிட்சார்த்தமாக இந்திய சைநியத்தின் பட்டாளங்களிலும் இவ்வித சபைகளை ஏற்படுத்தி வேலைசெய்து வருகின்றனர். ஆயினும் நாட்டிலுள்ள 12,000 கூட்டுநாணயச் சபைகளில் பெரும்பான்மையானவை விவசாயிகளின் நன்மைக்காகவே ஏற்பட்டிருக்கின்றன. ஆரம்பம் முதல் லக்ஷயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கருத்து யாதெனில், இந்திய ராஜரீக உடலுக்கு எலும்புபோல் திண்மை அளித்துக்

கொண்டிருக்கும் சிறு முயற்சிக்காரராகிய விவசாயிகளுக்கு நியாயமான வட்டிவிகிதத்தின் மேல் மூலதனம் ஸம்பாதித்துத்தருதலே. செய்தொழில் முயற்சிக்குக் கூட்டுநாணயம் சேகரித்துத் தருதலைவிட விவசாய முயற்சிக்கு மூலதனம் தேடிக்கொடுப்பதே அத்தியாவசியமான லெக்ஷயமென்று ராஜ்யதந்திரிகளால் கருதப்படுகிறது. ஆகவே துரைத்தனத்தார் முயற்சியெல்லாம் சிறு கிருஷிகர்களின் துன்பநிவர்த்திக்கே அர்ப்பணம் செய்யப்பட்டுவருகிறது.

லேவாதேவிக்காரர்களுக்கு கூட்டுமுயற்சியாலுண்டாகும் லாப நஷ்டங்கள்.

10. கொஞ்ச நிலமுள்ள கிருஷிகர்கள் இதற்கு முன் தம் மூலதனத்தின் பொருட்டு சிறு கிராம ஸாவகாரிகளையே ஆதாரமாகச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. எவ்வளவு நஷ்டம் நேரிடுவதாய் இருந்தாலும் அவைகளுக்கெல்லாம் துணிந்து அபாயங்களுக்குத் தன் பணத்தை உள்ளாக்கிக்கொண்டு ஜீவனம் செய்ய வேண்டியிருக்கிற சிறு ஸாவகாரி இலகுவான வட்டிக்கு நாணயம் கொடுப்பானென்று எதிர்பார்க்க நியாயமில்லை. அயோக்கியரான கடன் வாங்குவோருக்குப் பணம்தரும்போது தன் சிறந்த புத்தியை நீதித்தப்பாக உபயோகித்து வந்தாலும் நல்ல வாத்தாய் வரட்டும், போனாலும் போகட்டும் என்று துணிந்து தன்னைக்காத்துக் கொள்ளும் பொருட்டு அந்த அயோக்கியர்களால் உண்டாகக்கூடிய நஷ்டத்தை ஈடுசெய்து கொள்ளும் பொருட்டு யோக்கியர்களிடமிருந்து அதிகவட்டி வாங்கும்படி நேரிடுகிறது. முந்தியகாலங்களில் கடன்கொடுத்தால் பணம்திரும்பி வருவது ஸந்தேகம் என்னும் அதிருப்திகரமான கர்ணபரம்பரைப் பேச்சின் காரணத்தினுல் இப்போதைக்கு நியாயமாக இருப்பதைவிட அதிகமானவட்டி விகிதத்தை வாங்குவது வழக்கமாய்ப் போயிற்று என்னலாம். ஸாவகாரிக்கும் குடியானவனுக்கும் நேர்கொடுக்கல் வாங்கல் குறையும்படி செய்யும்பலன் கூட்டு நாணய முயற்சியை பரவச்செய்வதால் உண்டாகலாம்; அப்படிப்

பட்ட கடனளித்தனத்தைக் குறைக்கவேணு மென்பதுதான் கூட்டுமுயற்சியின் லெக்ஷயம். வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குவதையே தனக்கு ஜீவனோபாயமாக ஸாவகாரி கருதுகிற வரையில் கூட்டுறவு நாணயக்கிளர்ச்சி தன் லாபத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறதென்று காண்கிறான். தன்னிடத்தில் வழக்கமாக நாணயத்திற்கு வருகிறவர்களில் சிலர் தன்னிடத்தில் வாராமற் போய்விடும்படி நேரிடலாம்; மற்றவர்களிடம் வட்டிவியாபாரம் தனக்குத் தக்கும் பொருட்டு வட்டி விகித்தைத்தான் குறைக்கும்படி நேரிடலாம்.

ஆகையால், அநேக சமயங்களில் கூட்டுமுயற்சி அபிவிருத்திக்கு இடைஞ்சல் செய்கிறான் என்பது அதிசயமல்ல; இத்தோடு கூட, வேறுசில சமயங்களில், வேறுசிலரைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு ஸபைகள் மூலமாகக் கூட்டு முயற்சிக்கு ஒன்று சேர்ந்த இடைஞ்சலை உண்டு பண்ணுகிறான் என்பதும் அதிசயமல்ல; இதிலும் விநோதமான வேறு சில ஸம்பவங்களும் நேரிட்டிருக்கின்றன. வியாபாரம் செய்யும் வகுப்பினருடன் அநுதாபம் காட்டும் தன்மையுள்ள, அல்லது, அவ்வினத்தாராக இருக்கும் துரைத்தன உத்தியோகஸ்தர் தங்கள் அதிகாரதோரணையிலேயே, கூட்டு முயற்சி அபிவிருத்திக்கு இடைஞ்சல் செய்திருக்கிறார்கள்; இவ்விதமாக நடந்த பிசகு வெட்ட வெளிச்சத்துக்கு வந்தவுடனே தகுந்த ருஜு ஏற்படுவதின்பேரில் தக்கவிதமாக தண்டிக்கப்படவேண்டும். சில்லுண்டி வட்டி வியாபாரிகளுடைய பிழைப்பிற்குக் கூட்டு முயற்சி பிரதிகூலமாக இருக்க நேரிடுவது அவசியம் தான் என்றாலும், இந்த சாவகாரிகளுங்கூடக்கூட்டு முயற்சியின் லாபங்களில் ஏன் பாகம் பெறலாகாதென்பதற்கு யாதொரு காரணமுமில்லை. நாட்டின் கிராமவெளிச்செல்வ விவகாரங்களில் வட்டிப் பிழைப்பினர் மிகவும் உபயோகமான கைங்கர்யங்களைச் செய்து உபகாரிகளாக இருந்து வந்தார்களென்பது மெய்யே; இப்பொழுது உண்டாயிருக்கும் புதிய ஸந்தர்ப்பங்களு

க்கு ஏற்றவாறு நகர்ந்துகொடுத்துக்கொண்டு நட்பாகப்பழகும் பட்சத்தில், இனிமேலும் உபகாரம் உள்ளவர்களாக இவர்கள் இருந்து வரலாம். கூட்டு முயற்சி நிரந்தரமாகத் தங்குவதற்கு வந்து விட்டதென்றும், அதை எதிர்ப்பது உபயோகமற்ற காரியம் என்றும் சீக்கிரம் இவ்வட்டித்தொழிலினர் கண்டு கொள் வார்கள் என்பது நம்பத்தக்கது; அவ்வாறு பல இடங்களில் கண்டுகொண்டு விட்டார்கள் என்றும் சொல்லலாம்; இது மாத் திரம் அன்று; பலவிதப்பழமையான அவ்வவ்விடங்களிலுள்ள வட்டிவியாபார முயற்சிகளுக்கும் லாபகரமான பதலிகளாகக் கூட்டுமுயற்சி வேலைகள் நிலைத்துக் கொள்ளலாம் என்பதும் தெரிய வரும். கூட்டு நாணய லேவாதேவிகளெல்லாம் சில குறிப்பிட்ட வழிகளில் மாத்திரம் செல்லும்படி ஒழுங்குபடுத்தி நிறுத்தப்பட்டி ருக்கின்றன; சில விசேஷமான ரக்ஷணைகளால் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கின்றன; இதுவுமன்றி இம்முயற்சி முழு பைரங் கத்தில் நடக்கிறது; ஒளி களவு, புழுதி மாயம், ஒன்றும் இல்லை. ஆதலால், ஸாவாகாரிகளுக்கும் வட்டிக்குப் போடப் பணமுள்ள மற்றவர்களுக்கும், இக்கூட்டு முயற்சி விரும்பத்தக்க விஷயமாக ஆய்விடல் வேண்டும். கிராமாந்திர வாஸியாகிய வட்டி வியாபாரி தன் கைப்பொருளை, கிராமக் கூட்டு முயற்சி ஸபைகளிலாவது அல்லது இப்போது புது விதிப்பிரகாரம் ஏற்பட்டிருக்கும் மத்திய தனசாலைகளாகிய ஸென்ட்ரல் பாங்குகளிலாவது வட்டிக்குப் போடலாம்; இவைகளில் தன் முதலைப் போட்டுப் பொருளை அபி விருத்தி செய்ய இடமுண்டு. பழையகாலம் முதற்கொண்டு தலை முறை தலைமுறையாகத் தொழில் செய்து கொண்டு வரும் வட்டி வியாபாரிகளுக்கு உண்டாகத் தக்க அதிக நஷ்டம் அதிக லாபம் ஒன்றும் இல்லாமல் ஒருவாறு நன்மை பெறலாகும்; கிராம ஜனங் களின் பொதுச் செல்வமிகுதியினால் முடிவில் தன் முதலை மேன் மேலும் லாபகரமான இனங்களில் போட்டுப் பயன்பெற இட முண்டாகும்.

11. கூட்டு முயற்சியின் நோக்கம் யாதெனில், நியாயமான சித்தமுடையவர்களிடமிருந்து நியாயமான விகிதத்திற்கு நாணயம் பெறுதலே யாம். இது எப்போதும் இலகு வட்டியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படாது; கடன் கொடுக்கும் பணத்திற்கு ஏற்படும் நியாயமான வட்டி விகிதம் இந்தியாவின் பல பாகங்களில் பலவிதமாக வேறுபடுகிறது. மேட்டு பர்மாவில் மிகவும் தாழ்வானது என்று எண்ணப்படும் ஒரு வட்டி விகிதமானது குஜராத்து அல்லது சென்னையின் சில பாகங்களில் அக்கிரமவட்டி என்று எண்ணப்படும். வட்டி விகிதத்தை இந்தியா முழுமையிலும் ஏககாலத்தில் ஒரே நிலைமைக்குக் கொண்டு வந்து வைப்பது கூட்டு நாணய முயற்சியின் கடமையல்ல. இக்கிளர்ச்சி மேன்மேலும் வளமை பெறும்போது, எங்கே பார்த்தாலும் வட்டி விகிதம் குறைய ஆரம்பிக்கும் என்பது மெய்யே; இவ்விதக் கிளர்ச்சி நம் கண் முன்னயே ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. பெரிய வட்டி விகிதத்திற்குக் கடன் வாங்கி வழக்கப்பட்டிருக்கும் கடனாளிக்கு உதவிசெய்து அவனை செட்டுக்குக்கொண்டு வந்து பயிற்சி செய்விப்பது படிப்படியாகத் தான் நடக்கவேண்டும். சுலப வட்டிக்கு எளிதில் இருந்தாற்போலிருந்து கடன் கிடைக்க இடமுண்டானல், பல ஸமயங்களில் இச்சௌகரியமே தெரியாதவர்களுக்கு நாசத்தை உண்டு பண்ணிவிடுகிறது. அந்தந்த ஊர்களிலேயே கிடைக்கக்கூடிய முதலைக்கொண்டு சங்கங்கள் தொழில் ஆரம்பித்தல் மிகவும் விரும்பத்தக்கது; அக்கம்பக்கங்களில் எந்த வட்டி விகிதத்திற்கு அங்கங்கேயுள்ள லாபகர முயற்சிகளில் ஜனங்கள் தங்கள் தங்களுக்குள்ள பொருள்களைப் போடச் சௌகரியமிருக்கிறதோ அதைவிட மிகத்தாழ்ந்த விகிதத்திற்கு அங்கத்தினரிடமிருந்தாவது அந்தந்த இடங்களிலுள்ள பொதுஜனங்களிடமிருந்தாவது நாணயம் கிடைக்காது. தொழில் செய்யப்படும் பிராரம்பத்தில், அநுஷ்டானத்தில் இருக்கும் வட்டிக்கு மிகவும் குறைந்த விகிதத்திற்கு ஸபையின் அங்கத்தினருக்கு நாணயம் ஈயப்பட்

நியாயமான வட்டிக்குக் கடன் கிடைத்தல்.

டால், அங்கத்தினர் வாங்கும் கடன் தொகையை அதிகப்படி வட்டிக்கு வெளிப்பட்டோருக்குக் கடன் கொடுக்கும்படியான அபாயம் நேரிடலாம். ஆகவே இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு வட்டி விகிதத்திற்குக் கடன் கொடுக்கப்படுகிறது என்று தெரியவருகிறது. ஆயினும் எவ்வளவுக்கு வட்டி விகிதம் அந்தந்த ஸ்தலத்தின் நிலைமையோடு பொருத்திப் பார்க்கும்போது நியாயமாக இருக்கிறதோ, அவ்வளவிற்கு அதை அதிகப்படி என்று சொல்ல இடமிராது.

ஸபையின் மாதிரி: ரெய்பெயிஸன், ஷுல்ஸீ டெலிட்ஸ்ச்

12. சில்லரை விவஸாயிகளுக்கும், சிறு முயற்சிகள் செய்து வரும் தொழிலாளர்களுக்கும், நியாயமான வட்டிக்கு நாணயம் வாங்கித் தரல் கூட்டு நாணயச் சங்கங்களின் கருத்தாயிருப்பதினால், இந்த லெக்ஷயம் நிறைவேறுவதற்கு, சங்கங்களை அமைக்கப் பலவித முறைகள் உண்டு. பொது நோக்காகப் பேசுமிடத்து, சங்கங்களை உருவாக்குவதற்கு, இரண்டு முக்கியமான முறைகள் உள்ளன; இவைகளை ஆதியில் ஏற்படுத்தியவர்களின் பேர்களைக்காரணமாக வைத்துக்கொண்டு ரெயிபெயிஸன் ஸபைகள் என்றும் ஷுல்ஸிடெலிட்ஸ்ச் ஸபைகள் என்றும் இருவிதமாகப் பிரஸ்தாபிக்கிறார்கள். ரெயிபெயிஸன் ஸபைகள் முக்கியமாய் கிருஷிகர்களுக்காக ஏற்பட்டிருக்கின்றன; அவைகள் கிராமாந்தர தனசாலைகள் என்றும் செல்லப்படுகின்றன; ஷுல்ஸி டெலிட்ஸ்ச் ஸபைகளோ, முக்கியமாய்த் தொழிலாளர்களுக்காக ஏற்பட்டவை; இவைகள் ஜனங்களின் தனசாலைகள் என்றுசொல்லப்படுகின்றன. முக்கிய நோக்கத்திலும், காரிய நிர்வாக விவரங்களிலும் இவ்விருவிதச் சபைகளுக்கும் பலவித வித்தியாஸங்கள் உண்டு. இவ்வித்தியாஸங்களில் மூன்றை மாத்திரம் இந்த ஸந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டியது:—(1) வேலை நடத்திவரும் பிராந்தங்கள் (2) அங்கத்தினர்கள் ஸபையின் கடனுக்கு ஜாமீனாக இருத்தல் (3) லாபங்களை உபயோகிக்கும் விதம். நாட்டுப்

புறத்து ரெயிபெயிஸன் பாங்கிகளில் அங்கத்தினர்கள் மிகவும் குறுகலான பரப்பிலிருந்து மாத்திரம் பொறுக்கப்படுகிறார்கள். சங்கத்தின் கடன்களுக்கு அநேகமாய் தங்கள் முழு ஸொத்துக்களையும் கொண்டு பாத்தியப் படவேண்டியதாக இருக்கிறது. இதில் மாமூலாய்ப் பங்கு வீதங்கள் இல்லை; அப்படிப்பங்குகள் இருந்தாலும், அவைகள் மிகவும் சிறியவை; லாபத்தைப் பகர்ந்து எடுத்துக்கொள்ளுதல் இல்லை. ஜனங்கள் தனசாலைகள் அல்லது ஷூல்ஸிடெலிட்ஸ்ச் பாங்கிகளில் என்ன செய்கிறார்கள் என்றால், சங்கங்கள் விஸ்தாரமான பரப்பில் வேலை செய்யலாம். பெரும்பாலும், சில குறிப்பிடப்பட்ட கடன் தொகைகளுக்காக மாத்திரம் உத்தரவாதம் உள்ளவர்களாக அங்கத்தினர் இருக்கவேண்டியது. அங்கத்தினருக்குப் பங்குகள் உண்டு; நியாயமான அளவுக்கு லாபத்தில் விகிதம் பிரித்துக் கொடுக்கப் பெறுகிறார்கள். ஐரோப்பாவில் செலாவணியுள்ள இரண்டுவித ஸபைகளுக்கும் இவைகள் ஸரியான பிரதி நிதிகள் என்று சொல்லலாம்; ஆனாலும், ஐரோப்பாவிலும் வேறிடங்களிலும் இந்த மாதிரிச் சபைகளிலிருந்து சற்றுச்சற்று வித்தியாஸப்பட்ட சங்க வேறுபாடுகளும் உண்டு. மொஸியே லுஸாட்டி என்பவரால் உருவாக்கப்பட்ட இத்தாலியிலுள்ள ஜனங்கள் ஸபைகள் இவ்விதமான கோஷ்டிகளைச் சேர்ந்தவைகள்; ஒருவாறு ஷூல்ஸிடெலிட்ஸ்ச் ஸபைகள் மாதிரியாக அமைக்கப்பட்டு, எப்போதும் அங்கத்தினர்வரையறுக்கப்பட்ட நஷ்டத்துக்கு மாத்திரம் தங்கள் ஸொத்தைக்கொண்டு பாத்தியப்படுகிறது என்று நிபந்தனைகள் ஏற்பட்டிருப்பதுடன், பங்குகளும் சிறியவை. முக்கியமாம் விவஸாயத் தேவைகளுக்காகச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கும் இந்தியாவில், அநேகமாய்ச் சபைகள் எல்லாம் ரெய்பெயிஸன் பாணியில் அமைக்கப் பட்டிருக்கின்றன; ஆனால் அடிமைத்தனமாக ஐரோப்பிய மாதிரிகளை அப்படியே ஸ்வீகரித்துக் கொள்ளவில்லை; புது நிலத்தில் புதிய ஸந்தர்ப்பங்களில், முன்னுடி கண்டறிந்த சங்கச் சொரூபங்களினின்று எங்கெங்கே மாறுதல் செய்யவேணுமோ அங்கேயெல்லாம் சீர் திருத்

தங்கள் செய்து பொருத்தமாக அமைத்துக்கொள்வது கஷ்டமாக இருக்கவில்லை; எல்லா ஸபைகளையும் ஒரே மாதிரி அமைக்க முயலவில்லை; இந்தியக் கூட்டுச்சபை ஏற்பாட்டின் மிகவும் முக்கியமான அம்சம் யாதெனில், ஸந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு ஒழுங்குபட்டுவரும் தன்மையே. ரிஜிஸ்திரார்கள் என்கிற, ஸபைகளைப் பதிவுசெய்து ஸ்தாபனம்தரும் மேல் உத்தியோகஸ்தர்கள், தங்களுக்குள்ளேயே அடிக்கடி ஸமாஜங்கள் நடத்திக் கொள்வதினால், கூட்டு முயற்சித் தருமத்தின் முக்கியக் கருத்துகளை மறவாது மனதிலும் செயலிலும் அமைந்துக்கொண்டு வருகின்றனர்; இந்தக் கூட்டுறவு நீதிகளையும் அநுஷ்டானங்களையும் திருஷ்டியில் வைத்துக்கொண்டு நடக்கிறவரையில், ஸபைகளின் வெளி ரூபங்களில் பலவித பேதங்கள் இருப்பதினால் பாதகமில்லை.

ஸபைகள் வேலைசெய்யும் பரப்புகள்.

13. எல்லா அங்கத்தினர்களுடைய ஒன்றுசேர்ந்த ஜாமீன் கிடைக்கும் காரணத்தாலும், தனி அங்கத்தினனுக்குக் கிடைப்பதரிதான மலிவான நாணயம் ஸபைக்குக் கிடைப்பதாலும், ஒவ்வொரு அங்கத்தினனும், மற்றொரு அங்கத்தினன் வாங்கும்தொகைக்கு உத்தரவாதத்தை வகித்தல் வேண்டும்; அவ்வாறு செய்வது வெறும்பாவனையாகமட்டும் இருக்கக்கூடாது; அவ்வுத்திரவாதம் மனப்பூர்த்தியான உத்திரவாதமாக இருத்தல் வேண்டும். ஆதலால் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் நேரில் பரிசயம் செய்துகொண்டு, ஸபையோடு பற்று வரவு செய்து கொள்ளுகிற விஷயத்தில், ஒருவரையொருவர் ஸரியான வழியில் நடக்கச்செய்து பரஸ்பர ஸகாயம் செய்து கொள்ளல்வேண்டும். சில செல்வாக்குள்ளவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு தங்களுக்குப் பிடிக்காதவர்கள் உள் நுழைய இடமில்லாமல் திக்பந்தனம் செய்யப்பட்ட கோஷ்டிகளாக ஸபைகள் ஆய்விடக்கூடாது; அங்கத்தினரைச் சேர்க்கும் விதிகள் அநாவசியமான கட்டுப்பாடுகள் உள்ளவைகளாய் அங்கத்தினர் தொகையைப் பெருக்குவதற்கு இடைஞ்சலாய் இருக்கக்

கூடாது. ஒவ்வொருவரும் பெறும் காணயத்திற்கும் மற்றவர்கள் உத்தரவாதம் வகிக்கும்படியாய் நிச்சயமாக்குவதற்கு என்னென்ன கட்டுப்பாடுகள் அவசியமோ அவைகளையெல்லாம் வைத்துக் கொண்டே தீரவேணும். இந்தக் காரணத்தால் ஒரு ஸபையின் அங்கத்தினர்கள் எல்லாரும் ஒரே கிராமத்தவர்கள் தான் இருக்க வேண்டுமென்பதை முக்கிய விதியாகச் செய்வது அவசியமாய் விட்டது. ஒரு ஸபையில் ஒரே கிராமத்தவர்கள்தான் இருக்க வேண்டும் என்பதும், ஒரு கிராமத்தில் ஒரே ஸபைதான் இருக்க வேண்டும் என்பதும் சிலாக்கியமான பொதுவிதிகள்; இதற்குச் சில விலக்கு விதிகளும் இருக்கின்றன. உதாரணமாக, எக்கெங்கே சில கிராமங்களின் கூட்டத்தை ஸௌகரியமான கூட்டுறவு அங்கமாக அமைக்கப் பொருந்துமோ, அங்கேயெல்லாம் ஒரு கூட்டுறவுச் சபை ஏற்பட்டு ஜனங்களுக்கு நன்மை செய்யலாம். எங்கே விஸ்தாரமான நிலப்பரப்பின் மேலே சிதறி இருக்கின்ற இனத்தவர், எக்காரணத்தாலாவது முற்றிய மன ஒர்மை பெற்று பொதுக்கடனின் பொருட்டு ஒன்றுசேர்ந்து உத்தரவாதம் வகிக்க சக்தி உள்ளவர்களாயும் மனம் உள்ளவர்களாயும் இருக்கிறார் களோ அங்கே, ஒரே ஸ்தலத்தவராய் ஸபையார் இருக்கவேண்டு மென்கிற விதியைக் கண்டிப்பாக அநுஷ்டிக்கக்கூடாது. ஆகவே ஒரே மரபு, வகுப்பு, ஜாதி அல்லது தொழிலைச்சேர்ந்த அங்கத் தினர்கள், ஒரே கிராமத்திலோ, கிராம ஸமூகங்களிலோ, வாஸம் செய்யாவிட்டாலும்கூட, ஒரே கூட்டுச் சபைக்கு உறுப்புகளாக அவர்கள் ஆகலாமென்று சட்டம் இடம் கொடுக்கிறது. இதே மாதிரி, ஒரு கிராமம் மிகவும் பெரிதாக இருந்து அதில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் நன்றாக அறியாதிருக்கக்கூடிய ஸந்தர்ப் பங்களிலும், அல்லது எந்தக் காரணத்திலாவது ஒரு பிராந்தத்துக் குடிமக்களின் ஒரு பாகத்தவர் மற்றொரு பாகத்தவருக்கு ஒரு மித்த உத்தரவாதத்தைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாத ஸந்தர்ப்பங்களிலும், ஒரு கிராமத்திற்கு ஒன்றைவிட அதிகமான ஸபைகள் இருக்கும்படி இடங்கொடுக்கலாம். ஆனால்

ஒரு அவசியமான விதியை உறுதியாக அநுஷ்டிக்கவேண்டியது ; அதாவது, பெயருக்கு மாத்திரமேயன்றிக் கிரியாம்சையிலும் கூட ஒருமித்த உத்தரவாதமுள்ளவர்களாக இருக்க மனமுள்ளவர் களாயும் சக்தியுள்ளவர்களாயும் இருக்கும் அவ்வளவு அந்நியோ அந்நியமைத்திரமுள்ளவர்களைச் சபைகள் அங்கத்தினராகப் பெறல் வேண்டும் என்பதே.

இதே மாதிரியான காரணத்தில் தான், ஒன்றிரண்டு புஷ்டி வந்தர்களான அங்கத்தினர்களோடு பல ஏழைகளான எழுத்து வாஸனையறியாதார் சேர்ந்த கூட்டுறவுச் சபையை அமைத்தல் அநுசிதமென்று நிஷேதிக்கப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஸம்பவத்தில் ஒரு அபாயமுண்டு ; அங்கத்தினரில் பெரும்பான்மை யோருக்குப் பொதுவான லாப நஷ்டங்களோ, பரஸ்பர உத்தர வாதம் உணருதலோ இருக்க இடமிராது. இதே மாதிரி, கடன் கொடுப்பவர்களும், கடன் வாங்குகிறவர்களும் சேர்ந்திருக்கும் ஒரே ஸபையில் லாப நஷ்ட விரோதம் எளிதில் உண்டாகலாம். இந்தக் காரணத்திஞல், எளிய விவஸாயிகளின் ஸபைகள், உள்ளூர்க் கந்துவட்டி வியாபாரிகளைத் தங்களோடு சேர்த்துக் கொள்ள ஸம்மதிப்பதில்லை. ஆயினும், ஸபை அங்கத்தினஞக இருக்கும். பணக்காரனின் நோக்கங்கள் ஸந்தேகத்துக்கு இட மில்லாதிருக்கும் ஸந்தர்ப்பங்களில், ஸபைக்காரியங்களில் நேரே பாகம் வகித்து ஸபைக்கு உதவிசெய்ய அந்த தனிகன் விரும்வது எவ்வித ஐயுறவிற்கும் இடமில்லாதிருக்கும்போது, அங்கத்தினரின் லாபநஷ்டங்களைத் தனது லாப நஷ்டங்களோடு ஒன்ருகச் செய்து கொண்டால், அத்தகைய தனிகனை ஏழைகள் ஸபையில் சேர்த்துக் கொள்ள ஆட்சேபணை செய்யவேண்டியதில்லை ; இத்தோடு கூட, வெவ்வேறு பருவங்களில் கூட்டு நாணயம்வேண்டும் வெவ்வேறு வகுப்பைச்சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே ஸபையாகச் சேர்ந்து கொண்டு ஒவ்வொரு இனத்தவர் தேவைகளையும் மற்ற இனத் தவர்கள் நிவர்த்தி செய்து கொண்டு வரலாம். ஆயினும் பின் வருவதை உசிதமான பொதுவிதியாக அநுஸரித்தல்வேண்டும் ;

அதாவது, ஒரு ஸபையின் அங்கத்தினர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லை ஸாகத்திற்குள் இருந்துவருவது மாத்திரம் போதாது; அதனோடுகூட ஒருமித்த லாப நஷ்டமுடையவர்களாகவும் இருத்தல்வேண்டும். இதுவுமன்றி, வெளிப்புறத்திலிருந்து வரும் ஸகாயக்காரர்கள் பங்குகளை வாங்கிக்கொள்வதையும் அங்கத்தினராகத் தங்களை தாகல் செய்துகொள்வதையும் விட தங்கள் பணத்தை நிக்ஷேபதனமாக (டிபாஸிட்டுகளாக) ஸபைகளுக்குக் கடன் கொடுத்து வைத்தலே மேலானது.

*கடன் தொகைக்கு ஜாமீனாக அல்லது உத்தரவாத முள்ளவர்களாக இருக்கும் விதம்.*

14. கூட்டுமுறைச் சட்டத்தின்படி, அந்தந்த மாகாணத்துத் துரைத்தனத்தார் பிறப்பித்த விசேஷக் கட்டளைகள் இல்லாத போது, இந்தியாவின் விவசாயக் கூட்டு நாணய சபையின் அங்கத்தினர் உத்தரவாதத்திற்கு (லாப நஷ்டத்திற்கு பாத்தியப்படுதலுக்கு) சட்டப்பிரகாரம் எல்லையே இல்லை. அதாவது சபை வாங்கும் கடனுக்கு ஒவ்வொரு அங்கத்தினனும் தன் முழு சொத்தையும் கொண்டு பாத்தியப்பட வேண்டியது; அநுஷ்டானத்தில், இவ்வித உத்தரவாதம் இத்தேசத்திலுள்ள இம் மாதிரியான எல்லாச் சபைகளிலும் அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. இவ்வளவிற்குத்தான் அங்கத்தினர் லாபநஷ்டத்திற்கு பாத்தியப் பட வேண்டுமென்று எங்கே சட்டப் பிரகாரம் எல்லை ஏற்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட விவசாய சம்மந்தமில்லாத சபைகளிற்கூட அவைகளிற்பாதி, பூர்ண உத்தரவாதத்தை ஆதாரமாக உடையவைகளாக வரையறுக்கப்படாதவையாய் இருக்கின்றன; அநுபோக பூர்வமாகத் தெரியவருவது யாதெனில், ஜாமீனுக்காக சொற்ப சொத்தைமாத்திரம் வைக்கக்கூடிய எளியவர்கள் நியாயமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு உசிதமான வட்டிக்கு மூலதனம் பெறுவதற்குப் பூர்ண உத்தராவாமே ஏற்ற உபாயம் என்பதே. பூர்ண உத்தரவாதம் வரையறுக்கப்படாத பொறுப்பு என்கிற கருத்து ஜனங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்குமோ என்பது ஒரு சந்தேகமாக இருந்தது. இந்த ஒரு காரணத்தை

மாத்திரம் கொண்டு, மேற்கொள்ளக்கூடாத இடைஞ்சல்கள் நேரிடக்கூடுமென்று எதிர்ப்பார்த்தார்கள். ஆயினும் கூட்டுமுறை உணர்ச்சி, இந்தியா நாட்டினருக்கு சகஜமாகவே பழக்கத்தில் தெரிந்த சங்கதி. ஆதலால், பூர்ண உத்தரவாதக் கருத்து நமது நாட்டில் யாதொரு ஆட்சேபணையும் இன்றி ஏற்றுக்கொள்ளப் படுகிறது. வாஸ்தவத்தில், கிராமாந்தரங்களில், குறைந்த உத்தர வாதத்தைவிடப் பூர்ண உத்தரவாதமே அதிக நன்றாக உணரப் படுகிறது. கிராம நாணய வியவகாரத்திற்கு இதுவே பூர்ணக் கூட்டுறவு ஆதாரமாக ஏற்பட்டிருக்கிறது. பல சங்கங்கள் சேர்ந்த கூட்டுச் சபைகளில் அல்லது மத்திய சங்கங்களில், அவயவமாக இருக்கும் ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்ட ஒரு ஐக்கிய சங்க மாக இருக்கும்போது, அம்மத்திய சபைகளில் குறைந்த உத்தா வாதமே வழக்கமான விதியாக இருக்கவேண்டுமென்று சட்டத் தின் பிரகாரம் விதிக்கப்பட்டிருக்கிறது. நகரதனசாலைகளிலோ, இரண்டுவித உத்தரவாதங்களில் எதுவேண்டுமோ அதைப் பொறுக்கிக்கொள்ளலாமென்று இடங்கொடுக்கப்படுகிறது; ஆயி னும், நகர தனசாலைகளில், அங்கத்தினருக்குள்ளே ஐக்கியசக்தி குறைந்திருப்பது வழக்கமாகையாலும், தொழில்செய்யும் சாமர்த் தியம் அதிகமாக இருப்பதாலும், குறைந்த உத்தாவாதமே வரை யறுக்கப்படாத உத்தரவாதத்தை விட ஏற்றதாக இருக்கிறது.

பங்குகளும் லாபங்களும்.

15. பங்குகளை வைத்துக்கொள்ளுதலும், லாபங்களைப் பங் கிட்டுக் கொள்ளுதலும் கண்டிப்பான ரெய்பெயிஸன் கருத்துகளு க்கு விரோதமாக இருக்கின்றன. பங்குகள் என் பவை எப்போதும் லாபத்தை பாகம் செய்து கொள்ளும் வியாபாரத்தோடு சம்மந்தப்பட்டிருக்கின்றன; அவை களின் முக்கியமான கருத்துகளில் ஒன்று யாதெனில், அங்கத் தினர்களின் உத்தரவாதத்தைக் குறைப்பதேயாம்; இத்துடன், லாபத்தை பாகித்துக்கொள்ளுதல், இயற்கையாகவே லாபம் தேடு வதற்கு வழி நடத்துகிறது. ஆதலால், முக்கியமாய், ரெய்பெயி ஸன் கருத்துகளை ஆதாரமாகக்கொண்ட இந்த தேசத்துக் கூட்டு

முயற்சி விஷயத்தில், ராஜ்ய தந்திரம் எப்படி இருந்து கொண்டு வருகிறதெனில், பங்கு வைத்துக் கொள்ளுதலையும், லாபங்களை பாகித்துக் கொள்ளுதலையும், தென்புப் படுத்தாமலும் அங்கீகரிக்காமலும் இருந்துவருகிறது. இந்தியா, ஐரோப்பா இந்தஇரண்டு இடங்களிலும், அநுபோக பூர்வமாகத்தெரியவருவதின் பிரகாரம், மிகவும் கண்டிப்பான மாதிரியுள்ள ஸபைகள் அங்கத்தினரைச் சேர்க்கிற விஷயத்தில் எப்போதும் சித்தியடைகிறதில்லையாதலால் தகுந்த முன் ஜாக்கிரதைகள் செய்துகொண்டு ரெயிபெயிஸன் அநுஷ்டானங்களினின்று விலகி நடப்பது அவசியமென்று கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. உதாரணமாக சென்னை பிரதேசத்தில் ஸபைகள், பெரும்பாலும், பங்குவீத மூலதனத்தை மிகவும் ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன; பஞ்சாப்பிலும், ஐக்கிய மாகாணத்திலும், பர்மாவிலும், ஒருவாறு மாறுதலடைந்த பங்கு வீத லாபக்கிரமம் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாடு பஞ்சாப் ஜில்லாக்கள் ஒன்றின் கிருஷிகர்களால் பெரும்பான்மையான கருத்தாக அநுஸரிக்கப்பட்டது; இது ஐரோப்பாவில் தெரிந்த எந்தமாதிரி ஸபையுடனும் கண்டிப்பாய் ஒட்டி நடந்துகொள்ளவில்லை; பஞ்சாப்பில் அநுஷ்டிக்கப்பட்ட இந்த ஏற்பாட்டின்படி ஒவ்வொரு கிராமசபையும் பங்குவீதமாக ஏற்பட்ட ஓர்மூலதனத்தையுடையதாக இருக்கிறது; இந்த மூலதனத்திற்கு அங்கத்தினர்கள் பத்து வருஷங்களுக்குள் 10 சந்தாக்களாகத் தங்கள் கையொப்பத்தொகையை செலுத்திவிடுகிறார்கள்; முதல் வருஷம் ஆனபிறகு சேருகிற அங்கத்தினர்கள், முதலிலேயே தாங்கள் அந்த சபையில் சேர்ந்திருந்தால் தாங்கள் எந்த சந்தாக்களைச் செலுத்தி யிருப்பார்களோ அந்தத் தொகைகளையும் கூட்டித் தாங்கள் சபையில் சேரும் சமயத்தில் செலுத்திவிட வேண்டியது; கொஞ்ச காலத்திற்கு முன்வரையில் தனசாலை பத்து வருஷங்களுக்கு உயிரோடிருந்த பிறகு அங்கத்தினர் தங்கள் பங்குகளை வாப்ஸ் வாங்கிக் கொள்ளலாம் என்கிற விதி ஏற்பட்டிருந்தது; இப்பொழுது ஒருபுதிய கிளைச்சட்டம் ஏற்பட்டிருக்கிறது; அதன்

படி, முந்தியே செலுத்தப்பட்ட எல்லாப் பங்குகளும் திரும்பிக் கொடுக்கப்படமாட்டாவெனத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு பங்கின்மேலும் கிடைக்கும் லாபம் அப்போதைக்கப்போது பகர்ந்து கொடுக்கப்படுகிறதில்லை; ஆனல் பத்து வருஷங்கள் ஆனபிறகு கூடுதலான லாபத்தொகையினின்று நிதியின் ஆபத் ஸகாயதனத்தின் பொருட்டு நாலில் ஒரு பங்கு மிகுத்து வைக்கப்பட்டபிறகு பங்குவீதத்தின் மதிப்போடு சேர்க்கப்படுகிறது; இவ்வாறு உருவாக்கப்பட்ட அபிவிருத்தி யடைந்த பங்குகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதன் பிறகு ஒரு லாபவிகிதம் விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு பத்து வருஷங்கள் ஆன பிறகு, ஆதியிலேற்பட்ட பங்குச் சந்தாக்களும் சம்பாதிக்கப்பட்ட லாபங்களும் சேர்ந்த ஒரு மூலதனம் சபைக்கு ஏற்படுகிறது. இந்த மூலதனத்தோடு, வருஷாந்திர லாபத்தில் குறைந்த பட்சம் காலில் ஒரு பாகமாவது சேர்ந்து கொண்டே வருகிறது. ஐக்கிய மாகாணத்திலும் பர்மாவிலுமுள்ள சாதாரண விவசாய சங்கங்கள் இம்மாதிரி ஏற்பாடுகளை ஆதாரமாக உடையன. பங்குகளையும் லாபம் பாகித்தலையும் உபயோகப்படுத்திய மாகாணங்களில் கூட்டு நாணய முயற்சிக்கு உண்டாயிருக்கும் ஜயத்தை யோஜித்துப்பார்க்குங்கால், இதற்கு முன்னிருந்த கடுமையான விதிகளைக்கொஞ்சம் சரளப்படுத்தி ஜயத்திற்கு அநுகூலமான இந்த முறைகளை உபயோகிப்பது அவசியமாகிவிட்டது. ஒரு சபையின் முக்கியமான கருத்துகளில் ஒன்று யாதெனில் கூடியமட்டும் வெளி ஒத்தாசையைத் தேடாமல் தனக்குச் சொந்தமான மூலதனத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டியதுதான்; இதற்குச் சந்தேகமில்லை. பண முடையான காலங்களில், சபையில் போட்டுவைக்கும் டிபாஸிட்டு என்னும் நிக்ஷேபதனம், அங்கத்தினருடையதாக இருந்தால்கூட அபாயத்திற்குக் காரணமாக இருக்கக் கூடியதுதான். பிறர் இஷ்டப்பட்டபோது எடுத்துக்கொண்டு போய்விடமுடியாத தன் சொந்த முதலை எவ்வளவிற்கு உடையதோ அவ்வளவிற்குப் பணந் தட்டான காலத்தில் அதன் நிலைமை வெகு நன்றாக இருக்கும்.

இது திண்ணம். பங்குகள் இருப்பதினாலே உத்தரவாகக் குறைவு என்று அர்த்தம் ஆகாதிருக்கும் பட்சத்தில், ஆபத்தனத்தோடு சேர்த்துப் பார்க்கும்போது, ஒரு சங்கத்தின் மெய்யான பொறு மானத்தின் மிக்வும் விசேஷபாகமாக அப்பங்குகள் ஆகின்றன. அவ்விதம் எடுத்துவிடக்கூடாத பங்குகள் செட்டுக்கும் ஒரு தூண்டுதலாக இருக்கிறது. வயோதிகம், துரதிர்ஷ்டம் முதலிய வற்றால் துன்புறாமற்காக்க ஒரு ரக்ஷணையாகவும் இருக்கிறது. லாபம் பகர்ந்து கொடுத்தல் இதைவிட ஆட்க்ஷேபத்திற்கு இட மான சங்கதிதான்; பங்குகள் இருக்கும் பட்சத்தில் ஆட்சேபணை யின்றி ஒரு நியாயமான லாபவிநியோகம் செய்யப்படலாம்; நிக்ஷேபதனமாகிய டிபாஸிட்டுகளின் மேல் வட்டிமட்டும் கொடுக் கையில், பங்கு வீதங்களை ஒட்டி லாப பாகங்களைக் கொடாதிருத் தல் நியாய விரோதமாகும். இதைவேறு விதமாகவும் எடுத் துரைப்போம்; கொஞ்ச காலத்திற்கு மாத்திரம் சபையிடத்தில் டிபாஸிட்டில் தன் பணத்தைப் போட்டு வைப்பவரைவிடத் தன் பொருளைச் சாசுவதமாக சபையாரிடத்தில் போட்டு வைப்பவர் நியாயமான பிரதிபலனை அடையப் பாத்திரராவர். இந்தக் கார ணங்களால் நமக்குக் கிடைக்கும்பொது முடிவுயாதாகத் தோன்று வதெனில், பங்கு வீதங்களும் லாபவிநியோகங்களும் விரும்பத் தக்கவைகளா இல்லையா என்று ஆராய்ந்து பார்க்கும்போது, எந்தக்கருத்துக்களைக் கொண்டு அவைகள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் படுகின்றன என்பதைக் கவனிக்கவேண்டி வரு கிறது. கருதியது அங்கத்தினரது தனித்த லாபமாகவாவது அல்லது அவர்களிற் சிலருடைய லாபமாகவாவது மட்டும் இருக்கும் பட்சத்தில், இந்த இரண்டும் ஆட்சேபணைக்கு இடமான வைகளே. ஆனால் முக்கியக் கருத்து சங்கத்தின் சாசுவதமான ஊற்றங்களை அபிவிருத்தி செய்வதாகவும், முதல் போட்டவர் களுக்கு மிதமான உருசையையும் தூண்டுதலையும் தருவதாகவும் இருக்கும் பட்சத்தில், இந்த இரண்டு உபாயங்களும் (பங்கு களும் லாபவிநியோகங்களும்) கிரமமானவைகளே. இவைகளால்

சீர்கேடு வராவண்ணம் காப்பதற்கும், போதிய சட்ட பூர்வமான ரெக்ஷிக்கத் தக்க ஸாதனங்கள் இருப்பதால், அஞ்சவேண்டிய தில்லை; லாபப்பாகுபாட்டோடு கூடிய பங்கு ஏற்பாடு அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, கிரமத்திற்கு அதிகமான லாபம் ஸம்பாதித்தலைத்தடுத்துப் போடுவதற்குத் துரைத்தனத்தாருக்கு எப்போதும் அதிகாரம் இருக்கிறது; எப்படிக் கிரமத்திற்கு மிகுந்த லாபத்தைப் பங்கு போட்டுக் கொள்ளாமல் தடுக்கிறார்கள் என்றால், (1) ஒவ்வொரு அங்கத்தினனும் இத்தனை பங்குகளுக்குமேல் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று வரையறுப்பதினாலும், (2) கொடுக்கப்பட்ட கூடுதலான லாபத்தொகையை இம்மட்டுக்குத் தான் விநியோகிக்கலாம் என்று ஒழுங்கு படுத்துவதினாலும் தான். ஆயினும் இவ்வாறு அமைக்கப்பட்ட ஸபைகளை மெத்த உஷாராய் கவனித்துக் கொள்ளல்வேண்டும்; ஏனெனில், அமிதமான லாப விநியோகங்கள் நடக்காமல் இருக்க வேண்டியதும், கூட்டுறவின் முக்கிய அம்சமாகிய அங்கத்தினரின் பரஸ்பர உபகாரமும், எப்போதும் மனத்திற்கெதிரே உறுதியாய் வைத்துக்கொள்ள வேண்டிய லக்ஷயங்கள்.

ஜாமீனின் சொரூபங்கள்.

16. அநேகமாதிரி கடன் வாங்குகிறவர்களிடத்திலிருந்து வாங்கப்படவேண்டிய ஜாமீன் தன்மையைப் பற்றிக் கவனிக்க வேண்டிய முக்கிய கோ-ஆப்பரேட்டிவ் நீதி அம்சங்கள் யாவையெனில், வாங்கும் கடனுக்கு அங்கத்தினருடைய பூர்ணமான பரஸ்பர உத்தரவாதமும் இருக்கிறதா என்றும் தாங்கள் கடன் வாங்கும் தொகைகளை லாபகரமான மார்க்கங்களில் உபயோகப்படுத்துகிறார்களா என்றும் பார்ப்பதுதான். வரையறுக்கப்படாத உத்தரவாதமுள்ள எல்லாச் சபைகளிலும், அச்சபைகளின் தேவைக்காக அங்கத்தினருடைய முழுசொத்தும், அவசியம் நேரிடுமானால், பாத்தியப்படவேண்டியதுதான். ஆயினும் அங்கத்தினர் ஒழுங்குத்தவறு, சபைக்குக் கெடுதல் செய்யாமலும், வெளிப்புறத்தாரால் சபைக்குத் திங்கு நேரிடாமலும், வாங்கப்படும் பலவித ஜாமீன்களிலும்

முதல் பக்ஷமானது அங்கத்தினரது யோக்கியதையே; அங்கத்தினரின் ஸ்தாவர சங்கம சொத்துக்களாகிய மற்ற ஈடுகளெல்லாம் அதற்கு இரண்டாம் பக்ஷமானவைதான். கடன் வாங்குகிறவனுடைய சரீரபாத்ய ஜாமீனை மாத்திரம் ஜாமீனாக வைத்துக்கொண்டு சிலசமயங்களில் நாணயம் கொடுக்கப்படுவது உண்டு; ஆயினும் இரண்டு ஒரு இதர நபர்களை ஜாமீனாக வேண்டுதல் சாமானிய அநுஷ்டானம்; ஆயினும் வரையறுக்கப்படாத உத்தரவாதத்தையுடைய சபைகள், சங்கம சொத்துக்களைக் கொதுவையாக ஏற்றுக்கொண்டு கடன் கொடுக்கும் அநுஷ்டானத்திற்கு சட்டம் தென்பு தருவதில்லை; அசையாப்பொருள்களின் அடமானத்தின் மேல் ஒரு சங்கத்தார் கடன் கொடுப்பதை மாகாண துரைத்தனத்தார் தடைசெய்து விட்டாலும் விடலாம்; அல்லது, அவ்வித லேவாதேவியை ஒருவரையறைக்கு உள்ளாக்கினாலும் ஆக்கலாம். அநுபோகத்தில் அசையும் பொருளை ஜாமீனாக ஏற்றுக்கொள்வதைக் காண்பது அருமை; கொடுக்கப்பட்ட கடன் தொகையின் பத்திலொரு பாகத்திற்கு மட்டுமே ஒத்தி அல்லது பந்தக சொத்து பாத்தியப்படுகிறது. நிலபாத்தியப் பதிவு தஸ்தவேஜுகள் நன்றாக ஏற்பட்டுப்போன மாகாணங்களில் ஒவ்வொரு மனிதனுடைய சொத்துவிபரம், அதன் மேல் சுமந்திருக்கும் கடன் பாத்தியங்கள் இவைகளை விசாரித்து அறிந்து கொள்ளுதல் எளிது. ஆதலால், பிரத்தியேக பந்தகங்கள் முன்போலவே அவ்வளவு அவசியமல்ல; சில பிராந்தங்களிலோ, வெளியிலுள்ள பணச் சந்தைகளில் பந்தகத்தின்மேல் கொடுக்கப்படும் கடனுக்குக் கூட்டு நாணய சபைகளிலிருந்து எவ்வளவு சுலப வட்டிக்குக் கிடைக்கிறதோ அவ்வளவே விகிதத்திற்குக் கிடைக்கிறது. வழக்கமாக நடப்பதுபோல் பந்தகத்தின் மேல் வாங்கப்பட்ட கடனுக்கு, கெடு நீண்டதாக இருக்கும் இனங்களில் முதலை வேண்டியபோது உபயோகித்துக் கொள்ள முடியாத விதமாய்க் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ளுதல் ஆட்சேபணைக்கு இடமாக இருக்கிறது. ஆயினும், பந்தகம் கூடவே கூடாதென்று கண்டித

மான விதிகள் ஒன்றும் இல்லை. எங்கே நிலம் எப்போதும் பந்தகம் செய்யப்பட்டு வருகிறதோ அப்படிப்பட்ட சென்னை பர்மா முதலிய மாகாணங்களில், இவ்வித ஜாமீனே அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகிறது. அவனுடைய சொத்து பந்தகத்துக்குள்ளாயிருக்கிறதென்கிற சங்கதியே அங்கத்தினனாகிய அவனது அச்சொத்து முழுதும் சங்கத்திற்கே ஏகாந்தமாகப் பிணையாகிய நிற்கிறதென்பதைக் காட்டுகிறது. எங்கே தன் நிலத்தை தவிர ஜாமீனாகக் கொடுக்கக்கூடிய சொத்து ஒன்றுமில்லாமல் அங்கத்தினர் இருக்கின்றனரோ அப்படிப்பட்ட புதிதாகக் குடியேற்றம் செய்யப்படும் நாடுகளில், பந்தக ஜாமீன்கள் உபயோகமுள்ளன. இவ்வித ஜாமீன்கள் வழக்கமாக உபயோகிக்கப்படும் ஸந்தர்ப்பங்கள் யாவையெனில், எங்கே அக்கிரமான வட்டிக்கு ஒருவன் கடன் வாங்கி, பிறகு அதினின்று தன்னை விடுவித்துக் கொள்வதற்காக முன்னிலும் நயமான நிபந்தனைகளின் பேரில் அதே ஸொத்தை ஸபைக்குக் கொதுவை வைக்கிறானோ அந்த ஸந்தர்ப்பங்களில் தான்.

17. இது விஷயமாக ஒரு கேள்வி சில ஸமயங்களில் கேட்கப்படுகிறது; அது யாதெனில், வெளிப்புறக் கடன்களினின்று வெளிப்படாதவனை ஒரு ஸபையில் சேர்த்துக்கொள்ளலாமா என்பதுதான். அநுபோக பூர்வமாக இதற்குக் கொடுக்கக்கூடிய பதில் யாதெனில், வெளிக் கடன்களினின்று ஒரு அங்கத்தினன் விடுபடுகிறவரையில் அவன் சேர்ந்த கூட்டு நாணய ஸபை அவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தானதாகச் சொல்ல முடியாது; ஒருவனுடைய வெளிக்கடன்கள் கொடுத்துத் தீர்க்கப்பட்டாலொழிய, அந்தரிண விமோசனமாகிற வரையில், அவனை எந்தக் கூட்டுறவுச் சங்கமும் அங்கத்தினனாகச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று சொல்லுதல் அதிபூர்ணமான யுக்தியைச் சொல்லிக்கொண்டு ஸாத்தியமில்லாத காரியத்தை யத்தனித்தல் ஆகும்; ஒருவன் பட்ட கடனை எப்பொழுதாவது கொடுத்துத் தீர்த்துவிடலாம் என்கிற நம்பிக்

முந்தின கடன்கள்

கையே கொள்ள முடியாத அதி பரிதாபமான இனங்கள் உண்டு; அப்படிப்பட்ட பேர்வழியைச் சபையில் சேர்த்துக் கொள்ள மாட்டோம் என்று மறுத்து விடுதலே நியாயமான மார்க்கம். ஆயினும், முதல்முதல் பார்க்கும்போது நம்பிக்கைக்கு இடமில்லாதவை போலத்தோன்றும் அநேக இனங்கள் உள்பட சீர்திருத்தக் கூடியன பலஉள; அவைகள் விஷயத்தில் கூட்டு நாணய ஸபைகள் அதிக நன்மை செய்யலாம். பல சங்கங்களின் அதிகாரிகளான பஞ்சாயத்தார்கள் ராஜி செய்துவைக்கிற வேலையை ஒப்புக்கொண்டு, உடனே கைமேலே பணம் கொடுத்துத் தீர்ப்பதாய் ஏற்றுக்கொள்வதினால் கடன்காரர்களிடமிருந்து அதிகக் கடன் தொகையைத் தள்ளிக் கொடுத்தலாகிய ஸகாயத்தைப் பெற்றுக்கொடுத்து கடனாளிக்கு பாரம் குறையச் செய்திருக்கிறார்கள். ஒரு சங்கத்தில் சேர்ந்துகொள்ளுமுன்னே நாளது வரையிலுள்ள ஸகல கடன்களையும் மறைக்காமல் வெளியிட்டுச் சொல்லல் அவசியம். ஈடுகள் கொடுத்து தாகல் செய்யப்படாத கடன் அங்கத்தினனுக்கு எவ்வளவு இருக்கிறது என்பதை நிஷ்கருஷித்தறிவது சிலஸமயங்களில் மிகவும்சிரமமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட தேதியை கெடுவாக வைத்துக்கொண்டு அதற்குள்ளே ஸபையிற் சேர்ந்த அங்கத்தினன்மேல் தங்களுக்கு இருக்கும் கடன் பாத்தியங்களை யெல்லாம், கடன்கொடுத்தவர்கள் எல்லோரும் ஸபையாரிடம் தாகல் செய்துவிடல் வேண்டுமென்று அவர்களுக்கு விளம்பரம்செய்து, அத்தேதிக்குள் தங்கள் பாத்யங்களை தாகல் செய்யாவிடில் அதன் பிறகு புதியனவாகக் கொண்டாடப்பட்ட பாத்தியங்கள் செல்லுபடியாகாவென்று செய்விக்க சபையாருக்கு அதிகாரம் தரல்வேண்டுமென்பதாக யோஜனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன; இந்த யோசனைகள் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், அங்கத்தினரின் வெளிக்கடனைக் கையாடுவதில் சங்கத்தாருக்கு அதிகாரம் பலப்படும். நாட்டுப் புறத்துக் கடன்களைத் தீர்ப்பதாகிய கடினவேலையில் சித்திபெறுவதற்கு மற்றெவ்வித உபாயங்களையும்விடக் கூட்டு நாணய முயற்சியையே நாம் நாடல்

வேண்டும். நாட்டுப்புறத்துக் கடன்களை விமோசனம் செய்விப்பதாகிய இந்தக் கருத்துடன் எத்தனையோ யோசனைகள் பொது ஜனங்களுக்கு முன்னாலே கொண்டுவரப்பட்டிருக்கின்றனவென்றாலும், மற்ற யுக்திகளினால் உண்டாக முடியாத சௌகரியங்கள் பல கூட்டு நாணய முயற்சியால் உண்டாகத்தக்கன. நிலமுடையவர்களுக்கு மாத்திரமேயன்றி நிலமில்லாதவர்களுக்குக்கூட கூட்டு முயற்சி பயன் படத்தக்கது. பொது ஐவேஜியை ஊதாரித்தனமாய் செலவிடாமலே வெளிப்புறக் கடனைக் குறைப்பது இதனால் ஸாத்தியமாகிறது. இவைகளையெல்லாம்விட அத்தியாவசியமானது யாதெனில், கடனாளிக்கு ரிணவிமோசனமான பிறகு வருங்காலத்தில், கடன், செட்டின்மை, இவைகளுக்கு இடங் கொடுக்காத நிலைமையில், அவனை நிலைநிறுத்த, கூட்டு நாணய முயற்சிக்குச் சக்தியுண்டு.

கடன் வாங்குவதின் லெக்ஷயங்கள்

18. இன்னும் ஒரு விஷயத்தைப் பற்றிப் பல ஸமயங்களில் பலவிதச் சந்தேகக் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன; அவ்விஷயம் யாதெனில், சில லாபம் கிடைக்காத முயற்சிகளுக்காக அங்கத்தினருக்குக் கடன் கொடுக்கலாமா என்பதுதான். சட்ட நிரூபணம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இந்த சங்கதி யோஜிக்கப்பட்டது; துரைத்தனத்தார் தீர ஆலோசனை செய்த பிறகு எதற்காகக் கடன் வாங்கப்படுகிறதோ அந்த நோக்கத்தை எவ்விதத்திலும் தடை செய்கிறதில்லையென்று தீர்மானித்து விட்டார்கள். கொடுக்கப்பட்ட கடன் தொகையை இவ்விதமாகத் தான் செலவழிக்க வேணும், வேறு வழியாகச் செலவழிக்கப்படாதென்று முழுதும் தடை செய்தலும், எந்தக் குறிப்பிட்ட காரியத்திலாவது செலவிடப்பட்ட தொகை எந்த வரத்திலிருந்து கிடைத்தது என்று சொல்லுதலும், அஸாத்தியம்; இது நிற்க, உடனே பலனைத் தராத எந்தக் காரியத்திற்காகவாவது நாணயம் அளிக்கக்கூடாது என்று அற்றறுதியாய்த் தடைசெய்தல் சங்கங்களின் தீர்க்க ஜீவனத்திற்கு இடைஞ்சலாகும். இதற்கு முந்தி ஸாவகாரி எந்த ஸ்தானத்தில்

இருந்தானே அந்த இடத்திற் கூட்டு நாணய ஸபை இப்போது இருக்கிறது; எந்த எந்தக் காரியங்களுக்காகக் கடன் அவசிய மாகக் கொடுக்க வேண்டுமோ அவைகளுக்காகவெல்லாம் நாணயம் தரல் வேண்டும்; ஜனங்களுடைய பொது அபிப்பிராயப்படிக் குடும்பக் காரியம் பொதுக்காரியம் முதலியவற்றிற்காக வேண்டிய பணமெல்லாம் இந்தத் தலைப்பில் சேரவேண்டியதுதான்; அவ் வாறு சங்கத்தார் பணம் அளிக்கத் தவறினால், லேவாதேவிச் சாவகாரிகளைத் தேடிச்செல்லும்படி அங்கத்தினரைத் தூண்டுவதே யாகும். அநுபோகத்தினால் தெரிய வருவது யாதெனில், ஒன்று சேர்ந்தும், தனித்தனியாகவும் ஒருவருக்கொருவர் உத்திரவாத முள்ள அங்கத்தினர், கிராமப்பொது அபிப்பிராயத்திற்கு அதிகப் படியாகப் பொதுக் கூட்டுறவுக் காரியங்களில், கடன் பெற்றவன் செலவு செய்யாமற் பார்த்துக்கொள்வார்கள் என்பதும், அப்படிப் பட்ட விஷயங்களில் சங்கத்தாருடைய சொற்களை நாணயம் பெற்றவன் ஸந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகிறான் என்பதும் தான். கல்யாணம் சடங்கு முதலிய கூட்டுறவு, சமயநெறி அநுஷ்டானம், இவைகளின் பொருட்டு நாணயம் அளிப்பதினால் சங்கங்கள் தங்கள் அங்கத்தினர் நாணய முறிந்தவர்கள் செல்லும் பெரும்பாதைக்குச் செல்லாமல் அப்பாதைகளில் ஒன்றை அடைத்துவிட்டதாகும் என்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள்; இது மிகவும் உண்மையே. ஆயினும் பிரத்தியட்சமாய்ப் பலன் தராத காரியங்களின்பொருட்டுக் கடன் கொடுக்கும்பொழுது, சங்கங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான வழக்கம் ஒன்று உண்டு. கடன் வாங்கிக்கொள்ளும்பொழுது என்ன காரியத்திற்காகக்கடன் வாங்கப்படுகிறதென்று தெரியப்படுத்தவேண்டியதாகக் கண்டிப் பான விதி இருக்கிறது; அப்படிச் செய்வது, கடன் வாங்கிக் கொள்வது அவசியமான காரியமா என்று அங்கத்தினர் விசாரித் துத் தெரிந்துகொள்ளும் பொருட்டுத்தான்; உண்மையில், மற்ற லேவாதேவிகளோடு ஒத்துப் பார்க்கும்பொழுது, லாபங்கிடைத்த லில்லாத காரியங்களுக்காக நாணயம் வாங்கப்படுவது அபூர்வம்.

ஒரு குறித்த காரியத்திற்காக ஒரு கடன் தொகை கொடுக்கப்படும் போது, எதற்காக நாணயம் அளிக்கப்பட்டதோ அதற்காகவே அது மெய்யாகச் செலவிடப்படுகிறதா என்று பார்ப்பதும் அவசிய மாக இருக்கிறது.

துரைத்தனத் தார் சங்கங்களு க்குச்செய்து கொடுக்கக்கூடிய ஸௌகரியங்கள்

19. எம்மட்டிற்குச் சங்கங்கள் துரைத்தனத்தாரிடமிருந்து பொருள் மூலமாகவாவது அரசாட்சி ஒழுங்கு மூலமாகவாவது ஸகாயம் இப்போது பெறுகின்றன அல்லது பெற வேண்டுமென்கிற விஷயம் கீழே யோஜிக்கப்படு கிறது; ஆயினும், நேரிலே யல்லாமல், வேறு துவாராவாகக் கூட கூட்டு முயற்சி நியாயமாய் ஸகாயம் பெறக்கூடிய சில மார்க்கங்கள் இருக்கின்றன. ஸாமா ன்யமான கம்பெனிகளின் வியாபாரச் சட்டங்களின் விஸ்தார மான ஒழுங்குகளினின்று கூட்டு முயற்சி என்கிற முழுஸாதன அமைப்பும் எப்படி விலக்குப் பெற்றிருக்கிறதோ அவ்வாறே, ஸர்க்கார்க் கட்டணத் தலைச்செலவுகள், வருமான வரி, பதிவுத் தீர்வையாகிய ரிஜிஸ்தர்ச் செலவு முதலிய இனங்களின் தொகை யைத் தள்ளிக்கொடுப்பது உசிதம் என்று கண்டு கொள்ளப்பட்டி ருக்கிறது. இதுவுமன்றி, சில ஸந்தர்ப்பங்களில், கூட்டுமுயற்சிக் காரர் பணத்தை துரைத்தனத்தார் பொக்கிஷ இலாகா (திரஜரி) மூலமாக இஷ்டப்பட்ட இடங்களுக்கு அனுப்ப இடங்கொடுப்ப தினால் கூட்டுறவுச் சங்கங்களின் வேலைகளுக்கு அநுகூலம் உண் டாயிருக்கிறது; கூட்டுமுயற்சிப் பத்திரிகைகள் வர்த்தனிகள் முதலியவற்றிற்குத் துரைத்தனத்தாரே கையொப்பத் தொகையை அனுப்பி அவைகளைச் சபைகளுக்கு வரவழைத்துத்தந்து உதவி செய்யலாம்; இத்தோடு நில்லாமல், இன்னம் கொஞ்சதூரம் சென்று, கூட்டு முயற்சிச் சட்டத்தில் நிபந்தனை ஏற்பட்டிருக் கிறது போலக் கடன் வாங்கிறவனுடைய சொத்தின்மேல் மற்றக்கடன்களுக்கு முந்திய பாத்தியங்களை ஸ்தாபிக்கும்படி இடங்கொடுக்கலாம்; சங்கங்களின் பங்குகளை வெளிக்கடன் களின் பொருட்டு ஒருவரும் ஜப்தி செய்துகொள்ள முடியாமல்

விலக்கலாம்: கூட்டுமுயற்சியின் மார்க்கத்தில் அநாவசியமான தடைகள் இல்லாமற் செய்ய துரைத்தனத்தார் ஆவலாய் இருந்த போதிலும், இந்தக் கிளர்ச்சி முன்னுக்கு வருவதற்கு துரைத்தனத்தார் போதனையையும் ஆட்டி வைப்பையும் ஆதாரமாகச் செய்வது அதிகாரிகளின் ராஜ்யதந்திரத்தின் பாகமன்று. உதாரணமாக, இந்தக்கிளர்ச்சியை சிரத்தையோடு ஆதரித்து வருவோர் சிலர் வேண்டிக்கொள்வதுபோல, கடன் தொகைகளைத் திருப்பிப் பெறுவதற்கு, ஸாமான்ய நியாய சபைகளின் காலதாமதமான அதிகச்செலவுள்ள உபாயங்களுக்குப் பதிலாகக் குறுக்கு வழிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டபோது துரைத்தனத்தார் அதற்கு இணங்கவில்லை. மோசங்கள் செய்வதினால் சங்கங்களுக்குக் கொடுபடவேண்டிய ஐவேஜி கொடுபடாமல் நின்றுபோனது அருமையாக இருந்த போதிலும், சொத்தைத் திரும்பப்பெறுவதற்குச் சட்ட விரோதமான அதிகாரத்தைக் கொடுத்தல் தவறுதலான அன்பாகும். அப்படிப்பட்ட குறுக்குவழி அதிகாரங்கள் இல்லாமல், ஒரு சங்கத்தார் தங்கள் பொது ஜாமீனின் மூலமாகவும் தங்கள் நீதிநேறிச் செல்வாக்கினாலும் கடன் தொகைகளை வசூல்பண்ண முடியாதென்றால், அப்படிப்பட்ட தவறுதலுக்குக் காரணம் யாதென்றால், முதலாவது, அங்கத்தினரைப் பொறுக்குதலில் அஜாக்கிரதையாய் இருந்திருத்தல் வேண்டும்; அல்லது காரிய நிர்வாகத்தில் ஊழல் இருந்திருக்கவேண்டும். வேலை நிறுத்தம் செய்யப்போகும் சங்கங்கள் ஜனங்களின் பாத்தியத் தொகைகளைக் கொடுத்துத் தீர்க்க முயலுகையில், கிடைக்க வேண்டிய சொத்தைக் கைப்பற்றப்பிரயத்தனிக்கும்போது, அல்லது, மத்திய தனசாலைகளாகிய சென்றல் பாங்கிகள் தங்களின் உறுப்புகளாகிய கிளைச்சபைகளுக்கு விரோதமாகப் பிராதுகள் செய்யும் போது, குறுக்கு அதிகாரவழிகளை உபயோகிப்பது நியாயமாகுமானாலும்சரி, நியாயமில்லாதிருந்தாலும் சரி, ஒரு விஷயம் நிச்சயம். தனிச்சபைகள் தங்கள் அங்கத்தினரிடம் நடவடிக்கைகள்

வைத்துக்கொள்ளுவதில், அப்படிப்பட்ட உபாயங்களை உபயோகிப்பதால், கார்ய நிர்வாகத்தில் அவர்கள் அஜாக்கிரதையுள்ளவர்களாகித் தங்கள் கடமைகளைப் பூர்த்திசெய்ய முடியாதவர்களைச் சபையில் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்கிற ஜீவாதாரமான நீதியை அலெக்ஷயம் செய்யும்படி நேரிட்டுவிடும்.

சங்கங்களின் ஐவேஜிகள்.

20. சங்கங்களின் ஐவேஜிகள் பல உற்பத்திஸ்தானங்களினின்று கிடைக்கின்றன; வரும்படி கிரகிக்கப்படுகிறவிதங்கள் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு விதமாக மாறுபடுகின்றன. பெரும்பான்மையாக விவசாய சங்கங்களுக்கு முக்கியமான வரும்படி இனங்கள் நான்கு உண்டு. (1) பங்குக் கட்டணங்களால் சேரும் முதல் (2) அங்கத்தினர் சங்கத்தாரிடம் வட்டிக்கு வைத்திருக்கும் டிபாஸிட் தொகை; (3) அங்கத்தினரல்லாதார் சங்கத்தாரிடம் வட்டிக்கு வைத்திருக்கும் டிபாஸிட் தொகையும் கடன் தொகைகளும் (4) வேறு ஸபைகளிடமிருந்து பெறப்பட்ட டிபாஸிட் தொகையும் கடன் தொகையும் ஆகிய இவைகளே. இந்த வேலை செய்யும் முதல் நூற்றுக்கு எவ்வளவு வீதம் பல இனங்களினின்று ஆக்கப்படுகிறது என்கிற விவரம் பின் வருமாறு; பங்குக் கட்டணங்களினின்று 13; அங்கத்தினர் கொடுத்திருக்கும் கடனினின்றும் டிபாஸிட்டினின்றும் 10; அங்கத்தினரல்லாதாரிடமிருந்து கிடைத்த கடன் தொகையினின்றும் டிபாஸிட்டினின்றும் 11, வேறு சங்கத்தாரிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகைகளினின்றும் டிபாஸிட்டுகளினின்றும் 58; வேறு சங்கங்களினின்று கிடைக்கும் பணத்தை (கீழே 23வது பாராவில் குறிக்கப்படப்போகிற நடுத்தர சங்கங்களினால் முக்கியமாக வருவதை) விட்டு விட்டுப் பார்த்தால், அங்கத்தினரே பங்குவீதக் கட்டணங்கள் மூலமாயும், கடன் தொகை மூலமாயும், டிபாஸிட்டுகள் மூலமாயும் வெளிப்புறத்தாரைப் போல இரண்டு மடங்கை சங்கங்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று தெரியவரும். கூட்டுமுயற்சி

நோக்கத்தோடு ஊகித்துப் பார்த்தால், அங்கத்தினரைச் செட்டாக இருக்கும்படி தூண்டுதலாகிய கருத்துப் பலிதமாயிருப்பதைக் காணும்போது, கூட்டு முயற்சிக் கிளர்ச்சிக்குக் கிடைத்திருக்கும் லாபம் மிகவும் திருப்திகரமானதே; சில சங்கதிகளை கவனித்துப் பார்க்கும்போது, அங்கத்தினர் தங்களுக்கு வேண்டிய முழுதனத்தையும் தாங்களே சேகரித்துக்கொள்ளல் நன்ருகும். இதற்கு எதிரிடையாக, பொது ஜனங்களுடைய நம்பிக்கையை சங்கங்கள் சம்பாதித்துக்கொண்டன என்று ருஜூப்படுத்தும் பட்சத்தில் அதுவும் கூட்டுமுயற்சி அபிவிருத்திக்குத் திருப்திகரமான சாட்சியமாகும். முக்கியமாய் கவனிக்கத் தகுந்தது யாதெனில், பணம் போட்டவர்கள் அதை வாப்ஸ் வாங்கிக்கொள்ளுமுன்னே சங்கத்தாருக்குப் போதுமான முன்சாவகாசம் கொடுக்கும்படி அப்படிப்பட்ட சொரூபமாக தொகைகள் சங்கங்களால் கிரகிக்கப்பட வேண்டும். இந்த நோக்கத்தோடு ஊகிக்குமிடத்து, பங்குக் கட்டண ரூபமாகப் பணம் கிரகிப்பது மிகவும் சௌகரியமானது. பணம் போட்டவர்கள், குறித்த கெடுவில், தங்கள் தொகையை எடுத்துக்கொள்ளக்கூடிய டிபாசிட்டுகள் விஷயத்திலோ என்ருல், நடப்பு வட்டிக்கு வாங்கிக்கொள்ளும் தொகைகளையும், சொற்ப கெடுவுக்குள் திருப்பி எடுத்துக்கொள்ளக்கூடியதாய் இருப்பதையும் விட, நீடித்த கெடுவுக்கு சங்கத்தாரிடம் தங்கியிருக்கக்கூடிய டிபாசிட்டுகளே சௌகரியமானவைகள். இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் சங்கங்களால் எவ்வளவு நீடித்த காலகெடுவுக்கு கடன்கள் சாமான்யமாய் அங்கத்தினருக்கு அளிக்கப்படுகின்றன என்பதைப்பற்றிப் பூர்ணமான விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை; இனிமேலுக்கு ரிஜிஸ்தரார்கள் தங்கள் ரிபோர்ட்டுகளில் இதைப்பற்றித் தங்களுக்குக்கிடைக்கக்கூடிய விவரங்களை சேர்த்து எழுதிளுல் சௌகரியமாக இருக்கும். ஆயினும், பெரும்பாலும், கடன்கள், முதலில் சொற்பகெடுவுக்குக் கொடுக்கப்பட்டவைகள் ஆனுலும், வழக்கமாய் மாசூல் சேகரிக்கப்பட்டவுடனே திருப்பிக் கொடுத்துத் தீர்க்கப்படுகின்றன. எப்படி, கடன்கள் சாமானிய

மாய், மாசூல் அறுவடையானபின் கொடுத்துத் தீர்க்கப்படு கின்றனவோ, அவ்வாறே, அதே மாதிரி கடன்கள் கேழ்க்கப் படுகிற காலம், வருஷத்தின் முக்கிய விளைச்சலின் பொருட்டு எப்போது விதை விதைக்கப்படுகிறதோ அந்தக் காலத்தை ஒட்டியதுதான்; டிபாசிட்டுத் தொகைகள் ஏற்றுக் கொள்ளப் படுகிறகாலத்தை இந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு ஒழுங்கு படுத்திக்கொள்ளல் நன்றாகும். மத்திய சபைகளினின்று கிடைக் கக்கூடிய நாணயத்தை உபயோகித்துக்கொள்வதினால், விதைப்புக் காலச் செலவுக்கு உபயோகப்படும்படி அங்கத்தினருக்கு நாணயம் கிடைக்கச்செய்யலாம்; இத்தோடுகூட ஒவ்வொரு தனிச்சபையும் சாத்தியமானவரையில், மிகவும் முடையான காலத்தில், பொருள் கிடைக்கும் பொருட்டு, டிபாசிட்டுகளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய காலத்தைக் குறிப்பிட்டு ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

21. கூட்டுமுயற்சியில் ஜனங்களுக்கு நம்பிக்கை வரும்படி செய்வதற்கு முக்கியமான கருவி யாதெனில், கூட்டுநாணயச் சங்கங்களின் அங்கத்தினர்கள் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்க சக்தியுள்ளவர்களாயும், மன முள்ளவர்களாயும் இருப்பதே. யாருடைய நன் மைக்காகக் கூட்டுறவுச் சபைகள் கருதி ஏற்படுத்தப்படுகின் றனவோ அந்த வகுப்பினருக்கு, முன்யோசனை, செட்டு தொழில் முயற்சிசெய்யும் ஒழுங்குகள் முதலிய அவசியமான குணங்கள் இயற்கையாய் உரியனஅல்ல; இந்தக்கிளர்ச்சி ஆரம் பித்த ஆதிகாலத்தில், கூட்டுநாணயச் சங்கங்களின் அங்கத்தினர் கள் கடன்களைத் திருப்பிக்கொடுக்கிற விஷயத்தில் குறைபாடுள்ள வர்களாக இருந்தால், அதில் ஆச்சரியமுள்ள சங்கதி ஒன்று மில்லை; ஸகஜமாய் எதிர்பார்க்கக்கூடியதே. ஆயினும், மொத் தத்தில், பிரத்தியட்சத்தில், உண்டாயிருக்கும் பலனைக்கவனித் துப்பார்ப்பதினால், கடனைத் திருப்பிக்கொடுக்கிற கிரியாகைங்கரி யம் திருப்திகரமாகவே நடந்துவந்ததென்று தெரியவருகிறது;

திருப்பிக் கொடுத்தல்.

தாமாய்க் கடனைத் திருப்பிக்கொடுக்காத இனங்களிலும், காரணம் யாவையெனில், தொழில் முயற்சிவழக்கங்கள் ஏற்படாமையும், இத்தனை தவணைகளில்தான், இன்னஇன்ன சமயங்களில்தான், கடன் சந்தாக்களை திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று நிஷ்கருஷையான விதிகளை ஏற்படுத்துவதில் ரிஜிஸ்தாரர் என்னும் பதிவுசெய்யும் அதிகாரிக்கு அநுபோகத்தில் ஏற்பட்ட கஷ்டமுமே யாம்; செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் ஏய்த்துவிட வேணுமென்கிற கெட்ட எண்ணமல்ல. இப்பொழுது இது விஷயமாய் அநுபோக பூர்வமான அறிவு ஏற்பட்டிருக்கிறபடியால், ஸாத்தியமானவரையில், குறிப்பிட்ட தவணைகளில் பல சந்தாக்களாகக் கடனைத்திருப்பிக் கொடுக்கும்படியான ஏற்பாட்டை நிஷ்கருஷை செய்யமுடியுமாயின் நன்ருக இருக்கும். இந்த விஷயத்தில் நிச்சயக்குறைவு இருக்குமாயில், கடன்வாங்கினவர்கள் அஜாக்ருதையாக இருக்க வழி ஏற்படும்; கார்ய நிர்வாகிகளிடத்தில் ஒழுங்குத்தவறும் பட்சபாதமும் உண்டாகி, வாங்கின கடன் சீக்கிரம் கொடுபடாமல் மெத்தக்காலம் இழுத்துக்கொண்டே நிற்கும்.

22. ஒரு சங்கத்திற்குச் செல்வநிலை உறுதி ஏற்பட்டிருக்கிறதா என்பதைச் சோதனைசெய்வதற்கு ரிஸர்வ்பண்டு என்கிற க்ஷேமநிதி இவ்வளவுக்குத்தான் பயன்படுமென்று கணக்கிடமுடியாது; எவ்வளவு தூரம் உயர்த்தி மதிப்பிட்டாலும் மிகையாகாது. வரும்படிக் குறைவான வருஷங்களில் சகாயத்தை அதினின்று கிரகிப்பதற்கு அது ஒரு வரும்படி இனமாக இருக்கிறது; இந்த ஆபத்தனம் ஏற்படுவதினுல், வெளிப்புறத்தாருக்கு ஸபையின் நாணயத்தில் ஒரு நம்பிக்கை உண்டாகிறது; ஆகவே, தங்கள் பணத்தை சபையில் டிபாஸிட்டாகப் போடும்படி ஜனங்களைத் தூண்டுகிறது; தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வரையறுக்கப்படாத உத்தரவாதத்தினுல், ஒரு சமயத்தில் தெண்டம் இறுக்கும்படி நேர்ந்தாலும், அதற்காக ரொக்கம்

ஆபத்தனம் அல்லது மிகுத்து வைக்கும் பண்டமாகிய ரிஸர்வ் பண்டு.

செலுத்தும் அவசியத்தை இந்த நிதி குறைக்கும்; நாணய வட்டியைக் குறைக்கும்; ஒரு வேளை, எல்லாவற்றையும்விட மேலாகச் சொல்லக்கூடிய தென்னவென்ருல், அங்கத்தினரை ஒத்துமை உள்ளவர்களாகச் செய்கிறது. லாபங்களில் குறைந்த பட்சம் நாலத்தொருபங்கு ரிஸர்வ்பண்டிற்கு எடுத்துவைக்கப்பட வேண்டுமென்று சட்டம் கருதுகிறது; ஆயினும், பங்குவீதச் சபைகளில் அல்லது சந்தாச்சபைகளிற்கூட இந்த ரிஸர்வ்பண்டின் வரும்படியை இந்த நாலத்தொரு பாகத்திற்கு குறைத்து நிறுத்துவது எவ்விதத்திலும் அவசியமாகவாவது விரும்பத்தக்க தாகவாவது எண்ணக்கூடாது. லாபங்கள் மூன்று காரியங் களுக்கு விநியோகிக்கப் பயன்படுகின்றன; அவைகளை, அவை களின் விசேஷத்திற்குத்தக்கபடி ஒழுங்குபடுத்திச் சொல்லுங் கால், (1) ரிஸர்வ் நிதியை பலப்படுத்தல் (2) கடன் வாங்குகிற வர்களிடமிருந்து கேழ்க்கப்படுகிற வட்டி விகிதத்தைக் குறைத்தல் (3) அங்கத்தினருக்குக் கிடைக்கவேண்டிய லாபத்தை பாகித்துக் கொடுத்தல் என்பன. ஆயினும், ரிஸர்வ் நிதியை உபயோகிக்க வேண்டிய மாதிரியைப்பற்றி அபிப்பிராயப்பேதங்கள் இருக்கின் றன. மத்திய தனசாலையிலோ அல்லது வேறு வெளிச்சபை யிலோ ஆபத்தனநிதி எப்போதும் பிரத்தியேகமாகப் போட்டு வைக்கப்பட வேண்டுமென்று சிலர் எண்ணுகிருர்கள்; இவ்வாறு செய்யாவிட்டால், ரிஸர்வ் பண்டினுல் ஸம்பாதிக்கக் கருதப்படும் பலன்களில் ஒன்ருகிய வெளி ஜனங்களின் நம்பிக்கையைப் பெற முடியாதென்று நினைக்கிருர்கள். மற்றவர்கள் வாதிப்பது யாதெ னில், அங்கத்தினருக்கே கடன் கொடுப்பதினுல் அதிக விகிதமான வட்டி கிடைக்கும் வரையில், ரிஸர்வ் பண்டை சங்கத்தின் சாமான்யவேலையில் உபயோகித்தல் அதிக நல்ல தொழில் என்ப தும், சில மாகாணங்களில் நடப்பதுபோல, எங்கே வட்டிவரும் படி ஜாஸ்தியாக இருந்து ரிஸர்வ்பண்டு வேகமாக அபிவிருத்தி யடைகிறதோ, அங்கே, அந்த நிதியை சபைக்குள்ளேயே உப யோகப்படுத்துவதால் வெளிப்புறத்துக்கடன்களும், டிபாஸிட்டு

களும் இல்லாமலேயே சங்கம் சுயசகாயமுள்ள நிலைபெற்றிருக்கலாமென்பதுமே. சென்னையிலும் மத்தியப்பிராந்தங்களிலும் ரிஸர்வ்பண்டு தனியாக வேறு பந்தோபஸ்தான இடத்தில் வட்டிக்குப்போட்டு வைக்கப்படுகிறது; மற்றப்பெரிய மாகாணங்களிலோ இந்தநிதி சங்கத்தின் சாமான்யத்தொழிலில் தாராளமாக உபயோகப்பட்டுவருகிறது. சங்கத்தின் ஆரம்பகாலத்தில் மூலதனம் குறைவாக இருக்கும்போது, ரிஸர்வ்பண்டைத் தொழில் செய்யும் முதலுக்கு அநுபந்தமாகச் சேர்த்துக்கொண்டு வேலைநடத்தல் நியாயமேயாகும்; ஆயினும், இந்தநிதி பெருந்தொகையாகச் சேர்ந்துவிட்டால், வேலைசெய்யும் முதல் அதிகரிக்க அதிகரிக்க பிரத்தியேகமாக ரிஸர்வ் நிதியை வேறு பந்தோபஸ்தான இடத்தில் வட்டிக்குப்போட்டுவைக்கும் வழக்கத்தைக் கண்டிப்பாக அநுஷ்டிக்க வேண்டியதுதான். இந்தியாவிலுள்ள விவசாய நாணய சங்கங்களுக்கு இப்போது பத்துலக்ஷம் ரூபாய்கள் அல்லது வேலைசெய்யும் முதலில் நூற்றுக்கு மூன்றரைபாகம் நிக்ஷேபதனமாக இருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் இதில் என்னபாகம் பிரத்தியேகமாக எடுத்து வட்டிக்குப் போடப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும், ரிஸர்வ் நிதி என்கிற தலைப்பின்கீழ்த் தனியாய் எடுத்து எழுதப்பட்டதில் என்ன பாகங்கள் சங்கத்தின் ஸாமான்யத்தொழிலில் உபயோகப்படும் காரணத்தினால் மேலேகுறித்த பத்து லெக்ஷத்தினின்று குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் விவரங்கள் தெரியவில்லை. ஜர்மானிய ரெயிபெயிஸன் பாங்குகளில் ரிஸர்வ்பண்டு வேலைசெய்யும் முதலில் 100க்கு $2\frac{1}{2}$ வீதமாகவும் ஷுல்ஸிடெலிட்ஸ் பாங்குகளில் நூற்றுக்கு $6\frac{1}{2}$ வீதமாகவும் இருக்கிறது.

23. ஐரோப்பாவில் இருப்பதுபோலவே இந்தியாவிலும் ஸபைகள் தொகையில் அதிகரிக்க அதிகரிக்க அவைகளை யஜமாஷ் செய்வதற்கும் அவைகளுக்குப் பொருளாதாரம் ஏற்படுத்துவதற்கும் அவைகளை இனம்இனமாகச் சேர்மானம் செய்வித்து வைப்பது உசிதமென்று

மத்திய ஸபைகள்.

தெரியவருகிறது. ஒன்று சேர்ந்த ஒரு மத்திய சங்கத்தின் ஆதரவின்கீழ் பல சபைகள் ஏக லெக்ஷயமுள்ளவைகளாய்ச் சேர்ந்துகொள்வதினால், பரஸ்பரமாய் சபையார் கணக்குகளைச் சோதனை செய்துகொள்வதற்குச் சிறந்த ஒரு காரியக் கூட்டத்தினரை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். வரவு செலவுச் சுதந்திரம் இவ்விதச் சோதனையால் அடக்கி ஆளப்படாதிருக்கும்போது, இக்கணக்குப் பரிசிலனம் சபையின் சுதந்திரத்தை எவ்விதத்திலாவது பலவீனப்படுத்துகிறது என்று சொல்ல முடியாது. ஆயினும் ஒரு தனிச் சபையின் அங்கத்தினர் ஒருவருக்கொருவர் செலவினங்களில் தங்களை அடக்கி ஆண்டுகொள்ளும் சுதந்திரத்தைக் கொடுத்துக் கொள்வதினால் அதிகரித்த ஜன நம்பிக்கையையும் நாணயச் செல்வாக்கையும் பெறுவது போல, அதே மாதிரி, சங்கங்கள் ஒன்றோடொன்று சேர்ந்துகொள்வதினால் அதிகரித்த ஜன நம்பிக்கையையும் நாணயச் செல்வாக்கையும் பெறலாமென்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். பிரசுரிக்கப்பட்ட கணக்குக் குறிப்புகளில் இந்தச் சங்கங்களின் ஐக்கியங்கள் மத்திய சபைகள் என்கிற பொதுப் பெயரால் குறிப்பிடப் படுகின்றன. ஆயினும், அவைகள் நாடெங்கும் ஒரேவிதமான கிரமப்பிரகாரம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. சில சமயங்களில் சங்கங்களைக் கணக்குச் சோதனை பண்ணி விஸ்தரிக்கச் செய்வதைத் தவிர வேறொன்றுமின்றி இக் கருத்துடன் மாத்திரம் இச் சபைகளின் சேர்மானங்கள் நடத்தப்படுவதுண்டு; அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஐக்கியம் அல்லது யூனியன் என்கிற பொருத்தமான பெயரால் அழைக்கப் படுகின்றன. அத்தன்மையான ஐக்கிய சபை எங்கே நாணயம் அளிக்கும் சங்கம் உண்டு என்று தெரிவிப்பதைத் தவிர வேறு விதத்தில் தனசகாயத்தோடு சம்மந்தமில்லாததாக இருக்கலாம்; அல்லது சென்னையிலும், மத்தியப் பிராந்தங்களிலும் பர்மாவிலும் இருப்பதுபோலவே, ஐக்கியம் தன் கடமைகளை விஸ்தரிக்கச் செய்து தன்னை உருவாக்கும் ஆதாரச் சபைகளுக்குத் தன் நாணய ஜாமீனைப் பரவச்செய்தாலும் செய்யலாம். விசேஷமாக பேகார்,

ஐக்கிய மாகாணம், வங்காளம் முதலிய விடங்களில், ஐக்கியம் தன் ஆதாரச்சபைகளுக்குக் கணக்குச் சோதனை செய்து தருவதோடு பொருளாதாரத்தையும் தேடித்தருகிறது ; அவ்வாறு அது உதவி செய்யும்போது அதற்கு பாங்கிங் யூனியன் அல்லது பொருளாதாரச் சேர்க்கை என்று பெயர். அல்லது, பிறகும், கணக்குச்சோதனை செய்து தராமல், மத்திய சங்கம் பொருளாதாரம் மட்டும் செய்து தரலாம் ; அத்தன்மையான கூட்டம் குறைந்த அர்த்தத்தோடு மத்திய தனசாலையாகும் ; அவைகள் உதவி செய்யும் சபைகள் நாடெங்கும் ஒரே மாதிரியாகப் பரவியிராதபடியால், இப்பொருளாதார சபையின் அமைப்பு ஒரே ஒழுங்காக இல்லை ; ஆனால் மத்திய தனசாலை அல்லது ஜில்லா தனசாலை என்கிற பேருள்ள பொருளாதாரச் சபைகளின்கீழ் ஒரு தாசில், தாலூகா, உள் வகுப்பு, அல்லது ஜில்லாவின் சபைகளைக் கூட்டம் கூட்டங்களாக வகுக்கும் வழக்கம் இருக்கிறது. கூட்டு முயற்சி அபிவிருத்தியாகிக்கொண்டே வருகையில் இந்த மத்திய சபைகளிலொன்றை ஏற்படுத்துவதற்கு எது சரியான சமயம் என்று அறிந்து வேலை செய்தல் விசேஷமான காரியம். ஒரு மத்திய சங்கத்தோடு சம்மந்தம் பெற்று அதனால் ஒருவாறு ஒத்தாசை பெறுகிறவரையில் ஒரு சபை பூர்ணமான உபயோகத்தை அடைய முடியாது ; ஆனால் அபக்வ காலத்தில் மத்ய தனசாலைகள் ஏற்படுத்தப்பட்டால், கிளைச் சபைகள் தானாய் உண்டாவதற்குப் பதிலாக அவைகளைச் செயற்கையால் சிருஷ்டிப்பதற்கு தானாய்க் கனியாத பழத்தைத் தடியாலடித்துக் கனியவைக்கும் கருவிபோலாகும். இந்தியாவில் கூட்டு முயற்சி என்னும் கட்டிடம் கீழே இருந்து மேல்நோக்கிக் கட்டப்பட்டிருக்கிறது ; இந்தக் காரணத்தால், ஒன்றிலிருந்து, ஒன்று வெகுதூரத்திலுள்ள சிதறலான சங்கங்கள் ஏற்படுத்துவதைத் தென்பு செய்யாமல் இருப்பது உசிதம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது ; எந்தத் தாவுகளில் கூட்டு முயற்சிப் பயிர் பலுகக்கூடிய வளமையான மையங்கள் ஏற்படுகின்றனவோ அவ்விடங்களிலிருந்து அவை

களைத் தானுகப் பரவச்செய்வதே உசிதம் என்று தெரிய வந்திருக்கிறது. இவ்வித ராஜ்ய தந்திரத்தை அனுஷ்டிப்பதின் பலனுக ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு இடையே ஒரு கூட்டுமுயற்சிச் சபை ஏற்பட்டிருக்கிற அநேக முழு ஜில்லாக்கள் இந்தியாவில் முந்தியே இருக்கின்றன வென்பது மிகவும் திருப்திகரமான சங்கதி.

1904-ம் வருஷத்தினுடைய கூட்டு முயற்சிச் சட்டத்தின் பிரகாரம் மத்திய சபைகளின் அமைப்புக் கருதப்பட இல்லை. நாட்டுப்புறத்துக் கூட்டுநாணய சபைகளுக்கு வேண்டிய மூல தனம் பட்டணத்துச் சபைகள் மூலமாய்ப் பெரும்பாலும் அளிக்கப்படும் என்று எண்ணப்பட்டது; மத்திய சபை ஏற்பாடு ஆரம்பித்த பிறகு கூட, சில பிராந்தங்களில், தன்னுல் சகாயிக்கப்பட்ட சபைகளைத், தன்னேடு அன்பாகச் சேர்க்கைபெற்ற சுவதந்திரமுள்ள கோஷ்டிகளாக மதிப்பதற்குப் பதிலாக அவைகளைத் தம் கிளைகளாகக் கருதி நடத்தும் அனுஷ்டானம் இருந்து வருகிறது. ஆயினும் 1912-ம் வருஷத்துச் சட்டத்தில், மத்திய சபைகளுடைய அந்தஸ்துப் பூர்ணமாக ஒப்புக்கொள்ளப்பட்டு அவை சுகமாக வேலை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற சபைகளோடுகூடச் சேர்ந்த அங்கங்களாக மட்டும் இம்மத்திய சபைகள் சில சமயங்களில் அமைக்கப்படுகின்றன. அநேகமாகத் தனி மனிதர்கள் கூட, அங்கத்தினராக ஆக்கப்படுகிருர்கள்; சில இனங்களில், தனி மனிதர்கள் மாத்திரமே அங்கத்தினராக்கப்படுகிருர்கள். அவை சட்டப்பிரகாரம் கூட்டு முயற்சிச் சபைகளாக நடத்தப்படுகின்றன; ஆனுல், அவைகளுக்கு ஆதாரம் வரையறுக்கப்படாத உத்தரவாதமே; தங்களோடு பங்குவீதக்காரர்கள் அல்லாத சபைகளுக்குக்கூட சில தனசாலைகளால் சகாயம் செய்யப்பட்டபோதிலும், இந்தியாவிலுள்ள தனிச்சபைகளிற் பாதி மத்திய பாங்குகளில் அங்கத்தினராக இருக்கின்றன. சில பிராந்தங்களில், ஆதாரச் சபைகளின் உத்தரவாதத்தை அவைகளின் பங்குகளின் சில

மடங்குகளாக வரையறுப்பதால், அவைகளின் லாப நஷ்டங்களை நிஷ்கருஷித்தல் உசிதம் என்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இந்த உபாயமாவது இதுபோன்ற வேறு யுக்தியாவது பொது விதியாக அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அது ஒரு வேளை ஒரு சௌகரியமாகவிருக்கலாம். இந்த மத்திய தன சாலைகள் தங்களுக்கு ஆதாரமான சபைகளின் லாபத்தையும் சௌகரியத்தையும் தங்கள் சௌகரியங்களுக்குத் தாழ்வாய் நடத்தும் தன்மையில்லாமல் இருக்கும் பொருட்டு, இந்த சந்தர்ப் பத்தில், அந்தப் பிராந்தத்து அதிகாரிகள், சட்டங்கள் தங்களுக் குக் கொடுத்திருக்கும் அநுமதியை உபயோகித்து, மத்திய சபை கள் இப்போது பாகித்து எடுத்து வைத்துக்கொள்ளும் லாப விகிதத்தைக் குறைத்துக்கொள்ளும் படி செய்தால், அது ஒருக் கால் உசிதமாக இருந்தாலும் இருக்கலாம். தங்களுக்குவேண்டிய தொகைகளின் பொருட்டு இந்திய மத்திய தனசாலைகளின்மேல் கிரமத்திற்கு மிஞ்சிச் சார்ந்திருப்பதைக் காரணமாகக்காட்டி சிலர் நாம் சொன்ன லாப பாகக் குறைப்பிற்கு ஒரு ஆட்சேபணை எடுத் தோதலாம்; ஆனால், நாம் குறிப்பிட்ட உபாயத்தில் சௌகரி யங்கள் உண்டு. மத்திய சபைகளின் பரிபாலனம் கூட்டு முதல் வியாபார முறையை அதிகமாக அனுஷ்டித்ததாதலால் அவைகளை, நடத்துவதற்கு விசேஷத் திறமைவேண்டும். அவைகள் ரொக்கம் கொடுக்கல் வாங்கலினாலாவது டிபாஸிட்டுத் தொகைகளைப்போட்டு வைப்பதினாலாவது வெளிப்புறத்துக் கூட்டு முதல் சபைகளோடு சம்மந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளும் வழக்கமுள்ளவைகளாக இருக்கின்றன. அங்கத்தினர் செலுத்தும் பங்குச் சந்தாக்களையும் நீடித்த குறித்த தவணைகளில் வட்டி செலுத்தும் (Debenture) டிபென்சர் என்கிற ஒப்பந்தக்கடன் தொகைகளையும் தங்களுக்கு முக்கிய மூலாதாரமாக உடையன; ஆதலால், நீடித்த கெடுவில் செலுத்தப்படவேண்டிய கடன்களுக்கோ அல்லது அப்போதைக் கப்போது வேண்டிய செலவிற்குத் தேவையானதையோ தனிச் சபைகளுக்கு கொடுத்து உதவிசெய்யச் சக்தியுள்ளவைகளாக

170489

இருக்கின்றன. கருதவேண்டிய உத்தமநிலை யாதெனில், நாட்டுப்புறத்துச் சபைகள் தங்களுக்கு வேண்டிய முதலை அந்தந்த ஸ்தலத்திலேயே ஆகப் பண்ணிக்கொள்ளச் சக்தியுள்ளவைகளாக இருக்க வேண்டியதென்பதே; இத்தோடுகூட, மத்திய சபைகள், ஸ்தலத்திலேயே கிடைக்கக்கூடிய தொகை குறைவுபடும்போது சகாயம் செய்து குறைவுக்கு ஈடு செய்யவேண்டியது. சபைக்குவேண்டிய ஐவேஜு முக்கியமாக ஸ்தலத்திலிருந்தே கிடைக்குங்காலம் நிச்சயமாக ஒரு சமயம் வரலாம்; ஆனால், இப்போதைக்கு, மத்ய பாங்குகளின் முக்கிய வேலையாதெனில், அக்கம் பக்கத்தில் கிடைப்பதைவிட சரசமான வட்டி விகிதத்திற்கு நாணயம் சம்பாதித்து அதைத் தனிச் சபைகளுக்குக் கடன் கொடுத்தலாம். இந்த அம்சத்தில்தான் ஸ்தலத்து சாவகாரிகளைவிடக் கவனிக்கத்தக்க அளவுக்கு சபைகளுக்கு உதவிசெய்ய மத்திய பாங்குகள் சக்தியுள்ளவைகளாக இருக்கின்றன. இப்போது அநுஷ்டானத்திலிருக்கிற கிராமாந்திர லேவாதேவி முறைப்பிரகாரம், நாட்டுப்புறத்துச் சாவகாரிகள் தம் சொந்த ஐவேஜியை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு சில பத்து வரவுக்காரர்களுக்கு மாத்திரம் நாணயம் கொடுத்துக் கொண்டு இதுவரையில் காலம் தள்ளிக்கொண்டு வந்திருக்கிறார்கள். வேறு சங்கதிகளையெல்லாங் கவனிக்காவிட்டாலும், மற்ற சபைகளோடு ஒத்து வேலை செய்துகொண்டு நாட்டின் பொதுவாகிய நாணயச் சந்தையின் நோக்கங்களுக்கு இணங்கி லேவாதேவி செய்யும் ஒரு சங்கம் எந்த வட்டி விகிதத்திற்கு லாபகரமாகக் கடனளிக்கலாமோ அதைவிட மிகுந்த வட்டிக்கே கிராமாந்தர சாவகாரி நாணயம் கொடுக்கிறான். கடன் வாங்குவோனை வெளிப்புறத்துப் பணச்சந்தையோடு சம்மந்தமுள்ளவனாகச் செய்வதனால், மத்திய சங்கங்கள் புதிய விசேஷமான உபகாரத்தைப் பண்ணுகின்றன; இதுவுமன்றித் தங்கள் ஆதார சபைகளின் அதிகப்படி அம்சங்களுக்கும் குறைகளுக்கும் ஈடு உண்டாக்கித் தராசு முனையாகச் செய்வதற்கு ஏற்ற யந்திரங்களைப்போன்ற சாதனங்களைத் தருகின்றன.

24. இவ்வித உபகாரங்களைச் செய்வதற்கு முழுவதும் தங்கள் சுய சாமர்த்தியத்தைக்கொண்டே மத்திய பாங்குகள் பயன்படுதல் சாத்தியமில்லை. அவைகள் வேலை செய்வதற்கு ஏற்ற இடம் மட்டானது; அப்படி இருந்தே தீரவேண்டியிருக்கிறது. அதிக மழை, மழைக்குறைவு முதலிய காலவித்தியாசங்களாலும், பண முடை அதிகப்படல் குறைதல் முதலிய வேறுபாடுகளாலும் தனிச்சங்கங்கள் துன்பத்துக்கு ஆளாதல்போலவே மத்திய பாங்குகளுக்கும் தொல்லைகள் உண்டு; தனிச் சங்கங்களின் தொல்லைகளைவிட மத்திய பாங்குகளுக்குத் துன்பம் கொஞ்சம் மட்டாயிருக்கலாம்; அவ்வளவுதான்.

மாகாண பாங்குகள்.

சுருசுருப்பாக வேலைசெய்யவேண்டிய மாசங்களில் வேண்டிய பணத்தைக் கைமாத்தாக எடுத்துக்கொண்டு பணத்தேவையில்லாத காலங்களில் வட்டிக்குப் போட்டு வைப்பதற்கும் தங்களுக்குப் புறம்பான ஆதாரநிதிகள் மத்தியபாங்குகளுக்கும் தேவைதான். பாரியான கூட்டுமுதல் பங்குக்காரர்களிடம் கடன் வாங்கிக்கொள்வதினாலாவது ரொக்கம் பற்றிக்கொள்வதினாலாவது அவசியமான ஒத்தாசையைப் பெறுவது சாத்தியமாக இருக்கலாம்; ஆயினும், மத்தியசபைகள் கூட்டுமுயற்சி நீதிகளை அநுஷ்டித்து ஒன்று சேர்ந்து பிரயனித்தனித்தால் அதிகரித்த நாணய சக்தியாகிய சௌகரியத்தை உண்டுபண்ணிக் கொள்ளலாம். ஆதலால், அநேக மாகாணங்களில், சாமான்யமான மத்திய பாங்குகள் எவ்வளவு பரப்பில் வியாபித்து வேலைசெய்கின்றனவோ அதைவிட விஸ்தாரமான பிரதேசத்தில் அலுவல் செய்வதற்கு பாங்குகளை ஏற்படுத்துவது அவசியம் என்று தெரியவருகிறது. பர்மாவில் மத்திய பாங்குகளில் ஒன்றின்வேலை எவ்வளவுக்கு விஸ்தரித்திருக்கிறதென்றால் அநுபோகத்தில் அந்த மாகாணம் முழுதும் வியாபித்து, அந்த தனசாலையை ஒரு மாகாண ஸ்தாபிதமாகச் செய்துவிட்டது. பம்பே மத்தியமாகாணம் முதலிய மற்ற இடங்களில், விசேஷ மாகாண பாங்குகள் அமைந்துவிட்டன; இதே

மாதிரியான ஸ்தாபிதங்கள் மற்ற மாகாணங்களிலும் ஏற்படுதல் காலக்கிரமத்தில் நடைபெறக் கூடியதுதான். பம்பாயிலுள்ள சில பிரசித்திபெற்ற வியாபாரிகளால் 1911-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பம்பே பாங்கு நினைத்தபோது ஏழுலக்ஷம் ரூபாய்களுக்குப் பங்குகளை விக்கிரயம் செய்யமுடியும். நாணயம் நடத்துவதற்கு இந்த நிதியை ஆதாரமாக வைத்துக்கொண்டு, வருஷத்துக்கு நூற்றுக்கு நாலுமேனிக்கு வட்டிதரக்கூடிய வட்டிஜாமீன் பத்திரங்களைப் பிரசுரித்து விக்கிரயம் செய்யலாம்; ஆனால் செலுத்திவைக்கப்பட்ட முதல் தொகைக்கு மூன்று பங்குகளுக்கு மேல் அதிகப்படாமல் இந்த வட்டி ஜாமீன் பத்திரத் தொகை இருக்கலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது; இந்த விகிதத்திற்கு வட்டி கிடைக்கும் பொருட்டு பம்பே துரைத்தனத்தார் உத்தரவாதத்தை வகித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த பம்பே பாங்கு கூட்டுமுயற்சிசபையாருக்கு மாத்திரம் நாணயம் தருகிறது; வாங்கும் சபைகளுக்கு நேரில் நாணயம் கொடுக்கிறது; இது முக்கியமாகச் செய்யும் லேவாதேவி நீரா என்னும் கால்வாய்ப் பக்கத்துக் கரும்புப்பயிர் அபிவிருத்தியின் பொருட்டே. யாதொரு வித சர்க்கார் ஜாமீனும் இல்லாமல், 1912-ம் வருஷத்தில், மத்தியப்பிராந்தத்தின் மாகாணபாங்கு அமைக்கப்பட்டது; இது மத்திய பாங்குகளுடனே மாத்திரம் தொழில் வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு ஆறுலெக்ஷம் ரூபாய் மூலதனம் இருக்கிறது; ஸாமான்யமான வியாபார பாங்கிகளுக்கும் மத்தியப் பிராந்தத்தில் சங்கிலித் தொடர்போல் ஏற்பட்டிருக்கும் கூட்டு முயற்சிச் சபைகளுக்கும் உபயோகமுள்ள சம்மந்த கர்த்தாவாக இது ஆகலாம்; ஆயினும் இதுவரையில் தனக்கு வேண்டிய முதலை அந்த ஸ்தலத்திலேயே தேடிக்கொள்ள வல்லமையுள்ளதாக இருந்துவருகின்றது. இவ்வித பாங்குகளின் அலுவல்கள் ஒரே ஒரு மாகாணத்திற்கு உள்ளடங்கியதாக மாத்திரம் இருந்தபோதிலும் முதலாளிகளிடமிருந்து டிபாஸிட்டு என்கிற நடப்பு வட்டித் தொகைகளை கிரகிப்பதற்குப் போட்டி போட்டுக்கொண்டு

முயலுதல் இந்தக் கூட்டுமுயற்சிக் கிளர்ச்சியின் உத்தமக்ஷேமத்திற்குப் பிரதிகூலமாமாகவேயிருக்கும்; ஆதலால், ரிஜிஸ்தரார்கள் பிரயோஜனகரமாகச் செய்யக்கூடியது யாதெனில், இந்த விஷயத்தில் சில சங்கங்கள் செய்த வேலைகளையே வேறு சில சபைகளும் மேற்போட்டுக்கொண்டு முயன்று பிஷ்டபேஷணம் செய்யாமல், அதனதன் எல்லையைத் தனியாக வரையறுப்பதுடன், ஒரு பாங்கியினுடைய அதிகப்படியான முதலை மற்றொரு பாங்கியினுடைய காரியங்களுக்குப் பயன்படும்படி வேலைத்தனமும் செய்யவேண்டியது. கூட்டு முயற்சி நிர்வாக சமூகத்துடன் மத்திய சபைகளையும் மாகாண சபைகளையும் தொடுத்ததினால் அதில் சம்மந்தப்பட்டவர்களுக்கெல்லாம் உண்டாயிருக்கும் உத்தரவாதங்கள் அதிபாரமானவைகளாக இருக்கின்றன. ஒரு பக்ஷத்தில், பணச்சந்தையுடன் அத்தன்மையான ஸ்தாபனங்களின் சம்மந்தங்களைக் கண்காணிப்பதற்கும், மற்றொருபக்ஷத்தில், ஆதாரசபைகளுடன் அவைகளின் உறவை ஒழுங்குபடுத்துவதற்கும் அதிகத்தொழிற் கல்வித்திறமை வேண்டும்; விசேஷக் கல்வியும் பயிற்சியுமுள்ள நிபுணர்களாலேயே அது நடக்கவேண்டியது; தனிச் சபைகளுக்கு மேற்பட்ட படித்தரங்களில் கூட்டுமுயற்சிக் கிளர்ச்சியின் முழுப்பரிபாலனத்தையும் துரைத்தனத்தாரும் மகாஜனங்களும் ஒன்று சேர்ந்து இனிமேலுக்கு மிகுந்த சிரத்தையுடன் கவனித்தல் வேண்டும்.

25. கீழ்ப்படித்தரங்களில்கூட இந்த மத்திய சபைகளை உண்டுபண்ணுதல், கூட்டு முயற்சிக் கிளர்ச்சியில் ஒரு புதிய தொழில் செய்யும் சாதனத்தை உட்புகுத்தியிருக்கிறது. கூட்டு முயற்சிப் பரிபாலனத்தை நடத்துவதில் சென்ற காலங்களில் தோன்றியதைவிட இன்னம் அநேக கஷ்டங்களும் சிக்கல்களும் வருங்காலங்களில் எதிர்ப்பட்டு நிற்பது அவசியமாக நேரிடக்கூடியதுதான். இதற்கு முன்னால் வேலைச் சோதனைக் காரியங்களுக்கும் கணக்குச் சோதனைக் காரியங்களுக்கும் துரைத்தன

வேலைச் சோதனையும் கணக்குச் சோதனையும்.

சாமான்ய உத்தியோகஸ்தரும் துரைத்தன உத்தியோகஸ்தரல்லாதவரும் சேர்ந்த தொகை போதுமானதாக இருந்து வந்தது; ஆயினும் ஏற்பட்டுவரும் புதிய மத்திய ஸ்தாபனங்களையும் அவைகளால் ஜனிக்கும் நூதனப் புதருகளையும் விடுத்துத் தொழில் நடத்துவதற்கு விசேஷப் பயிற்சியும் மேல் கணக்குச் சோதகர்களின் ஒத்தாசையும் எம்மட்டிற்கு வேண்டியிருக்கும் என்கிற கேள்விக்குக் கொஞ்சகாலத்திற்குள் நாம் முன்னிட்டு நின்று பதிலளிக்க வேண்டியதாய் வருவதுடன் அதனால் செய்யத்தக்கனவாகிய திறமையான வேலைகளை ஊகித்து நடத்தவேண்டியதாய் நேரிடும். இவ்வித ஸ்தாபனங்களில் சிலவற்றின் கணக்குச் சோதனை வேலையை வெளிப்புறத்துக் கணக்குத் திறமைக்காரர்களிடத்தில் ஒப்புவிக்கவேண்டியது அவசியமாய்விட்டது; ஆனால், பெரும்பாலும் துரைத்தனத்தாராலாவது, மத்திய சபையாரால் நேரில் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகக் கூட்டத்தாராலாவது இச்சோதனை வேலை நடக்கிறது; பெரும்பான்மையான விவசாய சபைகளில், ஸ்தலத்துப் பரிபாலனம் முழுவதும் சம்பளம் வாங்காத இனம் வேலையாகவாவது, அல்லது அநேகமாக சம்பளமில்லாச் சேவகமாகவாவது செய்து நிறைவேற்றப்படுகிறது; கணக்குகள் நாகரிகக்குறைவான மெத்தசாமான்யத் தன்மையுள்ளவைகளாக இருக்கின்றன; ஸ்தலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இல்லாக் கொடுமையினால் மேல்விசாரணை உத்தியோகஸ்தர்களே கணக்குத் தயாரித்துத் தரும்படியான உதாரணங்களும் கவனத்திற்கு வந்திருக்கின்றன. இவ்வளவு நாகரிகக் குறைவு இல்லாமல் சற்றுச் சீர்திருத்தம் பெற்றிருக்கும் சபைகளிற்கூட, வேலைச் சோதனையும் கணக்குச் சோதனையும் வெவ்வேறாக வைத்து ஒழுங்காய் கேள்க்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லி, கூட்டு முயற்சி சம்மந்தமான அறிவைப் பரவச்செய்வதுடன், காரியச்சோதனை கணக்குச்சோதனை ஆகிய அனைத்தையும் சேர்த்துக் கவனிக்க வேண்டியிருக்கிறது. சோதனை உத்தியோக கோஷ்டியின் தொகை இப்போது சொற்பமானதே; மொத்தத்

தில் எல்லா அஸாமிகளும் சேர்ந்து இருநூறு முதல் முந்நூறு பேர்வழிகளுக்குட்பட்டே யிருக்கலாம்; ஆனால் இவர்களின் கடமைகளோ, மிகவும் விசேஷமானவைகள்; அத்தோடுகூட அக்கடமைகளின் அளவும் அதிகரித்துக்கொண்டே போகிறது; ஏனெனில், கூட்டு முயற்சி பெரும்பாலும் ஜயம் பெறுவதற்கு, அத்தியாவசியமானவைகள் வேலை முறையை நெருங்கிச் சோதித்துப்பார்த்தலும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கணக்குச் சோதனையும்தான்.

கூட்டு நாணயம் அளிப்பதை விட வேறு விதக் கூட்டு முயற்சிகள்.

26. மேற்கூறிய கருத்துக்கள் முக்கியமாகக் கடன் கொடுக்கும் ஸபைகளுக்கே பொருத்தமாக விருந்தபோதிலும் வேறு விதக் கூட்டுமுயற்சிகளுக்கும் மிகப் பொருந்தி யிருக்கின்றன. கூட்டு நாணய சபைகளினின் றும் வேறான சககாரப் பிரயத்தனங்கள் முதல் முதல் எப்போது யதோக்தமாக சட்டப்பிரகாரம் செல்லுபடியாகச் செய்யப் பட்டனவென்றால் 1912-ம் வருஷத்தினுடைய கூட்டு முயற்சிச் சட்டத்தின்படிதான்; அதன் பிறகு இவ்வித முயற்சிக்கு அதிக அபிவிருத்தி ஏற்படுவதற்கு இன்னும் போதுமான சாவகாசம் ஏற்படவில்லை. சமீபத்தில் நாளது வரையில் கிடைத்த கணக்கு விவரப்படி நாணய சபை அல்லாத 170 கூட்டுமுயற்சிச் சபைகள் இந்தியா முழுவதற்கும் ஏற்பட்டிருக்கின்றன; அவைகளிற் பாதி விவசாய சம்மந்தமுடையவைகளாக இருக்கின்றன. மூலதனத்தை மிகுதியாகவுடைய தனவட்டியர்கள், வேலையாளர்களின் ஜீவன முறையைப் பொருள் கொடுத்து ஒழுங்குபடுத்துவதாலும் விலைபெற்ற யந்திர சாமான்களைத் தருவித்து ஸ்தாபனம் செய்வதாலும், பெரும்படியாகத் தொழில் ஆரம்பிப்பதால் குறைந்த செலவில் காரியங்களை ஆகப்பண்ணிக்கொள்ளுதலாலும், தங்களுக்கிருக்கும் முன்பணம் போட்டுப் புறட்டும் சக்தியினால் விவசாயத்திலும் செயற்கைப் பண்டங்களைப் பண்ணி விற்பதிலும், பெருத்த சௌகரியங்களை அடைகிறார்கள் அல்லவா? எளிய வகுப்பினர்களுக்கும் அவ்வித

சௌகரியங்களை நிச்சயமாகக் கிடைக்கும்படி செய்வதற்காக இவ்விதக் கடன் வாங்குவதை முக்கிய நோக்கமாக வைத்துக்கொள்ளாத சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித சபைகள் சாமான்களை விற்பதிலும் வாங்குவதிலும் பிராணிகளையும் மாசூலையும் நஷ்டக்காப்பு ஜாமீனுள்ளவைகளாகச் செய்வதிலும் பிரவேசிப்பதினால், சாமான்ய விவசாய நாணய சபைகளுக்கு முன் எதிரிட்டு நிற்கும் கடினமான புதிர்களைவிட, அதிக சிரம சாத்தியமான சிக்கலான தீர்க்காலோசனையின் மேல் நிவர்த்தி செய்யக்கூடிய வில்லங்கங்களை உடையவைகளாக விருக்கின்றன. தேசத்திற்கு அவைகளால் விளையக்கூடிய மேன்மைகள் கணக்கிட முடியாதவைகளாகவிருக்கலாம்; கூட்டு நாணய சங்கங்களையும் விட அதிக பலப்ராப்தியை உண்டாக்கும் தன்மையுள்ளவைகளாகக்கூட அவைகள் இருக்கலாம்; ஆனால் இப்போது அவைகள் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கின்றன. நாணயவலிமை எங்கும் மிகுந்ததின் பயனாக இவ்விதச் சபைகள் எளிதாய்ப் பரவி நன்மை செய்கின்றன; ஆனாலும் நாணயமே முதன்மையான தேவை; ஒரு மாகாணத்தில் நாணயம் பரவுதலுக்கேற்ற ஒரு கிரமமான ஏற்பாடு உறுதியாக் ஸ்தாபிக்கப்படுகிற வரையில், வேறு வழிகளில் மட்டுக்கு மிஞ்சின வேகத்துடன் அபிவிருத்தியைத் தேடுதல் அபாயகரமாகிவிடும். அவ்வித அபிவிருத்திச் சபைகளை ஸ்தாபிப்பதற்கு முன்னால் ஜனங்களின் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ற விவஸாயக் கண்காணிப்பும் தொழில் விவரக் கண்காணிப்பும் நடத்தப்பட வேண்டுமென்று யோஜனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன; இந்த யோசனைகள் ஜாக்ருதையாகக் கவனிக்கத் தக்கவைகள். இவ்விதக் கூட்டு முறையை விவஸாயத்திற்குப் பிரயோகிப்பது இப்போது அநேகமாய் முற்றிலும் பர்மாவில் மட்டுமே நடந்து வருகிறது; அங்கே நெல் முதலிய மாஸூல்களைப் பயிரிட்டு விற்பனை செய்வதற்கும் ஆடுமாடுகளுக்குள் உண்டாகக்கூடிய சேதத்தையும் நஷ்டத்தையும் தடுப்பதற்கு நஷ்டக்காப்பு ஜாமீன் ஏற்படுத்துவதற்கும் (இன்ஷயூரன்ஸ்)

சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை கால் நடைகள் தான் சேதப்பட்டன என்பதைப் பற்றிய நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆதாரக் கணக்கு இல்லாமலிருப்பதாலும், இந்த ஆதாரக் கணக்கைக்கொண்டுதான் சந்தாப்பிரீமியத்தைக் கணக்கிட வேண்டியதாகையாலும், கால் நடை வைத்தியத்திற்றேர்ந்த உத்தியோகஸ்தர் உதவி கிடைப்பது மட்டாயிருப்பதாலும், இவ்விதத் துணிகர முயற்சிகள் விசேஷ இடையூறுகளால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. பர்மாவில் இது விஷயமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் உண்மையாதெனில், கால் நடைகளின் ரெக்ஷணைக்காகச் செய்யப்படும் எவ்வித ஏற்பாட்டிலும், அந்தந்த ஸ்தலங்களில் உள்ள சங்கங்கள் அங்கங்கே உண்டாகும் கால் நடைகள் நோய் முதலிய விபத்துக்களால் அழிவடையாமலிருக்கும் பொருட்டுப் பாதுகாத்துக் கொள்ளுவதுடன், ஒரு மைய ஸ்தானத்துச் சபையும் வேண்டும்; அவசியமானபோது எச்சங்கத்துக்காவது நஷ்டங்கள் நேரிடுங்காலத்து அந்த நஷ்டங்களைப் பரிகரிக்க மறு ரெக்ஷணைச் சங்கங்களும் காப்பாற்றும் உபாயங்களும் வேண்டும் என்பதே. நாணயத்துக்காக மாத்திரம் வேலை செய்யும் சங்கங்களினின்றும் வேருய கூட்டுமுயற்சிக் கூட்டங்களுக்கு, செய்தொழில்முயற்சி மார்க்கத்தில், உபயோகமான வேலை செய்ய, மற்ற வழிகளில் இருப்பதைவிட அதிக சௌகர்யங்கள் உண்டு; இச் சங்கங்களிற் பெரும்பான்மையானவைகள் சாமான்களை வாங்குவதற்காவது வாங்கல் விற்றல் இரண்டையும் செய்வதற்காவது ஏற்பட்டவைகள். கூட்டு நாணய விஷயத்தில் இருப்பதுபோல், கைத்தொழில் முயற்சிக் கூட்டுறவிற்கும், மிகவும் நன்மைபயக்கக்கூடியவழி யாதெனில், நெசவுகாரர் நிலைமையை உயர்த்துவதுதான் என்று தோன்றுகிறது; சில மாகாணங்களில் கைத்தறிநெசவுகாரரின் சங்கங்களை ஏற்படுத்துவதினுல், ஆரம்பப் பிரயத்தனம் செய்யப்பட்டிருக்கிறது; இந்தக் கைத்தறிக்காரார்கள் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரு தரகன் மூலமாய்த் தனிவேலைக்காரனுக்குக் கிடைக்கக்கூடியதைப் பார்க்கிலும் அதிக சௌகரியமான விகிதத்திற்கு, தங்களுக்கு வேண்டிய நூலை வாங்குவதற்

கும் தாங்கள் செய்யும் வஸ்திரங்களை விற்பதற்கும் சக்தியுள்ளவர்கள் ஆகிறார்கள். ஆயினும், சர்க்கரை, பால் முதலியவை உண்டு பண்ணுவதிலும், ஜனங்களின் உபயோகத்திற்கு வேண்டிய உக்கிராணப் பொருள்களைச் சேகரித்துத் தருவதிலும் சம்மந்தமுள்ள வேறுவிதக் கூட்டுமுயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன; கட்டிடங்கள் கட்டும் சங்கங்களை ஏற்படுத்துதல், மைசூர்க் கூட்டுமுயற்சிக் கிளர்ச்சியின் முக்கிய லெக்ஷணமாக விருந்துவருகிறது; இப்படிப் பலவிதங்களிலும் ஜனங்கள் தங்கள் மார்க்கம் எது என்று அறிய உணர்ச்சிநிதானத்தால் உஷாராய்த் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இக்கூட்டுமுயற்சி இன்னமும் சோதனைப்பதத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறது; ஆயினும், இதுவரையில் கிடைத்த அநுபோகத்தின் பயனாக இரண்டு பொது விதிகளை அநுஷ்டானத்திற்கு ஏற்றவைகளாக விதிக்கலாம். (1) ஒவ்வொருவித வேலையின் பரிபாலனத்தையும் ஒரு தனிச் சங்கத்தைக் கொண்டு நடத்தலாம்; அது சாத்தியமில்லாதிருக்கும் பக்ஷத்தில், ஒவ்வொருவிதமான வேலையையும் ஒரு பிரத்தியேகமான கிளைச்சபையைக் கொண்டு நடத்தலாம்; சபையின் பொதுக்கணக்கோடு ஒன்று சேர்க்கப்படுவதற்கு முந்தி, தனிக் கணக்குகள் வைத்து முடித்து, தனித்தனி ஆதாயஞ்செலவுப் பட்டிதயாரித்துக் காட்டலாம். (2) சங்கங்கள் முக்கியமாக அங்கத்தினரின் பிரயோஜனத்திற்காக ஏற்பட்டிருந்தபோதிலும், சில சமயங்களில் அங்கத்தினர் அல்லாதாருடனும் பத்துவரவுவைத்துக் கொள்ள இடங்கொடுப்பது உசிதமாகும்; இது மாத்திரமன்று; அநுபவத்திற்கண்டபடி, சிலபரப்புகளில், சபைக்குப் புறம்பான தனி மனிதருடைய பத்துவாவு இல்லாமற்போனால், சபையின் வேலை மெத்தவும் குறுகிப்போய், ஜயம் கிடைக்குமென்கிற நம்பிக்கையோடு தொழில் நடத்த முடியாமலே போய்விடக்கூடும். ஆயினும், எங்கே அங்கத்தினரல்லாதார் வழக்கக்காரர்களாக விருக்கிறார்களோ, அந்த ஸபைகளில், தம் சொந்த அங்கத்தினருக்கு அதிக சௌகர்யமான விதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு எப்போதும் இடம் இருக்கிறது.

27. கூட்டுமுயற்சியோடு துரைத்தனத்தாருக்கு இருக்கும் ஸம்மந்தம் இரண்டு எதிரடையான நோக்கங்களுடன் பலரால் குணதோஷ விவாதம் செய்யப்பட்டிருக்கிறது.

ஒருசாரார், கூட்டுமுயற்சிக் கிளர்ச்சி நன்மைபயப்பதாக விருந்தாலும், ஜனங்கள் தங்கள் சௌகர்யப்பிரகாரம் தங்கள் மனோ தர்மப்படி அநுஷ்டிக்கவேண்டிய கார்யம் என்று வாதிக்கிறார்கள்; எந்தப்படித்தரத்திலிருக்கும்போதும் துரைத்தனத்தார் இது விஷயத்தில் தலையிடுதல் அனாவசியம் என்கிறார்கள் ஆயினும், ஐரோப்பிய நாடுகளில் துரைத்தனத்தார் கொடுக்கும் ஒத்தாசையின் விஷயமாக என்னென்ன வரையறைகள் ஏற்றவைகளாகவிருந்தபோதிலும், (எந்த நாட்டிலும் இந்த முயற்சி துரைத்தனத்தாரின் ஒத்தாசையைக் சாராதிருக்கவில்லை.) இந்தியாவில் துரைத்தனத்தாரின் ஆரம்பப்பிரயத்தனமும் ஒத்தாசையும் இல்லாமற் போனால், கூட்டு முயற்சி என்பதே ஜனங்களுக்கு இன்னமும் தெரியவராமலிருந்திருக்கும். வேலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய விவகார ஞானமும் இடம் பொருள் ஏவல் ஏற்பாடுகளும் துரைத்தனத்தாராலே மாத்திரம் சேகரித்துத் தரத்தக்கவைகளாகவிருந்தன. இக்கிளர்ச்சிக்கு சாசுவதத் தன்மையைத் தருவதற்கு அவசியமான, வெளிப்புறத்தாரின் மதிப்புள்ள நம்பிக்கையை உண்டுபண்ண, துரைத்தனத்தார் இம்முயற்சியில் சம்மந்தப்பட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. பதிவாளராகிய கூட்டுமுயற்சி ரிஜிஸ்தரார்கள், சங்கங்களை தாகல்செய்து வைப்பதற்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தரல்ல; அப்படி அவர்கள் விட்டேற்றியாகவிருக்க வேண்டுமென்பது துரைத்தனத்தார் கருத்தும் அல்ல; கண்காணிப்பு, ஒத்தாசை, புத்திமதிகூறல், அடக்கியாளல் முதலிய மற்றக்காரியங்களையும் இயற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்பட்ட உடனேயே, கூட்டுமுயற்சிக்கு வேண்டிய பூர்ணயோக்கியதை உள்ளவைகளாக சங்கங்கள் ஆகிவிடுமென்று கருதல் சரியல்ல; சங்கங்கள் தாகல் செய்யப்பட்டு வெகுகாலம் ஆனபிறகும் துரைத்தனத்தார் தங்கள் உத்தியோக

சமூகத்தைக் கொண்டும், சங்கங்களுக்கே உரிய உத்தியோகஸ்தரைக் கொண்டும், அங்கத்தினரின் கூட்டுமுயற்சிக் கல்விப்பயிற்சியை, தொடர்ச்சியாக நடத்திக்கொண்டே வரல்வேண்டும். எச்சங்கமும் பெயருக்கு மாத்திரமேயன்றி வாஸ்தவத்திலும் கூட்டுமுயற்சித்தன்மை உள்ளதாக இராவிட்டால், அதன் அங்கத்தினரையும் பொது ஜனங்களையும் மோசம் செய்யும் கோஷ்டியேயாம்; அங்கத்தினர் எல்லோரும், கூட்டுமுயற்சி முறையின் முக்கியக் கருத்துக்களை அறிந்துகொண்டால்தான், அவர்கள் பெயரிலும் உண்மையிலும் கூட்டுமுயற்சித் தன்மையாராகமுடியும். சபைகள் அஸ்திவாரத்தில் தமக்கு வேண்டிய அம்சங்களையெல்லாம் உடையவைகளாகவிருந்தபோதிலும், சுய அரசாட்சி பெற்றிருந்தபோதிலும், துரைத்தன உத்தியோகஸ்தரின் மேன்பார்வைக்கு உள்ளாயிருக்கின்றன என்கிற சங்கதிதான் பொது ஜனங்களுக்கு அவைகளில் நம்பிக்கை உண்டாக்கும் என்பது திண்ணம்; இவ்வாறு நாட்டின் பெரும்பாகத்திற்கு நன்மை உண்டாவதால், துரைத்தன உத்தியோகஸ்தர்கள் மேன்பார்வை பார்ப்பதில் பொதுப்பணத்தைச் செலவிடல் நியாயமாகும். முடிவில் கூட்டுமுயற்சிக் கிளர்ச்சியானது செல்வக் கூட்டுறவு விவகாரங்களில் துரைத்தன உத்தியோகஸ்தரை ஜனங்களோடு சமீப சம்மந்தமுள்ளவர்களாகச்செய்தலால், விரும்பத்தக்க இதர அம்சங்களிலும், துரைத்தனத்தாருக்கும் ஜனங்களுக்கும், நெருங்கிய சேர்க்கையை வளர்க்கிறதற்குச் சமயங்களை உண்டுபண்ணுகிறது.

துரைத்தன ஒத்தாசை கூடாதென்று மறுத்து அதன் குணதோஷங்களை எடுத்துக்காட்டும் மதியூகிகள் இருப்பதுபோல், இதேவிதமாய், இதற்கு முன்னால் இடங்கொடுக்கப்பட்டதைவிட ஜாஸ்தி அளவுக்கு துரைத்தனத்தார் கூட்டு முயற்சியில் தலையிட வேண்டுமென்றுவாதிக்கும் விரகர், உத்தியோகஸ்தரும் உத்தியோக சம்மந்தமில்லாத வருமான பலருளர். அவர்கள் கொள்கை பின் வருமாறு:—இப்போது ஜனக்கூட்டத்தின் ஓரங்களை மாத்திரம் கூட்டுமுயற்சி தீண்டிக்கொண்டிருக்கிறது; இதைவிட ஜாஸ்தி

யாகவும் வேகமாகவும் அபிவிருத்தி வேண்டப்படுகிறது; அதற்காக துரைத்தன உத்தியோகஸ்தர்களின் தொகையை மிகவும் ஜாஸ்திப் படுத்தி இக்கிளர்ச்சியைப் பரவச் செய்வதற்கு துரைத்தனத்தார் விரைவாக நடபடிக்கைகள் நடத்தாவிட்டால், அதன்பலன் சொற்ப மாகவும், அதன் அபிவிருத்தி மெதுவாகவுமேயிருக்கும் என்று அவர்கள் வற்புறுத்திக் கூறுகின்றனர். இந்தக்கருத்திற்கு ஆதார மான அரசிறை முறையையும் துரைத்தனத்தார் அநுஷ்டித்து நடத்தத் தங்களுக்குச் சுதந்திரமில்லையென்று உணர்கிறுர்கள். எல்லாச் சுருசுருப்பையும்ஒரேமையத்தில் கொண்டுபோய் நிறுத்திக் கொள்ளும் ஒரு பெரிய இலாகாவால், நடத்தப்பட்டவேலை, எந்திர இயக்கம் போன்றதும், சந்துஷ்டியற்றதும், சிரத்தைக் குறை வுள்ளதுமாக ஆகிவிடும். ஆயினும், அக்கிளர்ச்சி அதன் சாராம் சத்தில் எப்படியிருக்கவேண்டும்? ஜனங்கள் தாங்களே முக்கிய மாக விரும்பி நடத்தவேண்டும் கிளர்ச்சியாகவிருத்தல் வேண்டும் சுயம் சகாயத்தையும், சுதந்திரத்தையுமே ஆதாரமாகக்கொண்டு அக்கிளர்ச்சி நடத்தப்படுகிறதென்று கூட்டுமுயற்சிக்காரர்களுக்கு இருக்கும் உணர்வை பலகீனப்படுத்தத்தக்க எதையும் நாம் செய்யக்கூடாது. ஆகவே இந்தக் கிளர்ச்சியின் உத்தமக்ஷே மத்தை உத்தேசித்து, துரைத்தனத்தார், இந்த தேசத்துக் கூட்டு முயற்சியை, இராஜ்ய உத்தியோகத் தொகுதியாரால் நடத்தப்பட்ட ராஜகார்யஸ்தர் தொழிலாக ஆகிவிடும்படி இடங்கொடுக்கக்கூடாது.

28. இதன் முடிவுயாதெனில், துரைத்தனத்தார் நடுத்தர மான ஒரு நடபடிக்கையை அநுஷ்டிக்க வேண்டியிருக்கிறது.

பொருள்உதவி, பரிபாலனம், கணக்குச் சோதனை.

கண்காணிப்பு விஷயத்திலும் பொருள் உதவி விஷயத்திலும் உபயோகிக்கப்பட்ட தந்திரம் இதுவே. பொருள் உதவி சம்மந்தப்பட்டமட்டில், துரைத்தனத்தாரின் தலையிடல் இதில் கொஞ்சம் இருப்பது வாஸ்தவமே; ஆயினும், அப்படி இருப்பது மிகவும் சொற்ப அளவிற்கே. பத்து வருஷங்களுக்கு முன்னே கூட்டுமுயற்சி ஆரம்பம் செய்யப்பட்டபோது, புது சபைகளுக்கு

திரவிய சகாயத்தை மிகுதியாகக்கொடுத்து உதவும்படி துரைத்
தனத்தார் தூண்டப்பட்டார்கள். துரைத்தனத்தார்உதவி, தாங்கள்
விரும்பியதுபோல் இல்லாமல், ஒரு நிதானமாக விருப்பதைக்
கண்டு, மட்டுக்கு மிஞ்சின செட்டுச் செய்வதாக நினைத்து குற்றங்
குறைகள் கூறச் சிலர் ஆரம்பித்தனர். ஆனால், நல்ல வேளையாய்
அளவு கடந்ததாராளத்தினால் உண்டாகக்கூடிய தீங்குகள் முந்தியே
எதிர்ப்பார்க்கப்பட்டபடியால், சர்க்கார் ஒத்தாசை இம்மட்டுக்குத்
தான் இருக்கவேண்டியதென்று வரையறுக்கப்பட்டது; மற்ற
தேசங்களில் வரம்பில்லாமல் ஒத்தாசை செய்வதால் அபாயகர
மாயிற்று என்றும், அவ்வித சகாயம் தீமைவிளைக்கும் தானமென்
றும், தெரியவந்திருந்ததினால்தான் ராஜரீக ஒத்தாசை மட்டுப்பட்
டதேயன்றிச் சுக்குச்செட்டித்தனத்தினாலல்ல; ஆயினும், ஆரம்
பப்படித்தரமான சமயங்களில், சங்கங்களை பொதுவான பணச்
சந்தைகளோடு சம்மந்தப்படுத்தலாமென்று எதிர்ப்பார்க்க இட
மில்லாதிருந்ததினால், அங்கத்தினரிடமிருந்து சரிக்குச்சரிபாகம்
நாணயம் பெற்றுக்கொண்டு, சில வரையறைகளுக்கு உட்பட்டுக்
கடன் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. எங்கே சங்
கங்களுக்கு ஒத்தாசை செய்வதற்கு விசேஷ காரணங்களிருந்
தனவோ அப்படிப்பட்ட இரண்டொரு மாகாணங்களில் தவிர,
மட்டுங்கு மிஞ்சி அவ்வித வெளி ஒத்தாசையைச் சார்பாகக்கொள்
ளல் வேண்டாமென்று, ரிஜிஸ்தரார்கள், சபைகள் கடன்பட இடங்
கொடாமல் தடுத்திருக்கிறார்கள்; அது மிகவும் நியாயமேயாகும்.
சர்க்காரிடமிருந்து வாங்கப்பட்ட கடன் தொகையினால் ஏற்பட்ட
முதல், இப்போதிருக்கும் மொத்த முதலோடு ஒப்பிட்டுப்பார்க்கும்
போது நூற்றுக்கு மூன்றுவிகிதம்கூட ஆகவில்லை. இந்தக்கடகன்
ளில்லாவிட்டால், சபைகளில் அநேகம் உற்பத்தியைக்கூட
அடைந்திருக்க முடியாது; வாலிபப்பருவமுள்ள சபைகளைப்
பராமரிப்பதில் ஓர் உபயோகமுள்ள கருத்தை அவைகள் நிறை
வேறச்செய்து வருகின்றன; ஆயினும், மட்டுக்கு மிஞ்சிய ராஜரீக
உதவியை வேண்டாமென்று விலக்கும் ராஜ்யதந்திரம் புத்திசாலித்

தனமான முறையென்று அநுபவத்தில் நடக்கும் சங்கதிகளால் தெரியவருகிறது; இந்த முறையை அநுசரிப்பதினுல்தான், இந்தக் கிளர்ச்சிக்குப் பெரும்பாலும் இயற்கையாய் உள்ள வலிமை மிகுந்திருக்கிறது.

அதேவிதமாக, கண்காணிப்பு, கணக்குச் சோதனை ஆகிய கடினமான அம்சங்களில், யூனியன்கள், ஸென்றிரல் பாங்கிகள் முதலிய அந்தரங்க மநோவர்த்திக் கூட்டத்தாரிடமே முற்றிலும் இந்தக் கடமைகளை விட்டுவிடக்கூடாதென்று தெரிந்தவர்களால் ஒப்புக் கொள்ளப்படுகிறது. இவ்வித உத்தியோக ஸம்மந்த மில்லாத காரியகர்த்தாக்கள் உதவி ஸாத்தியமான வரையில் எவ்வளவிற்குக் கிடைக்கிறதோ அவ்வளவிற்கு விரும்பத்தக்கதே. ஆனுல், இந்தக் கொள்கையை மட்டுக்கு மிஞ்சி அனுஷ்டானத் திற்குக் கொண்டுவந்தால், இந்தக் கிளர்ச்சியின் ஜயத்திற்கே கேடு உண்டாகும். கொஞ்சம் அளவுக்கு துரைத்தனக் கண்காணிப்பு இல்லாவிட்டால், ரிஜிஸ்தரார்களுக்கும் சபைகளுக்கும் இருந்து கொண்டிருக்கும் நெறுங்கிய சம்மந்தம் குறைந்துபோகும். ரிஜிஸ் தரார்கள் வசத்தில் உள்ள விஷய ஞானத்தையே ஆதாரமாகக் கொண்டு அவர்கள் சோதனையே நம்பிக்கைக்குப் பாத்திரமான தென்று நினைக்கும் பொதுஜனங்களுக்கு, அப்படிப்பட்ட பரி சிலனை இல்லாமற்போனல், மெத்த அவசியமாகக் காக்கவேண்டிய தாகிய சபையின் நாணயஸ்திரத்தில் நேரிட்ட பாங்கு விபத்து இந்தப் பராமரிப்புச் செய்யப்படாமல் அலெக்ஷயம் செய்யப் பட்டிருந்தால், ஸமீபத்தில் இந்தியாவில் நேரிட்ட பாங்கு விபத்து களினின்று சபைகள் தப்பித்துக்கொண்டிருக்க முடியாது; நல்ல வேளையாய், சபைகள், இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும், இக் கெடுதலினின்று தப்பித்துக்கொண்டன; மேற் குறித்த பாங்கு ஆபத்துக்களின் விவரங்களை யோசித்துப் பார்ப்பதினுல் தெரிய வருவது யாதெனில், துரைத்தனக் கண்காணிப்பை முழுவதும் வேண்டாம் என்று விலக்கும் எந்த ஏற்பாடும் அநுபோகத்துக்கு ஒத்து வராது என்பதுதான். இதுவுமன்றி, ஒரே இனமாகச்

சேர்ந்த பல சங்கங்களை, அவைகளோடு நாணயச் செலாவணியால் கட்டுப்பட்ட ஒரு மையசபை கணக்குச்சோதனைபண்ணினால், வெளிப்புறத்துக் கணக்கர்களால் நடத்தப்பட்ட கணக்குச் சோதனையைப்போல் அவ்வளவு திருப்திகரமாகப் பொதுஜனங் களால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது; ஏனெனில், அந்த மைய சபையின் நாணயச் செல்வாக்கு தன்னைச் சார்ந்த சங்கங்களி னுடைய நல்ல பேரையே ஆதாரமாகவுடையது. ஆதலால் சபைகளின் ஐவேஜி நிலைமைகளைப் பற்றிய உண்மைகளைரிஜிஸ் தரார்களுக்குத் தெரியப்படுத்தக்கூடிய நம்பிக்கைக்குப் பாத்திர மான ஒரு உத்தியோகக் கூட்டத்தாரால் சங்கங்கள் அடக்கியாளப் பட்டு கணக்குச் சோதனை செய்யப்பட வேண்டியது அவசியம்; இதற்காக ஏற்படுத்தப்படும் உத்தியோக சமூகம் கடன் கொடுத் துதவும் மகா ஜனங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளதாக விருக்கவேண்டும். இந்த உத்தியோகக் கூட்டத்தினருக்கு சர்க் கார் சம்பளம் கொடுக்கவேண்டியது அவசியமில்லை; பரிபாலனம் செய்து கணக்குச் சோதனைபண்ணும் உத்யோகக் கூட்டத்தின ருக்குச் சம்பளப் பட்டுப்பாடாத் தொகைக்காக, சபைக்காரர்கள் துரைத்தனத்தாருக்குக் கடன்பட்டிருப்பதைப் பார்க்கிலும், தாங்களே அத்தொகை கொடுப்பதற்கு உத்தரவாதமாக விருத்தல் நல்லதாகும்; அவ்வுத்தியோகக் கூட்டத்தினருக்கு சபைகள் சம்பளம் கொடுத்து வந்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, உத்தியோக நியமனங்களெல்லாம் ரிஜிஸ்தரார்கள் அங்கீகாரத்தின் மேல்தான் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும், பெரும்பாலும் அவர்கள் பரிபாலனத்தின் கீழிருக்கவேண்டுமென்றும் பொது விதியிருந்தால் அது மெத்த நன்றாகும். இந்த உபாயத்தினு லாவது அல்லது வேறு உபாயத்தினுலாவது மேற்குறித்த இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால், அதாவது, (1) சபை களின் ஐவேஜி நிலைமையைப்பறறி நம்பக்கூடிய உண்மைகளை ரிஜிஸ்தரார்கள் பெறவேண்டுமென்பதும், (2) வெளிப்புறத்துப் பொது ஜனங்கள் சபைகளின், பரிபாலனத்திலும் கணக்குச்

சோதனையிலும் நம்பிக்கை பெறும்படியாய்க் காரியங்கள் நடத்தப்படவேண்டும் என்பதும், சாத்திமானல், இவ்வேலையில் நியமிக்கப்படும் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் தொகை கூடிய மட்டும் குறைவாக விருப்பது, ஒரு சௌகரியமாகவிருக்கும்; துரைத்தனத்தார் நேரில் உபயோகப்படுத்தும் காரியகர்த்தர்களின் தொகையை எவ்வளவு சிறிதாகச் செய்யலாமோ அவ்வளவு சிறிதாகச் செய்ய ஒவ்வொரு பிரயத்தனமும் செய்யப்பட்டிருக்கிறது.

ஜில்லா உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ள வேண்டிய மாதிரி.

29. இக்கூட்டுமுயற்சிங்கிளர்ச்சி ஜனநாயக முயற்சியாகவிருக்கவேண்டியது முக்கிய சங்கதியாகவிருந்த போதிலும், கூட்டு முயற்சியோடு நேரில் சம்மந்தப்பட்ட கோஷ்டிக்குப்புறம்பான துரைத்தன உத்தியோகஸ்தர்கள் விலகி நிற்க வேண்டுமென்பது எவ்விதத்திலும் ஊகிக்கத்தக்க சங்கதியல்ல. இதற்கேயென்று தனித்து ஏற்படுத்தப்பட்ட திறமையாளர் முயற்சியாலேயே ஆரம்பப்பிரயத்தனங்களும் சோதனை விவரங்களும் நடக்கவேண்டியதென்பது உண்மையானாலும், சபையினுடைய அந்தரங்க பரிபாலனத்தில் தலையிடுவது ஜில்லா உத்தியோகஸ்தர்களின் கடமைகளில் எந்த பாகமும் அன்று. ஜில்லா வேலைக்குப் புறம்பான தனித்த சோதனை முயற்சிகளாகமட்டும் கூட்டுமுயற்சிச்சபைகள் ஆதியில் இருந்ததுபோல் இப்போது இராதபடியாலும், அவைகளாலுண்டாகும் அர்த்த லாபங்களைத்தவிர ஜனங்களின் க்ஷேம அபிவிருத்தியோடு நெருங்கிய சம்மந்தமுள்ள ஒரு சக்தியாக ஆய்விட்டபடியாலும், இக்காலத்திலும் வருங்காலத்திலும் நன்மைக்கோ தீமைக்கோ மிகவும் வல்லமையுள்ள சக்தியாய் விட்டபடியாலும், ஜில்லா மேலதிகாரி இந்தக் கிளர்ச்சியினின்று தன்னைப்பிரித்துக்கொண்டு நிற்கமுடியாது. இதற்கு முற்றிலும் எதிரடையாக, அரசிறைச் சட்டங்களை நன்கு அறிந்திருத்தல் மேலதிகாரிக்கு எப்படி அவசியமோ அதே மாதிரி கூட்டுமுயற்சித் தத்துவங்களையும் அநிஷ்டானங்களையும் பற்றிய அறிவும் அவ்

வளவே அவசியமாய்விட்டன; சபைகளுடன் நெருங்கிய பழக்கத்தை வைத்துக்கொண்டிருப்பது மேலதிகாரியின் கடமை; தன் அனுதாபக்குறைவால் ஸபைகள் துர்ப்பலத்தை அடையும்படிக்காவது, விழிப்பான பார்வைக்குறைவால் விரும்பத்தகாத மார்க்கங்களில் செல்லும்படிக்காவது, விடாமல் பாதுகாக்க வேண்டியது. தானே நேரில் எவ்விதத்திலும் போதனைசெய்து கொண்டு திரியும் உபதேசியாகாமல், தன் கீழ் உத்தியோகஸ்தர்கள் மூலமாக அல்லாமல், தானே நேரில் இக்கிளர்ச்சி அபிவிருத்தியாகி வருகிற விவரத்தை தெரிந்துகொள்ளல் வேண்டும். சபைகள் ரூபமாகத்தங்களை அமைத்துக் கொண்டிருப்பவர்களைத் தைரியப்படுத்தி அவர்களுக்கு உதவிபுரிதல் வேண்டும்; செல்வமும் செல்வாக்குமுள்ள மனிதர்களின் சிரத்தையையும் ஆதரவையும் இக்கூட்டுமுயர்ச்சிக் கிளர்ச்சிக்குக் கிடைக்கும்படி செய்வித்தல் வேண்டும்; சககார முயர்ச்சியால் உண்டாகும் நன்மைகளை அடைய விரும்பி முயல்வோருக்குத் தகுந்த புத்திமதி சொல்லிக்கொடுத்து ஒத்தாசை செய்தல் வேண்டும். இப்படிச்செய்தல் எவ்விதத்திலும் கூட்டுமுயர்ச்சியை துரைத்தன அங்கமாகச் செய்தலாய் விடமாட்டாது. இக்கிளர்ச்சி ஜயமடைய வேண்டுமாகில், ஜனங்கள் முயற்ச்சியாலேயே ஆகவேண்டுமென்கிற அவசியமான உண்மைக்கு விரோதமாகாது அப்படி வழி நடத்துவதாலும் தைரியப்படுத்துவதாலும் இக்கிளர்ச்சி மேன்மேலும் பலத்தில் அபிவிருத்தியடையும்; எவ்வளவுக்கெவ்வளவு ஜில்லா உத்தியோகஸ்தர் சபைகளோடு ஒட்டுப்பற்று வைத்துக் கொண்டிருக்கிறாரோ அவ்வளவுக்குஅவ்வளவு தனது நித்தியப்படி வேலையில் தனக்கு ஒத்தாசை செய்வதற்கேற்ற புதிது புதிதான மிகவும் பிரயோஜனகரமான சகாயம் கைக்குக்கிட்டியிருப்பதாகக் கண்டு கொள்வார்.

ஜில்லா அரசாக்ஷிக்கு உட்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் எவ்வளவிற்கு எந்தமாதிரி கூட்டுநணய சபைகளை உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதையும், ஜில்லாவின் மெய்யான பொது

ஜன அபிப்பிராயத்தை நிஷ்கருஷித்து அறிந்து கொள்வதற்கு எம்மட்டிற்கு அவைகள் உபாயங்களைத்தரக்கூடியவைகள் என்பதையும், பிரதமக்கல்வி, நாட்டுப்புறத்து சுகாதாரம், நோய்தீர்க்கும் உதவி, முதலிய வழிகளில் எம்மட்டிற்கு அவைகள் தாங்களாக ஒத்தாசை செய்யலாம் என்பதைப்பற்றியும், அருந்தற் காலத்திலும் பஞ்சக்காலத்திலும், வெகு ஜனங்களை ஏககாலத்தில் பீடிக்கும் ரோகங்கள் பரவியிருக்கும் சமயங்களிலும், எவ்விதமாக இவர்கள் சகாயத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதைப்பற்றியும், இவ்விதப்பயிர்ச்சியினால் ஒருமெய்யான கிராம அரசாட்சி முறை வளர்ச்சியடைய கூடுமா என்பதைப்பற்றியும், நிதானித்துக் கொள்ளவேண்டியவர்கள் அந்தப் பிரதேசத்து துரைத்தனத்தார்கள்தான்.

30. இந்தியாவின் கூட்டுமுயற்ச்சிக்கிளர்ச்சி பல துரைத்தன உத்தியோகஸ்தரின் முயற்சியால் அதிக நன்மையை அடைந்திருக்கிறது; கூட்டு முயற்ச்சியின் பொருட்டு அவர்கள் அதிக காலத்தையும் தங்கள் புத்தி யூகத்தை செலுத்திக் கிளர்ச்சியை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள்.

ஸர்கார் உத்தியோகஸ்தராலும் உத்தியோகஸ்தர் அல்லாதவராலும் கிடைக்கக்கூடிய உதவி.

ஆரம்பப்பிரயத்தன காலத்தில் பல மகாணங்களிலும் சபைகளுக்கு வழிகாட்டிநடத்திய நன்குமதிப்பிற்குப்பாத்திராகிய ரிஜிஸ்தரார்கள் என்கிற உத்தியோகத்தொகுதியோர்க்கு விசேஷமான நன்றி யுணர்வு காட்டுதல் எல்லோர்க்கும் கடமையாகும். பெரும்பாலும் இவ்வுத்தியோகஸ்தர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்ட அயன் அஸாமிகளாக இருந்து வந்திருக்கின்றனர். அவர்களில் அநேகர் ஐரோப்பாவில் கூட்டுமுயற்சியை விசேஷகவனத்துடன் ஆராய்ச்சி செய்து வந்ததினால் தங்கள் கடமைகளுக்கு ஏற்றவர்களாய்த் தங்களைத் தயார் செய்துகொண்டிருக்கின்றனர். இந்த உத்தியோகக்கூட்டத்தைச்சேர்ந்த யாவத்துப்பேர்களும் தங்கள் சிறந்த ஊக்கத்திற்குச் சமதையான சிறந்த பொறுமையுடனும் தங்கள்

அலுவல்களை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சுயப் பிரயத்தனத்தினாலேயே அதிகம் ஸாதித்திருப்ப தோடுகூட, மற்றவர்களும் அதிக உத்ஸாகத்தோடு உதவி செய்ய முன்னிட்டு வரும்படி தூண்டியு மிருக்கின்றனர்; ரிஜிஸ்தரார் களின் பிரயத்தனங்களுக்கு அதிக ஸாமர்த்தியத்துடன் சகாயம் செய்துகொண்டு வந்திருக்கிற ஸர்க்கார் உத்தியோகஸ்தர் அல்லாத பெருங்கூட்டத்தினருக்கும் இந்தக் கிளர்ச்சி நன்றியுணாக் கடமைப் பட்டிருக்கிறது. பலவகைப்பட்ட அபிப்பிராயத்தின ரும் பலவித மதத்தினருமாகிய அநேக கனவான்கள் இக் கிளர்ச் சிக்கு உதவி செய்யும் பொருட்டு முன் வந்து கூட்டு முயர்ச்சியின் கருத்துக்களையும் அதன் நன்மைகளையும் பற்றிய அறிவை அதிக விஸ்தாரமாகப் பரவச்செய்தும், புதுசபைகளை ஆரம்பம் செய்தும், தாங்கள் அங்கத்தினராய் அமர்ந்துள்ளசங்கங்களின் கார்யங் களுக்கு ஓயாத கவனம் செலுத்தியும், இவ்வாறு பலவிதங்களில் ஸகாயம் செய்திருக்கின்றனர். வியாபார சபைகளிடத்தினின்றும் பெரிய ஸவகாரிகளிடத்தினின்றும், தோட்டச் சுவான்காரர் களிடத்தினின்றும், ஜமீன்தார்களிடமிருந்தும், குடியானவர் களிடமிருந்தும், வக்கீல்களிடமிருந்தும், தங்கள் அலுவல் களினின்றும் விலக்கிக்கொண்ட ஐரோப்பியரும் இந்தியருமாகிய பழய ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடமிருந்தும், பல இனத்தவ ராகிய கிருஸ்துவ மதபோதகர்களிடத்திலிருந்தும், ரெக்ஷண்ய சைநியத்தார் என்கிற கிருஸ்துவக் கூட்டத்தாரிடமிருந்தும், இன்னும் இவ்வாறு பலவிதச் சங்கத்தினரிடமிருந்தும் வகுப்பின ரிடமிருந்தும் பலவித ஒத்தாசைகள் பலதிக்குகளிலுமிருந்து கிடைத்துக்கொண்டு வந்திருக்கின்றன. இப்படிப் பல மையங் களினின்றும் தூண்டப்பட்ட சிரத்தையினாலும், வெளியிடப் பட்ட உத்சாகத்தினாலும், இக்கிளர்ச்சி மிகவும் வலிமை பெற்றி ருக்கிறது; இந்த விசேஷ்மான சோதனை முயற்ச்சி, ஆரம்பத்தில் துரைத்தனத்தாருக்கும் அவர்களின் உத்தியோகஸ்தருக்கும் இத் தகைய ஸகாயங்கள் மிக்க தென்புதரும் காரணமாக விருந்து

வந்தன. இந்த ஸஹகார தர்மத்திற்கு உழைத்த உத்தியோகஸ்தர் அல்லாதாரான சிலருக்கு சர்க்காரின் நன்கு மதிப்பிற்கு அறிகுறிகளான விசேஷ கௌரவங்கள் அளிக்கப்படுகின்றன; ஆனால் எவர்களுடைய வேலை நன்கு கவனித்துச் சிறப்புச் செய்யப்படவில்லையோ, உணரத் தக்கவாறு சிறப்புப்படுத்தி முடியாதோ, அப்படிப்பட்டவர்கள் தொகையே மிகுதி; இவர்கள் முயற்சியோடு கூடிய வணக்கத்துடன் உழைத்துத் தங்கள் தேச க்ஷேமத்திற்கு எது மிகவும் நல்லதோ அத்தன்மையான வேலையைச் செய்தோம் என்கிற மனத்திருப்தியைத்தவிர வேறொரு பல ப்ராப்தியையும் இச்சிக்காமல் நாட்டிற்குக் கைங்கரியம் செய்து வந்திருக்கின்றனர். இவர்களுக்கும், மற்றவர்களுக்குச் செலுத்தியது போலவே, நாட்டின் நன்மையை நெஞ்சில் வகித்திருக்கும் துரைத்தனத்தார், தங்கள் மனப்பூர்த்தியான அங்கீகாரத்தையும், வந்தனத்தையும் செலுத்துகிறார்கள்.

தொகுப்புரை.

31. கூட்டு முயற்சியின் முதல் பத்து வருஷங்களுக்குள் உண்டாயிருக்கும் அபிவிருத்தி மிகவும் அதிசயிக்கத்தக்கதே; இந்தக் கிளர்ச்சியில் மிகவும் உத்ஸாகமும் நம்பிக்கையும் உள்ளவர்கள்கூட இவ்வளவு நன்மை விளையுமென்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அற்ப ஆரம்பங்களினின்று இந்தக் கிளர்ச்சி, ரிஜிஸ்தரார்கள் என்னும் உத்தியோகஸ்தர்களின் யூகம்மிருந்த வழி நடத்துதலால் ஸம்ரக்ஷிக்கப்பட்டு, துரைத்தன உத்தியோகஸ்தர் அல்லாதாரின் கார்ய சகாயக் கூட்டத்தாரால் உதவி செய்யப்பட்டு வேகமாக அபிவிருத்தியடைந்து, இப்போது, ஜனங்களிற் பெரும் பாகத்தினருக்கு ஒரு ஜீவசக்தி போன்ற ஆதாரமாகிவிட்டது. மட்டுக்கு மிஞ்சிய துரைத்தன உதவி வேண்டாமென்று நீங்கப்பட்டிருப்பதையும், சங்கங்களின் தொகைகளை வேகமாகப் பெருக்குதலை முக்கிய நோக்கமாக வைத்துக்கொள்ளாமல், கிளர்ச்சியின் அபிவிருத்தியை அபாயமில்லாத வரம்புகளுக்கு உட்படுத்தி நடத்துதலையே முக்கி

யக் கருத்தாகக்கொண்டு கிளர்ச்சி நடைபெற்று வருகிறது என்பதையும் யோசித்துப் பார்க்குங்கால், ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி ஆச்சரியகரமாகவே யிருக்கிறது. குறுகிய வரம்புகளுக்குள்ளே துரைத்தனத்தார் ஒத்தாசையை நிறுத்திக் கொண்டிருக்கும் ராஜ்ய தந்திரம் நியாயமானதே என்று ருஜுவாகி விட்டது; இதனுல் ஸ்வயம் ஸகாய சக்தியும் ஸ்வதந்திரமும் அபிவிருத்தியாகி யிருக்கின்றன. இதனுடன்கூட, அபிவிருத்தியைத் தூண்டுவதில் துரைத்தனத்தார் உபயோகப் படுத்திக்கொண்டு வந்திருக்கிற எச்சரிக்கை ஜாக்ருதை இவைகளின் பயனுக, உண்டான வளர்ச்சி, இயற்கையானதாயும், ஆரோக்கியமானதாகவும் இருக்கிறது. வருங்காலமும் சககாரக் கிளர்ச்சிக்கு ஜயகரமாகவிருக்கும் என்பதற்கு, வேண்டுமளவுற்கு நற்குறிகள் காணப்படுகின்றன; சங்கங்களின் சேர்க்கைகளோடு ஒன்றுபட்டுழைப்பதினுலும், வாவர அதிகப்படியாகக் கிடைத்துக்கொண்டு வருகிற துரைத்தன உத்தியோகஸ்தர் அல்லாதார் உதவியினுனும், மேன்பார்வையாலும், முன்னிலும் அதிகப்படியான வளர்ச்சியை எதிர்பார்க்கலாம் எனினும், சென்ற காலத்தில் காட்டப்பட்ட எச்சரிகையான ஜாக்ருதையும் அடங்கி நடந்துகொள்ளுதலும் தொடர்ச்சியாக இன்னமும் இருந்துகொண்டிருக்கவேண்டும்.

நீதி சம்மந்தமுள்ளவைகளும் அர்த்த சம்மந்தமுள்ளவைகளுமான அநேக விஸ்தரித்த நன்மைகளைக் கூட்டு முயற்சி தன்னுடைய தொடர்பில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது; இந்த நன்மைகள் முதல் முதல் முக்கியமாக எளிய விவசாயத் தொழிலாளிகளுக்கே கிடைக்கவேணுமென்று கருதப்பட்டிருக்கின்றன; ஆயினும் அப்பயன்கள் அவர்களுக்கு மாத்திரந்தான், மற்றவர்களுக்கு வேண்டாமென்று விலக்கு இல்லை. இவ்வித நன்மைகள் இன்னமாதிரி சபைகளால் மாத்திரம் உண்டாகின்றனவென்று வரையறுத்துக் கூறுதல் சாத்தியமில்லை; இந்தியக் கூட்டுறவு முயற்சியில் முக்கியமாகக் கவனிக்கத் தக்க அம்சம்

யாதெனில், சமயத்துக்குத் தக்கபடி பொருந்திக் கொள்ளும் தன்மையே. நாட்டுப் புறத்துச் சபைகள் ஒன்றோடொன்று உணர்வுடையவைகளாக இருந்துகொண்டு ஏகோபித்த சாதகங் களை லெக்ஷயமாய் வைத்துக்கொண்டிருக்கிற வரையில், வரை யறுக்காத உத்தரவாதத்தைத் தமக்கு முக்கிய லெக்ஷணமாக வைத்துக்கொண்டு தொழில் செய்து வருமளவும், அங்கத்தினர் களுடைய தனி லாபத்தை மட்டுக்கு மிஞ்சி மேன்மைப் படுத்தா திருப்பதற்கு தகுந்த முன் ஜாக்ருதைகள் செய்யப்பட்டு வருகிற வரையில், ஏதாவது ஒருவிதச் சபையை மாத்திரம் நிதர்சனமாக வைத்துக்கொண்டு அடிமைத்தனமாக அதை ஒட்டி நடக்க அவசிய மிருக்காது. நாணயக் கடன் சபைகளின் பரிபாலன விவரங் களில், நீடித்த அநுபோகத்தின் பயனாகக் கிடைத்திருக்கும் அறி வாகிய சில உண்மைகள் உண்டு; அவைகளிற் சில பின்வருமாறு.

(a) கடனுக்கு ஜாமீனாக நிலம் முதலியவைகளை பந்தகம் வைத்தல் பெரும்பாலும், அங்கீகரிக்கப்படவில்லையென்றாலும், சில இனங்களில் அவைகள் உபயோக முள்ளவைகளாயும் இருக் கின்றன;

(b) ஒரு அங்கத்தினன் ஒரு சங்கத்தில் சேர்க்கப்பட்ட பிறகு அதற்கு முந்தியே பட்ட கடன்களினின்று அவன் கூடிய சீக்கிரத்தில் விடுவிக்கப்பட வேண்டியது விரும்பத்தக்க ஸங்கதி.

(c) வரும்படி தரக்கூடிய காரியங்களுக்காக மாத்திரம் கட னளிக்கலாம் என்று வரையறுத்துக் கொள்ளுதல் அனுவசியம்.

(d) கூட்டுமுயற்சிக்கு இடைஞ்சலாக எதிர்ப்படுவதான தொழின்முறைக்கு சம்மந்தமான சில விசேஷ நிர்ப்பந்தங்களை துரைத்தனத்தார் நிவர்த்தி செய்வது விரும்பத்தக்க சங்கதியாக விருந்தாலும் மட்டுக்கு மிஞ்சிய சௌகரியங்களைக் கூட்டுமுயற்சிக் காரர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால், சுயம் சகாயம் செய்து

கொள்ளும்தன்மைக்குத் தூண்டுதலை சங்கங்களிடத்திலிருந்து போக்கிவிடுமாகையால், அங்ஙனம் அதிக்ரமித்த உதவியைச் செய்து கொடுத்தல் யுக்தமன்று.

(e) சங்கங்களின் மூலதனம் பல உற்பத்தி ஸ்தானங்களி னின்று கிடைக்கின்றன அல்லவா? அவைகளில் எவை உத்கிருஷ்டமானவை எவை எவை சிறந்தவையல்ல என்று ஒப்பிட்டுப் பார்ப்பதற்குப் பொதுவிதி எதையும் விதிப்பது அசாத்தியமென்று லும், இந்த ஆதாரநிதியில் பெரும்பாகம் சுளுவாக ரொக்கப்பண மாகக்கூடிய ரூபத்திலிருக்கவேண்டியது அவசியம்.

(f) வாங்கின கடன் தொகைகளைக் காலந்தவருமல் திருப்பிக்கொடுப்பது மிகவும் விசேஷமாகக் கருதப்படல் வேண்டும்.

(g) சங்கங்களின் ஆரம்பகாலத்தில் க்ஷேமநிதியாகிய ஆபத்தனத்தை நடைமுதல் பத்து வரவுக்காகப் போட்டுப்புறட்டிக் கொள்வதில் சௌகரியங்கள் இருந்தபோதிலும் அது மேன்மைப் பட்டுக்கொண்டு வருகையில் படிப்படியாகப் பிரத்தியேக நிதியாகப் போட்டுவைக்கப்படவேண்டியது அவசியம்.

சங்கங்கள் அதிகப்பட அதிகப்பட மையநிதிச்சாலைகள் அல்லது அவைகளின் ஸ்தானத்திலுள்ள ஒரு கோஷ்டியின் தலைமையின் கீழ், அவைகளை இனக்கூட்டமாகத் தொகுப்பது அவசியமென்று தெரியவந்திருக்கிறது. சிலமாகாணங்களில் இந்தக்கூட்டத்தொகுதிகள் பல, மாகாணதனசாலையின் தலைமை யின்கீழ்க்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவ்வித தனசாலைகள் இந்தியாவின் ஒவ்வொரு பெரும்பகுதியிலும், காலக்கிரமத்தில் ஸ்தாபனம் பெற்றுவிடக்கூடியவைகளே. இந்த மத்தியநிதிக் கழகங்கள் தனிச்சங்கங்களைப் பொதுப்பட்ட பணச்சந்தையுடன் சம்மந்தமுடையவைகளாகச் செய்கின்றன; இம்மையநிதிச்சபைகள் தங்கள் மிகுதிப்பணத்தை தனிச்சபைகளுக்கு நாணயமாக வழங்குவதற்கு மத்திய இடங்களாகப் பயன்படுகின்றன. இவ்

விதமான மையதனசாலைகளை நிர்வகித்து நடத்துவது அதிகக் கஷ்டசாத்தியமான வேலை. கூட்டுமுயற்சிக் கிளர்ச்சிக்கே ஆபத்து நேரிட்டுவிடாமல் பந்தோபஸ்துச் செய்யவேண்டுமாயின் அக்கிளர்ச்சியின் முக்கியபாகமாகிய மையசபைகள் விசேஷ கவனத்துடன் பரிபாலிக்கப்படல் வேண்டும். இவ்விதக்காரணங்களின் பொருட்டே தனிச்சபைகளைக் கண்காணிப்பதிலும் கணக்குச் சோதனை செய்வதிலும் உறுதியான கவனம் செலுத்தப்படவேண்டும். இந்தக் கிளர்ச்சிக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுக்கலாமோ அவ்வளவைக் கொடுக்க துரைத்தனத்தார்கள் ஆவல் உள்ளவர்களாகவிருந்தபோதிலும், பண சம்மந்தமான காரணங்களின் பொருட்டும், மனிதர் கூட்டுறவின் நன்மையின் பொருட்டும், இச்சபைகள் திறமையான கண்காணிப்பாகிய நன்மையை நிச்சயமாக எப்போதும் அடையும்படியாகச் செய்யும் கடமையினின்று தங்களை விடுவித்துக் கொள்ளமுடியாது. முடிவில் ஜில்லா உத்தியோகஸ்தர்கள், சபைகளின் ஆரம்பமுயற்சிகளிலும் சோதனைகளிலும், விவரமான கவனத்தைச் செலுத்தல் அவசியமில்லாவிட்டாலும், ஜில்லா அரசாட்சியில் புதிய ஒரு அம்சம் ஜீவசக்தி பெற்று முன்னுக்கு வந்திருக்கிறது என்பதையும், புதிய கடமைகளும், புதிய உத்தரவாதங்களும் தங்களின் மேல்வந்து சுமந்திருக்கின்றன என்பதையும், இந்தக் கிளர்ச்சியைப் புத்திசாலித்தனமாகக் கண்காணித்து நடத்தும் பட்சத்தில், ஜனங்களையும் துரைத்தனத்தாரையும் ஒன்று சேர்த்து இணைக்கும் சங்கிலியில் இன்னும் ஒருகணுவாக அமைந்துவிடும் என்பதையும் நன்றாகக் கண்டுகொள்ளல் வேண்டும்.

170489

இப்புத்தகம் வேண்டியவர்கள்

அடியிற்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சேக்ரிடேரி அவர்கள்,

கோவாபரேடிவ் பிரிண்டிங் & பப்ளிஷிங் சோஸைட்டி லிமிடேட்,

கருந்திட்டாங்குடி, தஞ்சாவூர்.